
கல்கி
KALKI
17.12.1967
40 காசு


நிலையற்ற
எதிர்காலத்தை
நீங்கள்
விரும்புவீர்களா
?
ஒருகாலும்
இருக்காது!
கனரா பாங்க் வாடிக்கையாளர்களைப் போலவே, பாதுகாப்பு
உணர்ச்சியை அனுபவிக்கவே நீங்களும் விரும்புவீர்கள்
கனரா பாங்க் வாடிக்கையாளர்கள், திடீரென்று வரும் நோய்கள் அல்லது விபத்துக்களைச் சமாளிக்க எப்பொழுதும் தயாராக இருக்கவே விரும்புகிறவர்கள். அவர்கள், எதிர்காலம் எப்படியிருக்குமோ என்ற கவலையின்றி, நம்பிக்கையுடனும், பாதுகாப்பு உணர்ச்சியுடனும், வசதியாகவும் வாழ விருப்பம் உடையவர்கள். திருமணங்கள், பிறப்புக்கள் போன்ற இன்ப தினங்களிலும், முதுமையிலும் அவர்களுக்கு பணத்தைப் பற்றிய கவலையே கிடையாது: கனரா பாங்க் அளிக்கும் பிரத்தியேகமான பாதுகாப்பு உணர்ச்சியை அவர்கள் என்றென்றும் அனுபவிக்கிறார்கள்.
ஏற்கனவே நீங்கள் கனரா பாங்க் வாடிக்கையாளராக இல்லாவிட்டால், இன்றே அதில் ஒரு சேமிப்புக் கணக்கை ஆரம்பித்து, துள்ளும் நடையையும், கண்ணில் நம்பிக்கை ஒளியையும் தரும் அந்த அற்புத மனநிறைவையும், பாதுகாப்பு உணர்ச்சியையும் அனுபவித்து மகிழுங்கள்.
திரவியசாதனங்கள்
123 கோடிக்கு மேல்
கிளைகள் 240க்கு மேல்
உலகெங்கும் பிரதிநிதிகள்
கனரா பாங்க் லிமிடெட்
பதிவுபெற்ற அலுவலகம்: மேட்ஞயவுல் நிர்வாகம் மங்களூர்
நிர்வாக அலுவலகம்:
112, ஜெயசாமராஜேந்திர ரோடு, பெங்களூர்
SISTA S-CB-19 TAM

1-17-12



MAHARANI

கல்கி


பொருளடக்கம்

பிலவங்க மார்கழி 2 டிச. 17

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே




மானேஜர்: ரொம்ப வருஷமா கல்கத்தாவுக்கு மாற்றல் வேண்டும் எனக் கேட்டுக் கொண்டிருந்தீரே! உங்களை நாளையிலிருந்து கல்கத்தாவுக்கு மாற்றியிருக்கிறது. போகிறீரா?



வில்ஸ் இந்தியா லிமிடெட் ஜெனரல் மானேஜர் திரு வி. ஆர். சிவராமன் அவர்களின் புதல்வர் சிரஞ்சீவி எஸ். சுப்பிரமணியத்துக்கும் சௌபாக்கியவதி **விஜயாவுக்கும்** 8-11-67 அன்று சென்னையில் பாலாஜி கல்யாண மண்டபத்தில் திருமணம் வெகு சிறப்பாக நடைபெற்றது. திருமணத்துக்கும் மாலையில் நடைபெற்ற வரவேற்புக்கும் நண்பர்களும் பிரமுகர்களும் வந்திருந்து மணமக்களை வாழ்த்திச் சென்றனர்.

வாழ்க மணமக்கள்!



அடுத்த உத்தரவு வரை தண்டனை நிறுத்தி வைக்கப் பட்டுள்ளது.
-இந்திராகாந்தி
ஆங்கிலம்
நிஜலிங்கப்பா
எனக்கு ஆட்சேபணை இல்லை
முழுகும் கப்பலுக்குப் புதிய தலைவர்!
PK



தமிழ்த்திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

மலர் 27 □ இதழ் 20

மொழிப் பிரச்னைக்கு விடுமுறை தருக!

"நாசத்தின் விளிம்புக்கே நாடு போய்விட்ட நிலையிலும் ஒரு தனி மனிதனின் தருணமறிந்த ஆற்றலால் விபரீதம் நேராமல் தடுக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் பல உண்டு. அப்படிப்பட்ட ஒரு மனிதர் நம்மிடை இல்லையா?'' என்று ஆங்கில அறிஞர் எட்மண்ட் பர்க் கேட்டார். அவர் அப்படிக் கேட்டதற்கு நூற்றெழுபது ஆண்டுகளுக்குப் பிறகு இன்று நாம் பல பிரச்னைகளில் விபரீதத்தின் விளிம்புக்கு வந்திருக்கிறோம். அவற்றுள் கல்வித் துறையில் ஏற்பட்டுள்ள விபரீதத்தை முக்கியமாகக் குறிப்பிட வேண்டும். ''விபரீதத்தைத் தடுக்க ஒருவரும் இல்லையா?'' என அன்று பர்க் கேட்ட கேள்விக்கு இன்று இந்தியாவின் மேன் மக்கள் அனைவரும் பதில் சொல்ல வேண்டும். விஷயஞானமற்ற சுதேசி பக்தர்களும், அரசியலில் அநுகூலம் பெறுவதற்காக விளையாடி வருபவர்களும் யோசனையில்லாமல் நமது இளைஞர்களின் எதிர்காலத்தை அழிப்பதற்கு நாம் அநுமதிக்கலாமா?

தமிழ்ப் புலவர்களையும் ஹிந்திப் பண்டிதர்களையும் கொண்டு ஸயன்ஸ் நூல்களை எழுதச் செய்துவிடலாம்; அல்லது ஆங்கில நூல்களை மொழிபெயர்த்து விடலாம். ஆனால் பிறகு இந்நூல்களைப் படித்து மாணவர் எழுதிய விடைத்தாள்களை மதிப்பீடு செய்யவும் தமிழ்ப் புலவர்களையும் ஹிந்திப் பண்டிதர்களையும்தான் நியமிக்க வேண்டியதாகும். இதன் விளைவாக, பாடத்தின் பொருளில் உண்மையான அறிவு பெறாமலே, நல்ல தமிழோ அல்லது ஹிந்தியோ எழுதுவதால் மட்டுமே மாணவர்கள் தேர்ச்சி பெற்றுவிட முடியும். பாடத்தை விளக்கும் மொழி எதுவாயினும் சரி, ஸயன்ஸிலும் நுட்பத் தொழிலியலிலுமுள்ள சர்வதேசச் சொற்றொடர்களும் சங்கேதங்களுமாவது அப்படியே நம் நாட்டில் பின்பற்றப்படுவதற்கு நமது 'ஜனநாயகம்' அநுமதிக்கும் என நம்புகிறேன். அறிவை விருத்தி செய்து கொள்வது ஒரு சர்வதேச விஷயமாகிவிட்டதென்பதை நம் நாட்டில் கல்வித் திட்டங்களை வகுப்பவர்கள் கவனிக்க வேண்டும்.

இன்று அதிகாரத்தில் இருப்பவர்கள் நாட்டை அபிவிருத்தி செய்வதாகவும் நமது சுயமரியாதையைக் காப்பதாகவும் நினைத்துக்கொண்டு, உண்மையில் தேசத்தின் எதிர்காலத்தை நாசம் செய்து வருகின்றனர். ஹிந்தியர்கள் தங்கள் மொழியை மற்றவர்கள் மீதும் திணிப்பதால் தாங்கள் தேசத்தில் முக்கியத்துவம் பெற்றுவிடலாம் என்றும் தங்கள் குழந்தைகளின் படிப்புப் பளுவை இலேசாக்கி விடலாம் என்றும் கற்பனை செய்து கொண்டிருக்கிறார்கள். உண்மையில் ஆங்கிலத்தை அகற்றி ஹிந்தியைப் புகுத்துவதால் ஹிந்தியர்கள் தங்களது முக்கியத்துவத்தை இழப்பதற்கும், தங்கள் குழந்தைகளின் கல்வி பாழாவதற்குமே வழி தேடிக் கொள்கிறார்கள். இவ்வாறு நான் சொல்லும்போது, என்னை ஓர் ஆங்கில வெறியன் என்றும், நான் பாரபட்சத்துடன் பேசுகிறேன் என்றும் ஹிந்தித் தலைவர்கள் எண்ணக் கூடும். இந்தியாவுக்கு ஆங்கிலத்தால் நன்மை இல்லை என்றால் நான் அந்த மொழிக்காக வாதிடுவேனா? ஆங்கிலம் **இந்தியர்களாகிய நம் அனைவருக்**குமே, தெற்கேயுள்ளவர் மட்டுமின்றி வடக்கேயிருப்பவருக்குமே, நன்மை செய்யும் என்று நான் உறுதியாக உணர்வதால்தான், அம்மொழிக்காக விடாமல் வாதம் செய்கிறேன்.

நம்மில் வடக்கேயிருப்பவர், தெற்கேயிருப்பவர் எல்லோரும் ஆங்கிலம் படிக்க வேண்டும், அனைவருக்கும் ஆங்கிலத்தில் நல்ல ஞானம் இருக்கவேண்டும் என்று ஒப்புக் கொள்ளப்படுகிறது. போதிக்கப்படும் விஷயங்களிலும், கற்கப்படும் விஷயங்களிலும் ஒரு மொழியை ஸ்தூலமாக இணைத்தாலன்றி அம்மொழியை நன்கு பயிலமுடியாது. தாய்மொழி எனப்படும் மொழியைக் கூட ஒரு குழந்தை கற்பது ஸ்தூலமான விஷயங்களைக் கொண்டுதான். இது எந்த மொழிப் பயிற்சிக்கும் பொது விதியாகும். வாஸ்தவத்திலுள்ள ஸ்தூலமான விஷயங்களை விட்டுவிட்டு,

இலக்கணத்தைக் கொண்டு மொழியை மட்டும் தனியாகப் பிரித்துக் கற்க முயல்வது தோல்வியிலேயே முடியும். வெளி நாடு ஒன்றில் ஒருவர் சிறிது காலமே தங்கினாலும் கூட, அந்நாட்டின் மொழியை எளிதில் உபயோகிக்க அறிவு பெறுவதைப் பார்க்கிறோம். ஸ்தூலமான பொருட்களோடு மொழி தொடர்பு கொண்டிருப்பதாலும், ஸ்தூலமான பொருட்களை முன்வைத்து அது மொழியப்பட்டு நாம் கேட்பதாலுமே இது சாத்தியமாகிறது. ஆனால் நடைமுறை விஷயங்களுக்குச் சம்பந்தமின்றிச் செய்யப்படும் மொழிப் போதனை மிகவும் மெதுவாகவே முன்னேற முடியும். ஸயன்ஸ் பாடங்களை ஆங்கில மொழிப் போதனையில் பெறுகிற மாணவர்கள் அந்தப் பாடங்களில் தேர்ச்சி பெறுவதோடு மட்டுமின்றி ஆங்கில மொழியிலும் தேர்ச்சி பெறுகிறார்கள் என்று ஆசிரியர்கள் அழுத்தமாகச் சான்று கூறுகிறார்கள்.

இதெல்லாம் ஒருபுறம் இருக்கட்டும். ஆங்கிலத்தின் மூலமாக அன்றி இந்தியாவின் மேன்மக்களையெல்லாம் ஒரு தேசிய அமைப்பாக ஒன்று கூட்டுவதற்கு நாம் வேறு சாதனம் கண்டு பிடிக்க முடியுமா? ஆங்கிலம் ஒன்றே இன்று அறிவாளிகளை ஒரு சமூகமாக இணைக்கிறது என்று எவரும் ஒப்புக் கொள்வார்கள். மொழிப் பிரச்னை என்பதைப் படிப்பாளிகளுக்கும் படிப்பற்றவர்களுக்குமிடையே ஒரு வகுப்புச் சண்டையாக்குவது நல்லதல்ல.

ஆங்கிலம் படிக்காத பொதுமக்கள்—எதிர்காலத்திலும் ஆங்கிலம் படிக்காமலிருக்கக் கூடிய பொதுமக்கள் — ஏராளமாக இருக்கிறார்கள் என்பதையே ஹிந்தித் தலைவர்கள் குறிப்பிட்டுக் காட்டி வருகிறார்கள். இந்த மக்களில் ஹிந்தி பேசாத பகுதியில் உள்ளவர்களுக்கு ஹிந்தியும் தெரியாது என்பதைக் கவனிக்க வேண்டும். அவர்கள் ஒருபோதும் ஹிந்தி படிக்க வேண்டும் என்று நாட்டம் கொள்ளப் போவதுமில்லை. இந்தியாவின் ஐக்கியம் என்பது அதன் அறிஞர் சமூகத்தின் ஐக்கியத்தைச் சார்ந்ததுதான். இந்தியாவில் ஒரு பாதியில் மட்டும் இருப்பவர்களின் பேச்சு மொழியும், இந்தியாவின் ஆட்சி மொழியும் ஒன்றாக இருப்பதால் தேசத்தில் ஒற்றுமை உண்டாகி விடாது. அகில இந்திய ஆட்சி மொழி ஹிந்தியே என்று சட்டம் செய்து விடுவதால் தென்னிந்தியாவிலும் வங்காளத்திலும் உள்ள பொதுமக்கள் பேசும் மொழியும் மத்திய சர்க்காரின் அலுவலக மொழியும் ஒன்றாகிவிடாது. எல்லா மக்களும் பேசும் மொழி ஒன்று இருந்து அதை அரசாங்க நிருவாகத்தின் மொழியாக்குவது நன்மை பயக்கும். ஆனால் மக்களில் பாதிப் பேருடைய மொழிக்கு மட்டும் அந்த அந்தஸ்தை அளித்தால் அது தேசத்தைப் பிளந்து விடும். இது வெளிப்படை.

இதுவரை ஆங்கிலம் ஆட்சி மொழியாக இருந்த போதிலும் சர்க்கார் அலுவலகங்களில் பிரதேச மொழிகள் தாராளமாக உபயோகிக்கப்பட்டு வந்திருக்கின்றன. ஏராளமான பொதுமக்களுக்குத் தெரிய வேண்டிய விஷயங்களிலும், தனிப்பட்டவர்கள் குறித்த விவகாரங்களிலும் கூடப் பிரதேச மொழிகள் பெருமளவில் உபயோகிக்கப்பட்டு வந்துள்ளன. ஆங்கிலத்தை இன்றைய ஸ்தானத்திலேயே நீடிப்பதால் இந்த ஏற்பாடு எவ்விதத்திலும் எடுபடாது, பலவீனமும் அடையாது.

ஹிந்தியை ஆட்சி மொழியாக்குவது பற்றிய ஷரத்து அரசியல் சாஸனத்தில் அவசரமாகச் சேர்க்கப்பட்டது. தேசம் முழுவதும் இந்த அம்சத்தைப் பூரணமாக விவாதிக்காமலே இவ்விதி சாஸனத்தில் இடம் பெற்றது. அதை அமல் செய்ய வேண்டும் என்று ஹிந்தித் தலைவர்கள் ஆக்ரோசமாக வற்புறுத்துவதோடு கல்வித் துறைக்கும் விஸ்தரிக்க வேண்டுமென்கின்றனர். துரதிருஷ்டவசமாக இம்முயற்சி வெற்றி பெறுமாயின், இதனால் இந்தியாவின் முன்னேற்றமும் ஐக்கியமும் பின்னுக்குத் தள்ளப்படும். எந்தப் பழைய நிலையிலிருந்து நாம் வெகுவாகச் சிரமப்பட்டு இன்றுள்ள ஸ்தானத்தை அடைந்திருக்கிறோமோ அந்தப் பழைய நிலைக்கே மீண்டும் செல்வோம்.

கல்வியிலும், நிர்வாகத்திலும் மொழி குறித்துக் கிளம்பியுள்ள சர்ச்சைகளெல்லாம் ஓயவேண்டுமானால் மொழிப் பிரச்னைக்கு விடுமுறை தந்துவிட வேண்டும். மொழிப் பிரச்னையை இப்போது எடுத்துக் கொள்ளாமல், நடைமுறையை நீடிப்பதால் தேசத் தலைவர்களுக்கு அமைதியாகவும், உபயோமாகவும் இவ்விஷயத்தைச் சிந்திக்க அவகாசம் கிடைக்கும். ஆனால் அரசியல் சூழ்நிலையும், ஏதோ ஒரு தரப்பில் நிற்பதால் கிடைக்கும் தற்காலிக லாபங்களும் இந்த விவேகமான போக்குக்கு வழி விடுமா என்பதே கேள்வி.

('ஸ்வராஜ்யா'வில் ராஜாஜி எழுதியது)

அட்டைப்பட விளக்கம்

மால் மருகனுக்கொரு மாலை

திருக்கார்த்திகை வருகிறதல்லவா? எனவே கார்த்திகேயனும் நம் அட்டையிலே வந்திருக்கிறான், அருள் பாலிக்க. மயிலோனிடத்தில் மயல் கொண்ட அந்த மங்கை மலர் மாலை தொடுக்கிறாள். அந்த மாலைக்கு மேல் வாடாத இன்னொரு மாலை உண்டு. 'செஞ்சொல் மாலை' என்று அருணை முனிவர் குறிப்பிட்ட பாமாலை அது.

வீரத் திருவிழிப் பார்வையும் - வெற்றி வேலும் மயிலும் என் முன்னின்றே - எந்த
நேரத்திலும் என்னைக் காக்குமே - அன்னை நீலி பராசக்தி தண்ணருட் - கரை
ஓரத்திலே புணை கூடுதே - கந்தன் ஊக்கத்தை என்னுள்ளம் நாடுதே - மலை
வாரத்திலே விளையாடுவான் - என்றும் வானவர் துன்பத்தைச் சாடுவான்

என்று பாடி, தீப மங்கள ஜோதியான ஆறுமுகனைத் திருவிளக்குத் திருநாளில் வழிபடுவோம்.

இந்திய சர்க்காரின் அழைப் பின்பேரில் ஒன்பது பிரபல அமெரிக்கப் பத்திரிகை நிருபர்கள் இந்தியாவில் சுற்றுப் பயணத்துக்கு வந்தனர்.

சார்லஸ் பார்லெட் ('சிகாகோ ஸன் டைம்ஸ்'), பீடர் லிஸாகோர் ('சிகாகோ டெய்லி நியூஸ் ஸர்வீஸ்'), ஜான்ஸன் ('டல்லாஸ் டைம்ஸ்'), ரிசார்ட் ஸ்ட்ரௌட் ('கிறிஸ்டியன் ஸயன்ஸ் மானிடர்'), ஆஸ்கர் நவ்மான் ('ஜர்னல் ஆஃப் காமர்ஸ்'), லியான் ஆஸாரன் ('டென்வர் போஸ்ட்'), வில்லியம் கே. வ்யான்ட் ('ஸெயின்ட் லூயி போஸ்ட் டிஸ்பாட்ச்'), ஜான் ஸெய்கென் தேலர் ('டென்னஸியன்') மில்டன் எல். ஹோல்ட் ('விசிடா ஈகில்ஸ் பீகன்') ஆகியோர் அடங்கிய இக் குழுவினர் கல்கி அலுவலகத்தில் தலைவர் ராஜாஜியைச் சந்தித்து நீண்ட நேரம் அளவளாவினர். அவர்களை ராஜாஜி வரவேற்பதையும், அவர்களுடன் உரையாடுவதையும், பின்னர் விடை தருவதையும் இங்கு காண்கிறோம்.









ராஜாஜியின் கருத்துக்கள்

பேர்மிட் — லைசென்ஸுகள் அற்ற ராஜ்யம் பிறக்க வேண்டும் என்பது தவிர, என் பிறந்த நாளுக்காக நான் அளிக்கக்கூடிய செய்தி எதுவுமில்லை.

ஃ ஃ ஃ

'கைத்தறித் தொழிலுக்கு அரசாங்க உதவி அளிப்பதற்கில்லை; மெல்ல மெல்ல அத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களை வேறு தொழில்களில் திருப்ப வேண்டும்' என்று தமிழக மந்திரிகள் சொன்னதாகப் பத்திரிகைகளில் படித்ததும் சங்கடம் அடைந்தேன். இத் தொழிலின் முக்கியத்துவத்தை அவர்கள் உரிய அளவுக்குப் புரிந்துகொள்ளவில்லை என்றே அஞ்சுகிறேன். வேறு தொழில்கள் எடுத்துக் கொள்ளக் கூடிய அளவைவிட கைத்தறித் தொழிலாளரின் தொகை அதிகமாகும். உணவு உற்பத்தித் துறைக்கு அடுத்தபடியாக, நம் ராஜ்யத்தில் மிக அதிகமான ஆணும், பெண்ணும் ஈடுபட்டிருப்பது கைத்தறித் தொழிலில்தான். இவர்களைவிட ஆலைகளிலும் விசைத்தறிகளிலும் உள்ள தொழிலாளர்கள் மிகமிகக் குறைந்த எண்ணிக்கையினரே. கைத்தறியாளர்களது பிரச்சினையைத் தீர்க்கச் செய்ய வேண்டியது என்னவெனில், வேஷ்டி புடவை உற்பத்தி முழுவதையும் கைத்தறிக்கென்று விட்டுவிடுவதுதான். தைத்துப் போடும் உடுப்புகளுக்கான துணிகளை ஆலைகளுக்கும் விசைத் தறிகளுக்கும் விடலாம். திடம், நேர்த்தி, தோற்றம், மக்களின் ரசனை, மரபு எல்லாவற்றிலும் கைத்தறித் துணிகளே ஆலைத் துணிகளைவிடச் சிறந்தவை.

ஃ ஃ ஃ

கூட்டல் கணக்குப் போட்டுச் சர்க்கார் வருமானத்தைப் பெருக்க நினைத்த நிதி மந்திரி, இப்போது அந்த நம்பிக்கை ஈடேறாது என்று கண்டுவிட்டார். எனவே, பற்றாக்குறை பட்ஜெட் போடுவதைத் தவிர்க்க முடியாது என்கிறார். அதாவது ரூபாய் நோட்டுக்கள் மேலும் அச்சடித்துச் செலாவணிக்கு விடப்படும்; ரூபாயின் மதிப்பு மேலும் குறையும்; பரம ஏழைகள் உள்பட அனைவருக்கும் வாழ்க்கைச் செலவு உயரும். இதன் விளைவாக அழுக்குப் படாமல் வேலை செய்பவர்கள், கடின உழைப்புச் செய்யும் தொழிலாளர் அனைவருமே அதிகச் சம்பளம் கேட்டுக் கிளர்ச்சி செய்வார்கள். சர்க்காரின் செலவு உயரும்; மேலும் பணம் தேவைப்படும்; ரூபாய் நோட்டு அச்சடிப்பு அதிகமாகும். விஷச் சுருள் அறுந்து போகாமல் ஏறிக் கொண்டே போகும்.

இதற்கிடையில் பாரதப் பிரதமர் ஆஸ்திரேலியா, நியூஜிலாந்து, மலேயா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்குப் போகத் திட்டம் போட்டிருக்கிறார். அவர் போகிற இடமெல்லாம் சிவப்பு ரத்தினக் கம்பளம் விரித்து உபசரிப்பார்கள் என்பதில் ஐயமில்லை. ஏற்கனவே அவர் பெற்றுள்ள உபசரணைக் குவியலில் இவையும் இடம் பெறும்.

ஃ ஃ ஃ

இப்போது கொண்டுவரப் பட்டிருக்கும் ஆட்சி மொழி மசோதா, ஒன்று அரசியல் சாஸன ஷரத்தை மாற்றுவதாக இருக்க வேண்டும், அல்லது மாற்றாமலே இருக்க வேண்டும். மாற்றாமல் இருப்பதாயின் ஹிந்தியை ஆட்சேபிப்பவர்கள் இம் மசோதாவை ஏற்க முடியாது. சாஸனத்தை இம் மசோதா மாற்றுவதாயின், இதை சாஸனத் திருத்தம் என்ற பெயரில் செய்யாமல் சாதாரண மசோதாவாகக் கொண்டு வந்திருப்பதால், இது சாஸனத்தை மீறுவது என்ற குற்றத்துக்கு இலக்காகும். எனவே இரண்டு பக்கத்திலும் இடைஞ்சலான ஒரு மையத்தில் மசோதா சிக்கிக் கொண்டிருப்பதாக எனக்குத் தோன்றுகிறது. இது சாஸனத் திருத்தமில்லாவிடில் ஹிந்தி பேசாதவர்களை ஏமாற்றுவதற்காகத் தந்த ஒரு வெற்றுப் பரிசேயாகும்.

ஃ ஃ ஃ

ஆங்கிலத்தின் இடத்தில் ஹிந்தியை அமர்த்துவதுதான் தேசத்தின் மிக அவசரமான பிரச்சினை என்று எண்ணுபவர்களுக்கும், ஆங்கிலத்தை அகற்றாமல் நடைமுறையையே நீடிக்க வேண்டும் என்று எண்ணுபவர்களுக்கும் சமரஸம் செய்கிற முயற்சியில் ஸ்ரீமதி இந்திரா காந்தி தம்மால் இயன்றதவ்வளவையும் செய்கிறார் என்று கருதுகிறேன். (இந்தக் கருத்தை வெளிப்படையாகச் சொல்லும் சுவாதீனத்தையும் எடுத்துக் கொள்கிறேன்.)

வட்டத்தைச் சதுரமாக்க முடியாது. ஆட்சி மொழி மசோதா இத்தகைய ஒரு முயற்சிதான். இந்த மசோதாவின் அடிப்படையில் எதிர்காலத்தில் என்றோ ஒரு நாள் ஹிந்தி அகில இந்திய ஆட்சி மொழியாக வேண்டும் என்ற கருத்து உள்ளது. இந்த இறுதி இலட்சியத்தையும், அதற்காக இப்போதிருந்தே ஏற்பாடுகள் செய்யத் தொடங்குவதையும் ஒப்புக் கொள்ளாதவர்கள் மசோதாவையும் ஒப்புவதற்கில்லை. ஆங்கிலம் வேண்டும் என்பவர்கள் அகில இந்திய ஐக்கியத்தைக் காக்க விரும்புகிறார்கள். ஹிந்தி ஆதரவாளர்களோ ஐக்கியம் குலைவதைப் பொருட்படுத்தவில்லை என்று தோன்றுகிறது. அவர்கள் நிர்ப்பந்த முறையை நம்புகின்றனர். எது எப்படியானாலும் சுதேச மொழியை ஆட்சி மொழியாக்கி வெளித் தோற்றத்தில் நம் சுய மரியாதையைக் காப்பதே முக்கியம் என்பது அவர்கள் கருத்து.

இப்போது செய்துகொள்ளக் கூடிய மிகச் சிறந்த சமரச ஏற்பாடு மசோதாவை வாபஸ் பெறுவதுதான் என்கிறேன். 1947ல் சுதந்திரம் பெற்றதிலிருந்து 1951ல் சர்தார் வல்லப பாய் படேல் மறைந்தவரையில் ஆங்கிலத்தை நீடித்தது போலவே இனியும்

நிர்வாகத்தைத் தொடரலாம் என்கிறேன். முதலில் பொருளாதார நிலையைச் சகிக்கக் கூடிய அளவுக்கு உயர்த்துவோம். பிறகு வெளித் தோற்றச் சுயமரியாதையைக் கவனிக்கலாம். அபாயகரமாக நோயுற்று இருப்பவனிடம் அவன் குணமடைந்த பின் என்ன உடை உடுத்தலாம், என்ன பாதரட்சை அணியலாம், என்ன குல்லாய் போடலாம் என்பது பற்றிப் பேசி யாராவது தொந்தரவு செய்வார்களா?

ஃ ஃ ஃ

செய்ய வேண்டியது யாதெனில், ஆட்சி மொழி குறித்த ஷரத்துக்களை யெல்லாம் ரத்து செய்வதற்காக ஓர் அரசியல் சாஸனத் திருத்தம் செய்வதுதான். ஆட்சி மொழியைப் பற்றிய விஷயங்களை அரசியல் சாஸனத்தில் சேர்த்ததே அநாவசியம்.

1935ல் இந்தியாவில் சமஷ்டி சர்க்காரை உருவாக்குவதற்காக இந்திய சர்க்கார் சட்டம் (**Government of India Act**) வகுக்கப்பட்டது. சட்ட வாசகங்களை வகுப்பதில் நிபுணரும், ஒரு காலத்தில் இந்திய சுப்ரீம் கோர்ட் பிரதம நீதிபதியாக இருந்தவருமான ஸர் மாரிஸ் க்வியர் வகுத்த சட்டம் இது. இதில் மொழியைப் பற்றிய ஷரத்து ஏதும் கிடையாது. சாகசமாக ஏதேனும் செய்ய வேண்டும், மாறுதல் எதையேனும் பிரகடனம் செய்ய வேண்டும் என்கிற ஆர்வத்திலேயே நமது சாஸனத்தில் இந்தப் பகுதி சேர்க்கப்பட்டது. இது இல்லாமலே சாஸனத்தை வகுத்திருக்க முடியும்.

ஃ ஃ ஃ

ஆட்சி மொழி மசோதா குறித்து அங்கத்தினர்கள் சுதந்திரமாக வாக்களிக்கக் காங்கிரஸ் அநுமதிக்காது என்று டிசம்பர் 6ந் தேதிப் பத்திரிகைச் செய்தி கூறுகிறது. கட்சிக் கொரடாவின்படிதான் அவர்கள் வாக்களிக்க வேண்டுமாம். ஜனநாயகத்தைக் காப்பதற்கோ, தேசிய முக்கியத்வம் பெற்ற ஒரு பிரச்னையைத் தீர்ப்பதற்கோ இதுவா வழி? ''மொழி என்பது கட்சிப் பிரச்னை அல்ல — பிரதமரின் வேண்டுகோள்'' என்று ஏழாந் தேதி ஹிந்துவில் கொட்டை எழுத்துக்களில் தலைப்புக் காண்கிறது. அப்படியானால் காங்கிரஸ் கட்சி அங்கத்தினர்களைச் சுதந்திரமாக வாக்களிக்க அநுமதிக்காமல் இருப்பானேன் என்று அதிசயித்தேன்.

தமிழ் மக்கள் இம்மசோதாவை விரும்பவேயில்லை. அவர்களது நோக்கில் மசோதா மிகவும் அதிருப்திகரமானது. மனமாற்றம் ஏற்படுத்தாமல் பலவந்தத்தின் மீது என்றேனும் ஒரு நாள் ஹிந்தியைத் தேச முழுவதிலும் நிலைநாட்டும் அச்சுறுத்தலுக்கு உறுதி தருகிறது இம்மசோதா. இதை வாபஸ் பெற வேண்டும். எவ்விதமான தீவிரவாதத்துக்கும் மக்கள் ஆட்படாமல் அவர்கள் புத்தி தெளிந்த பின், சாஸனத்தைத் திருத்தி, இந்தியாவை இரண்டாகப் பிளக்காமல்,

காமகோடியின் கருணைமொழி

முன்காலத்தில் தேசத்தின் ஒரு பகுதியிலே பிரெஞ்சுக்காரர்கள் ஆட்சி நடத்தி வந்தார்கள். மற்றொரு பகுதியிலே பிரிட்டிஷ் ராஜாங்கம். இந்த இரண்டுக்கும் நடுவிலே எல்லையாக ஒரு மலை இருந்தது. பிரெஞ்சுப்பகுதியில் ஒரு பெரிய பணக்காரன் இருந்தான். அங்கு ஏற்பட்ட கலவரத்துக்குப் பயந்து கொண்டு பிரெஞ்சு எல்லையைக் கடந்து பிரிட்டிஷ் பகுதிக்குப் போய்விட வேண்டுமென்று நினைத்தான்.

அதனால் அவன் சொத்தையெல்லாம் தங்கமாகவும் வெள்ளியாகவும் மாற்றிக் கொண்டான். மலை ஏறினான். மலை உச்சியில் பிரிட்டிஷ் போலீஸ்காரன் இருந்தான். அவனிடம் இந்த பாரமான சொத்தை யெல்லாம் கொடுத்து பிரிட்டிஷ் ராஜாங்கத்தில் செல்லுபடியாகக் கூடிய நோட்டாக மாற்றிக் கொண்டான். பிறகு வெகு சௌக்கியமாக இறங்கிப் பிரிட்டிஷ் ராஜ்யத்துக்குப் போய் விட்டான்.



நாமும் ஒரு நாள் இல்லாவிட்டால் இன்னொரு நாள் இந்தப் பூலோக ராஜ்யத்தை விட்டு வேறொரு ராஜ்யத்துக்குப் போகத்தான் போகிறோம். அப்பொழுது நம்முடைய சொத்து எல்லாவற்றையும் அங்கு சுலபமாக எடுத்துக் கொண்டு போக ஒரு 'கரன்ஸி' இருக்கிறது. அதுதான் தர்மம். நம் சொத்துக்களாகிய உடல், பொருள், ஆவி எல்லாவற்றையும் தர்மம் செய்து புண்ணிய நோட்டுக்களாக மாற்றிக் கொள்ள வேண்டும். அந்த நோட்டுதான் ஆண்டவன் சாம்ராஜ்யத்தில் செல்லுபடியாகும். அந்த நோட்டாக நம் செல்வத்தை மாற்றிக்கொள்வது வெகு சுலபம். சரீரத்தினால் பிறருக்கு உபகாரம் செய்யலாம். நாவினால் பகவன் நாமாவை உச்சரித்துப் புண்ணிய நோட்டாக மாற்றிக் கொள்ளலாம். வம்பு தும்பு பேசினால் கடன் நோட்டாகத்தான் சேர்ந்துவிடும்.

ஐக்கியத்தைக் காப்பாற்றக் கூடிய ஒரே மொழியை ஆட்சி மொழியாகக் கொள்ள வேண்டும்.

ஃ ஃ ஃ

ஆங்கிலத்தை விரும்பாத இளைஞர்கள் அலகாபாத்திலும் மற்றும் பல இடங்களிலும் வன்முறைகளில் இறங்கியிருப்பதாகப் படித்து வேதனையடைந்தேன். அவரவருக்கும் பிடித்த விஷயங்கள், பிடிக்காத விஷயங்கள் என்று உண்டு. நம்முடைய கருத்து ஒரு விதமாகவோ, அதற்கு மாறுபட்டோ இருக்கலாம். ஆனால் இதற்காக வன்முறைகளில் இறங்கி நாச வேலை செய்வது உதவாது.

நமக்கு எது பிடித்திருக்கிறதோ அதுவே பிறருக்கும் பிடிக்க வேண்டும் என்று நிர்ப்பந்தம் செய்ய முடியாது. நம் விருப்பப்படி இன்னொருவரின் பெயர்ப் பலகையில் தார் பூசுவதற்கில்லை. பெயர்ப் பலகையில் தார் பூசுவதை மக்களுக்குக் கற்றுத் தந்தவர் என் அமைதியற்ற நண்பர் ராமசாமி நாயக்கரவர்கள். அவர் பல நல்ல காரியங்கள் செய்திருக்கிறார். நன்மையற்ற சில காரியங்களும் செய்திருக்கிறார்.

தங்களுடைய உறுதியான கொள்கைகளை வெளிக் காட்டுவதற்காகத் தென்னக மாணவர்கள் ஒழுங்கீனத்தில் இறங்குவதில்லை. எனவே ஹிந்தி பேசும் என் இளம் நண்பர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்: சக்தியுடன் செயலாற்றுங்கள், நேர்மையான முறையில் கருத்துக்களை உருவாக்கிக் கொண்டு அவற்றை உறுதியாகப் பற்றிக் கொள்ளுங்கள். ஆனால் ஒழுங்கீனத்தில் இறங்காதீர்கள். ஒழுங்கீனம் உண்மையை நிரூபிக்காது. நமக்கு ஜனசங்கியை தெரியும். ஏதோ ஒன்றை நிரூபிப்பதற்காக மேஜை நாற்காலிகளை உடைக்க வேண்டியதில்லை. இத்தகைய ஒழுங்கீனங்கள் நிரூபிப்பதெல்லாம் ஒன்றுதான். அதாவது முன் போல் இப்போது நாட்டில் சட்டமும் ஒழுங்கும் மதிக்கப்படுவதில்லை என்ற பரிதாபகரமான உண்மையைத்தான் வன் செயல்கள் நிரூபிக்கின்றன. பயமுறுத்தல்கள் (வெற்றி பெற்றாலும் பெறாவிட்டாலும்) சுதந்திர வழியல்ல; ஜனநாயக வழியும் அல்ல. நுட்பத் தொழில் முன்னேற்றத்தையும், பொதுவான அறிவு விளக்கத்தையும் அச்சுறுத்தலின் மூலம் பெற முடியாது.

பெரும்பான்மையினரின் இஷ்டப்படி நடத்தும் ஆட்சி ஜனநாயகமாகி விடாது. அது பலவந்தமேயாகும். ஜனநாயகமோ சிறுபான்மையினருக்கும் தனி நபருக்கும் பல காப்புக்களைத் தந்து, பெரும்பான்மையின் பலவந்தத்தைத் தவிர்க்கிறது. பெரும்பான்மையாக உள்ள மக்களையும் தலைவர்களையும் கட்டுப்படுத்தும் ஒழுக்கம்தான் ஜனநாயகத்துக்கு மிகவும் முக்கியம். பெரும்பான்மையினரின் எண்ணிக்கை என்பது இரண்டாம் பட்சமே. ஹிந்தி அபிமானிகளின் வாதத்தைப் பார்க்கும்போது இந்த அரசியல் உண்மை நினைவுக்கு வருகிறது.

வன்முறையில் ஒருவன் இறங்கிவிட்டான் என்னும்போதே, அவனிடம் நியாயமில்லை, அவன் தவறான வழியில் இருக்கிறான், அதனால் தான் பலவந்தத்தை மேற்கொள்ளுகிறான் என்ற எண்ணம் பொதுவாக ஏற்படும். தீவிரவாதிகளும், அவர்களால் உத்வேகம் பெற்ற இளைஞர்களும், வன்முறை — ஒழுங்கீனம் ஆகியவற்றின் மூலம் ஹிந்திக்காக வாதம் செய்வது தவறு என்பதை உணர்த்த மகாத்மா காந்தி தேவையில்லை. சுயமரியாதை உள்ள எதிராளிகளை வன்முறையால் பணிய வைக்க முடியாது. மாறாக, எதிராளிகளிடம் அது எதிர்ப்புணர்ச்சியைத்தான் வளர்க்கும். வன்முறையினால் தென் இந்திய மக்களை வெற்றி கொண்டு, அவர்களது கோரிக்கையைக் கைவிடச் செய்யலாம் என்று யாரும் கனவு காண வேண்டியதில்லை.

வர்த்தக ரீதியில் இன்றைய இந்தியா ஒரே அமைப்பாகும். வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளவர்களில் பெரும்பாலோரின் மொழிக்குத் தனியான இயற்கை அநுகூலங்கள் உண்டு. என்றாலும் இந்த அநுகூல நிலையை அமைதியாகப் பயனுக்கிக் கொள்ளவில்லை. ஹிந்திவாதிகளின் நிர்ப்பந்தங்களும், அச்சுறுத்தல்களுமே அம்மொழி இயற்கையாகப் பெற்றிருக்கக்கூடிய வளர்ச்சிக்கும்கூட எதிர்ப்புச் சக்தியாகி விட்டன.

எது எப்படியாயினும் ஹிந்தி பேசாத மக்கள் வன்முறைக்கு அடிபணிய மாட்டார்கள் என்பதை ஹிந்தியர்கள் உணரட்டும். வன்முறையின் விளைவாக ஹிந்தி பேசாதவர்கள் சரணாகதி செய்ய மாட்டார்கள். பிரிவினைக்கே அது இட்டுச் செல்லும்.

இன்றைய சூழ்நிலையில் ஆட்சிமொழி மசோதாவைப் பார்லிமென்டில் நிறைவேற்றி விடுவதால் ஒரு லாபமும் விளையாது. இன்றைய கொந்தளிப்பு உணர்ச்சியிலிருந்து மக்கள் விடுபடும்வரை மொழிப் பிரச்னைக்குச் சர்க்கார் விடுமுறை தரும் என நம்புகிறேன். ஹிந்தி பேசாத மக்களின் நலனிலும் முன்னேற்றத்திலும் ஹிந்தியர்கள் இதயபூர்வமான அக்கறை கொள்ள வேண்டுமென்பதே நம் விருப்பம். இது ஈடேறாமல், சட்டம் மட்டும் செய்துவிடுவதால் ஹிந்தி பேசாதவருக்கு எந்த லாபமும் இல்லை.

ஃ ஃ ஃ

திருநெல்வேலியைச் சேர்ந்த ஸ்ரீ ஏ. எஸ். நாராயணசாமி அய்யரவர்களின் மறைவு ஆழ்ந்த துக்கத்துக்குரிய விஷயம். சுதந்திரக் கட்சியின் ஸ்தாபகர்களில் ஒருவரான அவர் நம்மை நிரந்தரமாகப் பிரிந்து சாசுவதமான ஓய்வு பெற்றுவிட்டார். நீண்ட காலமாகவே அவர் நோய்வாய்ப்பட்டிருந்தார். ஆயினும் அவரது அறிவு நல்ல விழிப்புடனேயே இருந்து வந்தது. நம் கட்சியின் வளர்ச்சியில் அவர் இடையறாமல் ஈடுபட்டிருந்தார். மிக உயர்ந்த விஷயஞானமுள்ளவர். மாசுமறுவற்ற நடத்தையுள்ளவர். அவரது மறைவு நமக்கு மகத்தான நஷ்டம்.

நரம்பு சிகிச்சை நிபுணருக்கு நல்வரவு

பிரிட்டனில் நடந்தது இது: கணவன் மனைவியிடையே கோபதாபங்கள் அதிகமாகி விட்டன. ஒரு நாள் கணவன் மனைவியை ஆவேசத்தோடு மாடிப் படிகளில் உருட்டித் தள்ளி விட்டான். விழுந்தவள் பிறகு எழுந்திருக்கவேயில்லை. பயந்து போன கணவன் அவள் விழுந்த இடத்துக்கு அருகில் காலியான தூக்க மருந்து பாட்டில் ஒன்றைத் திறந்து வைத்து விட்டான். ஏற்கனவே ஓரிரு முறைகளில் அவள் தற்கொலை முயற்சிகளில் ஈடுபட்டிருப்பதாகப் போலீசுக்குத் தகவல் உண்டு. ஆகவே இம்முறை அவள் நிறையத் தூக்க மாத்திரைகளை விழுங்கித் தன் முயற்சியில் வெற்றி கண்டு விட்டாள் என்றே முடிவு கட்டிவிட்டனர் போலீஸார்,— நரம்பு சம்பந்தப்பட்ட நோய்களில் நிபுணரான ஒருவர் பிரேதப் பரிசோதனை நடத்தும் வரையில். அப்புறம் துப்பறியும் கதைகளில் வருவது போலவே திடீர்த் திருப்பம் ஏற்பட்டுக் கணவன் கைதானான். அந்நிபுணர், விஞ்ஞானம் கண்டுபிடித்துள்ள புதியதொரு கருவியை உபயோகித்துப் பரிசோதனை நடத்தினார். மூளையின் குறிப்பிட்ட ஒரு பகுதியில் ரத்தம் கட்டிப் போயிருக்கிறது என்று கணக்காகச் சொல்லி விட்டது கருவி.

இந்த நூதன கருவியின் பெயர் 'அல்ட்ரா ஸவுண்ட்' என்பதாகும். நம் காதுகளால் கேட்க முடியாத, ஆனால் சக்தி வாய்ந்த, மெல்லிய ஒலி அலைகளை எழுப்பி அதனை மண்டையோட்டின் வழியே மூளைக்குள் செலுத்தி எதிரொலிகளை ஆராய்வது இந்தக் கருவியினால் சாத்தியமாகிறது. மண்டையோட்டைச் சுற்றி மாற்றி மாற்றிப் பல திசைகளிலிருந்தும் ஒலியைச் செலுத்துகையில் மூளையின் மையத்திலிருந்து கிளம்பும் எதிரொலிகளைக் கணக்கிட்டு வைத்திருப்பார்கள். இந்தக் கணக்கில் வேறுபாடு கண்டால் மூளையின் குறிப்பிட்ட அந்தப் பகுதியில் ரத்தம் கட்டிப்போய் அதன் காரணமாக எதிரொலியில் மாற்றம் உண்டாகி யிருக்கிறது என்று புரிந்து கொள்வார்கள்.


மோட்டார் சைக்கிள், ஸ்கூட்டர் விபத்துக்களுக்கு ஆளாகிறவர்களுக்குத் தலையில் அடிபடுவது ரொம்ப சகஜம். அப்போது மூளைக்கு ரத்தம் கொண்டு செல்லும் நாளங்கள் சேதமுற்று ரத்தம் உறைந்து போகலாம். ரத்தக் கட்டியினை உடனடியாக சஸ்திர சிகிச்சை மூலம் எடுக்காவிட்டால் உயிருக்கே ஆபத்தாக முடியும். ஆனால் ரத்தம் கட்டிப் போனது மூளையின் குறிப்பிட்ட எந்த இடத்தில் என்பதை சஸ்திர சிகிச்சைக்கு முன்னரே டாக்டர் அறிந்து கொள்ள வேண்டியது மிகவும் அவசியம். அதற்குப் பெரிதும் உதவுகிறது இக்கருவி.

நரம்புச் சிகிச்சை நிபுணர்களுக்குப் பெரிதும் உதவக்கூடிய இக்கருவி சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரிக்கு வெகு சீக்கிரம் வந்து சேரப் போகிறது. இந்தியாவிலேயே இது போன்ற கருவி முதன் முதலில் சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரிக்குத்தான் கிடைக்க விருக்கிறது.


இந்த ஒரு விஷயத்தில் மட்டுமல்ல; வேறு பல விஷயங்களிலும் சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியில் உள்ள நரம்புச் சிகிச்சைத் துறை உன்னத ஸ்தானம் வகிக்கிறது. ஆசியாவிலேயே ஜப்பானுக்கு அடுத்தபடியாக இத் துறையில் சிறந்து விளங்குவது சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரிதான்.

டாக்டர் பி. ராமமூர்த்தி அவர்கள் தலைமையின் கீழ் இயங்கும் இந்த நரம்பு


தசைநார்களிலுள்ள நரம்புகளின் தன்மையை ஆராய்ந்து குறைபாடுகளை உணர்த்தும் கருவி —எலக்ட்ரோமைகிராப்




மூளை எழுப்பும் மின் அலைகளைக் கணக்கிடுதல் —எலெக்ட்ரோ என்ஸெபலோகிராப்



மூளைக்குள் ஒலி அலைகளை அனுப்பி எதிரொலியைக் கணக்கிடும் 'அல்ட்ரா ஸவுண்டு' கருவி இதுதான்





மூளையில் சஸ்திர சிகித்ஸை தொடங்குவதற்கு முன்னால்

சிகித்ஸைப் பகுதியில், டாக்டர்கள் ஜகந்நாதன், பாலசுப்பிரமணியம், கலியாணராமன், அர்ஜுன்தாஸ் முதலியோர் சிறப்புப் பணியாற்றுகின்றனர். இவர்கள் ஒவ்வொருவரும் தனித்தனி விதமான வேலையில் மிகத் தேர்ச்சி பெற்றவர்கள். 'அல்ட்ரா ஸவுண்டு' கருவியில் விசேஷத் தேர்ச்சி பெற்றவர் டாக்டர் ஸ்ரீநிவாசன். டாக்டர் ராமமூர்த்தி அவர்களின் பெருமுயற்சி காரணமாகத்தான் இன்று இந்தத் துறை இந்த அளவுக்குச் சென்னையில் வளர்ந்திருக்கிறது என்பது உண்மை எனினும் இது ஒரு கூட்டு முயற்சி, சக ஊழியர்களான பலரது ஒத்துழைப்புடன் தான் இதனை அவரால் சாதிக்க முடிந்தது என்பதையே ஸ்ரீ ராமமூர்த்தி விரும்புவார்.

உடலிலுள்ள ஒவ்வோர் அவயவமும் இயற்கையாகவே நுண்ணிய மின் அலைகளை எழுப்புகின்றன என்று கண்டுபிடித்துள்ளனர். மூளை வெளிப்படுத்தும் மின் அலைகளை வரை படமாக அளிக்கக்கூடிய கருவி 'எலெக்ட்ரோ என்ஸெபலோகிராப்' எனப்படுகிறது. இந்தக் கருவியைக் கொண்டு நோயாளியைப் பரிசோதித்து வரை படங்களை ஆராய்ந்து அதில் உள்ள மாறுதல்களை உன்னிப்பாய்க் கவனித்து அதன் மூலம் நோயின் தன்மை உணர்ந்து நோயாளிக்குச் சிகித்ஸை செய்வதில் நிபுணராக விளங்கியவர் காலஞ்சென்ற எஸ். டி. நரசிம்மன். அவருக்குப் பின்னால் டாக்டர் அர்ஜுன் தாஸ் இதில் மிக விசேஷப் பணி ஆற்றுகிறார். டாக்டர் பாலசுப்ரமணியம், கல்யாணராமன் இருவரும் மூளையின் நடுவில் இருக்கும் மிக முக்கியமான நரம்பு அணுக்களின் சஸ்திர சிகித்ஸையில் விசேஷத் தேர்ச்சிபெற்றவர்கள்.

இத்தகைய கருவிகளைக் கொண்டு சிகித்ஸை அளிப்பதைவிட முக்கியமானது நோயாளிகளிடம் அன்புடனும் அனுதாபத்துடனும் நடந்துகொண்டு நம்பிக்கையை அவர்களிடம் வளர்ப்பதுதான். இந்த முக்கியமான காரியத்தை இத்துறையில் ஈடுபட்டுள்ள டாக்டர்கள் மறக்கவில்லை. காக்காய் வலிப்பு என்று சாதாரணமாகக் குறிப்பிடுகிறோமே அந்த 'வலிப்பு நோய் பற்றிய சில உண்மைகள்' என்று இவர்கள் ஒரு சிறு நூல் வெளியிட்டுள்ளார்கள். அதைப் படித்தாலே போதும், நோயாளிகளிடம் நம்பிக்கையை வளர்க்க இவர்கள் எத்துணை அளவுக்குப் பாடுபடுகிறார்கள் என்பது தெளிவாகப் புரியும். மிக எளிய தமிழில் வலிப்பு நோய் பற்றிய பல அரிய விஷயங்களைக் கூறுகிறது நூல். இந்நோய் உள்ளவர்கள் மட்டுமின்றி மற்றவர்களும் இதனைப் படித்துப் பயன்பெற வேண்டும். ஏனெனில், இந்நூலின் இறுதியில் குறிப்பிடப்பட்டிருப்பது போல் வலிப்பைப் பற்றிய உண்மைகள் எல்லாருக்கும் தெரியும் வரை இந்நோய்க்குள்ளான குழந்தைகளும் வயது வந்தவர்களும் அநாவசியமான கஷ்டங்களால் துன்புற்றுக் கொண்டுதான் இருப்பார்கள்.*

இப்படிப் பல விதங்களில் நற்பணியாற்றி வரும், சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரி நரம்புச் சிகித்ஸைப் பகுதியில் உழைக்கும் டாக்டர் ராமமூர்த்தியும் அவரது சக ஊழியர்களான மற்ற நரம்புச் சிகித்ஸை நிபுணர்களும் மிகவும் பெருமைப்படத்தக்க மற்றொரு விஷயமும் இம்மாதம் 14, 15 தேதிகளில் நிகழ்கிறது. நரம்புச் சிகித்ஸைத் துறை நிபுணர்கள் பலர் உலகின் பல பாகங்களிலிருந்து சென்னைக்கு வந்து மகாநாடு நடத்துகிறார்கள்.

ஆராய்ச்சிச் சொற்பொழிவுகள், இத்துறை சம்பந்தப்பட்ட திரைப்படக் காட்சிகள் ஆகியவை மகாநாட்டில் இடம் பெறுகின்றன. இந்நிபுணர்களை வரவேற்று உபசரிக்கும் மகிழ்ச்சி கலந்த பொறுப்பை ஏற்றுள்ள டாக்டர் ஸ்ரீ ராமமூர்த்தியும், பிற அறிஞர்களும் தமது கடமையைச் செவ்வனே ஆற்றி நரம்புச் சிகித்ஸைத் துறையில் மேலும் பல முன்னேற்றங்கள் நிகழத் துணை புரிவார்கள் என்று நம்புகிறோம்.

* இந்தச் சிறிய புத்தகம் Department of Neurology and Neurosurgery, Govt. General Hospital, Madras என்ற விலாசத்தில் கிடைக்கும்.


VEENA • VEENA • VEENA • VEENA • VEENA • VEENA • VEENA • VEEN
Veena•எம்ப்ராய்டரீஸ்
நவீன டிசைன்கள். கண் நிறைந்த வண்ணங்கள்.
மனதைக் கவரும் சித்திர தையல்
வேலைப்பாடுகள் அமைந்தது.
மற்ற எல்லா
சித்திர தையல் துணிகளுக்கும்,
வேலைகளுக்கும்
மிகச் சிறந்தவை.
தயாரிப்பாளர்கள்:
S.S.M. பிரதர்ஸ் (பி) லிட்.,
குமாரபாளையம் போஸ்ட்
(ஈரோடு வழி)
எங்கள் இதர உற்பத்திகள்:
சர்ட்டிங்ஸ், பட்டுத்துணிகள்,
அமர்ஜோதி டிரேடர்ஸ்

ஹரியாணா

க. சந்தானம்

சமீபத்தில் மூன்று கூட்டு மந்திரி சபைகள் கவிழ்ந்து விட்டன. மேற்கு வங்காளம், பஞ்சாப் இரண்டு பிரதேசங்களிலும் கூட்டுக் கட்சியிலிருந்து ஒரு கோஷ்டி பிரிந்து மந்திரி சபைக்குச் சட்டசபையில் பெரும்பாலான ஆதரவில்லாமல் போய் விட்டது.

ஹரியாணாவின் கதை முற்றிலும் மாறுபட்டது. அதில் சட்டசபையின் ஆதரவை மந்திரி சபை இழந்ததாக கவர்னர் நிச்சயிக்கவில்லை. சட்டசபையை உடனே கூட்டவும் வற்புறுத்தவில்லை. 'எழுபத்தொன்பது அங்கத்தினர்கள் கொண்ட சபையில் சென்ற எட்டு மாதங்களில் 30 பேர்கள் கட்சிக்குக் கட்சி தாவியிருக்கின்றனர்; கட்சிகளின் நிலைமை நாளுக்கு நாள் மாறி வருகின்றது; மந்திரி பதவியைப் பணயமாக வைத்து முதல் மந்திரி தமது நிலையைச் சமாளிக்க ஓயாமல் முயற்சி செய்கிறார்; இதைத் தவிர வேறு வேலை செய்ய அவருக்கோ அவர் மந்திரி சபைக்கோ அவகாசமில்லை; ஜனநாயகம் கேலிக்கூத்தாகி விட்டது; ஆதலால் சட்டசபையைக் கலைத்து மீண்டும் பொதுத் தேர்தல் நடத்த வேண்டும்' என்ற முடிவுக்கு கவர்னர் திரு சக்கரவர்த்தி வந்தார்.

தமது பாரபட்சமற்ற அறிக்கையில், கவர்னர் காங்கிரஸ் கட்சியின் போக்கையும் கண்டித்திருக்கிறார். பதவி இழந்ததை மறந்து சில காலமேனும் ஒழுங்கான எதிர்க்கட்சியாகச் செயல் புரியாமல் மந்திரி சபையைக் கவிழ்ப்பது ஒன்றே தமது நோக்கமாக காங்கிரஸ் தலைவர்கள் இருந்தனர்.

இந்த நிலைமையில் ராஷ்டிரபதி ஆட்சியைச் சிறிது காலம் ஏற்படுத்தி, நிர்வாகத்தை ஒழுங்கு செய்து விட்டுப் பொதுத் தேர்தல் நடத்த வேண்டும் என்று ராஷ்டிரபதிக்கு கவர்னர் சிபாரிசு செய்தார். அதன்படி சட்டசபை, மந்திரி சபைகள் கலைக்கப்பட்டு ராஷ்டிரபதி ஆட்சி பிரகடனம் செய்யப்பட்டது.

இந்த நடவடிக்கை ராஜ்யங்களை நகர சபைகளின் நிலைமைக்குத் தாழ்த்துவதாகும். ஹரியாணாவின் அரசியல் கட்சிகளுடைய போக்கு மிகவும் வருந்தத் தக்கதே. கொள்கைகளைப் பற்றிய எண்ணமே இல்லாமல் சீட்டாட்டம் போல் சட்டசபை மெம்பர்கள் கட்சி தாவுவதை ஓரளவு ஒழுங்குபடுத்திக் கட்டுப்பாடு செய்வதற்குச் சட்டம், சம்பிரதாய ஏற்பாடுகளைப் பற்றி ஆலோசிப்பது அவசியமே.

ஆயினும் கவர்னர் தம் இஷ்டப்படியோ, மத்திய மந்திரி சபையின் ஆலோசனைப்படியோ சட்டசபையைக் கூட்டாமலும், அதைக் கலைக்காமலும் ராஷ்டிரபதி ஆட்சியைக் கோருவது ஜனநாயகத்துக்கும், அரசியல் சாஸனத்தின் உட்கருத்துகளுக்கும் முரணாகும். இடைக்காலப் பொதுத் தேர்தலுக்குமுன் ராஷ்டிரபதி ஆட்சி ஏற்பட வேண்டுமென்று நியமமுமில்லை, அவசியமும் இல்லை. முன்பு இருந்த மந்திரி சபையையோ, அதைக் கலைத்துத் தற்காலிகமான ஒரு சிறு மந்திரி சபையையோ நியமித்து விட்டுச் சட்டசபையைக் கலைத்து விட்டிருக்க வேண்டும். ஹரியாணாவில் ஏற்பட்ட நிலை மத்திய அரசாங்கத்தில் ஏற்பட்டால் ஆட்சியை ராஷ்டிரபதி தம்வசம் எடுத்துக் கொள்ள முடியாது. முன்பு அம்மாதிரி செய்ய வேண்டும் என்று ராஜாஜி கோரியதற்கு அது அரசியல் சாஸனத்துக்குப் பொருந்தாது என்று கூறிவிட்டனர். இது உண்மையே. ஆயினும் ராஜ்யங்களுக்கு மட்டும் ஏன் வேறு முறை அனுஷ்டிக்கப்பட வேண்டும் என்று கவர்னர் கூறவில்லை. வங்காளத்திலாவது சட்டமும் ஒழுங்கும் சீர்குலையும்படி மந்திரி சபை அக்கிரமம் செய்து வந்ததாகப் புகார் கிளம்பிற்று. ஹரியாணாவில் அவ்விதத் தகராறுகள் இல்லை.

சீக்கிரம் பொதுத் தேர்தல் நடைபெற்று விட்டால் இந்த ஆட்சேபத்தில் அதிக வலுவிருக்காது என்றே எண்ணலாம். ஆனால் ஜனநாயகக் கொள்கைகளைச் சிறிது கைவிட்டாலும் நாளடைவில் அது பேராபத்தாக முடியும். யுத்தகாலத்துக்காக நெருக்கடி பிரகடனம் செய்து, ஆதார உரிமைகளை அகற்றலாம் என்று அரசியல் சாஸனத்தின் 352வது விதி கூறுகிறது. அதை யுத்தமில்லாத ஐந்து ஆண்டு காலமாக அமலில் வைத்து வந்திருக்கின்றனர். அதே மாதிரி உள்நாட்டுக் கலவரத்தாலோ, வெள்ளம், பஞ்சம் போன்ற பேராபத்துக்களாலோ ராஜ்ய அரசாங்கம் இயங்கமுடியாமற் போனால் அந்த நெருக்கடிகளைச் சமாளிக்க 356ம் விதியில் ராஷ்டிரபதி ஆட்சிக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது. சாதாரண சிக்கல்களைச் சமாளிப்பதற்கும் இவ்விதியைப் பிரயோகிப்பதானால் ராஜ்ய அரசாங்கங்கள் மத்திய அரசாங்கத்தின் கைப்பொம்மைகளாகிவிடும். கவர்னர்களும் அதன் கிங்கரர்களாகி விடுவார்கள். இப்போக்கைத் தடுக்கக் கவர்னர்களை மக்கள் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று கேரள முதன்மந்திரி திரு நம்பூதிரிபாத் விரும்புகிறார். அவ்வாறு தேர்ந்தெடுத்தால் அவரிடமே அமெரிக்காவைப் போல் ராஜ்ய நிர்வாகத்தை ஒப்படைக்க வேண்டும். ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட கவர்னரைக் கொண்டு ஆட்சி நடத்துவதும், தேர்ந்தெடுக்கப்பட்ட மந்திரி சபை மூலம் பொறுப்பாட்சி நடத்துவதும் முரண்பாடானவை. ஆதலால் அரசியல் அறிவும், திடசித்தமும் உள்ளவர்களை கவர்னர்களாக நியமித்து, அவர்களை அரசியல் சாஸனத்தின்படி மந்திரி சபை நடைபெறவும், வேண்டும்பொழுது பொதுத் தேர்தல் நடத்தவும் சுதந்திரமாக விட்டுவிடுவதே நமது அரசியலைத் திறமையுடன் நடத்தும் முறையாகும். மத்திய மந்திரி சபையும், ராஷ்டிரபதி ஆட்சியும் குழப்பம் கலவரம் மிகுந்த நெருக்கடிகளிலேயே ராஜ்ய அரசாங்கத்தில் குறுக்கிட வேண்டும். தனது சொந்த விவகாரங்களையும் கட்சிப் பூசல்களையும் மத்திய அரசாங்கம் ஒழுங்குபடுத்தித் திறமையுடன் செயல் புரிந்தால் ராஜ்யங்கள் ஒழுங்காக நடைபெறுவதற்கு அதுவே நல்ல வழிகாட்டியாகும்.



கஜலக்ஷ்மி விளக்கு
(விஜயநகரக் கால நாகரிகத்தில் உருவானது)

தீபலக்ஷ்மி



தீப ஒளியின் தேவி
(வைத்தீஸ்வரன் கோயில் படிமம்)

இருளை விரட்டி அருளைப் பொழியும் தீப ஒளியை மங்கலச் சின்னமாக, தெய்விக வடிவமாக வழிபடும் மரபு பல சமயங்களிலும் இருக்கிறது. ஒளியை இறை வடிவமாக வழிபடாதவர் இல்லை. சக்தியைத் தீப வடிவினள் என்று தேவி துதி போற்றுகிறது. திருமாலை 'ஞானச் சுடரா'கக் காண்கிறார் ஆழ்வார் ஒருவர். சிவபெருமானே 'அலகில் சோதியன்' 'சோதி வானவன்', 'சோதியே துருவாதி', 'சோதியே சுடரே' என்றெல்லாம் சிவனருட் செல்வர்களால் துதிக்கப்பெற்ற அருட்பெருஞ் ஜோதி. தாமரைக் கோயில் தலைவி திருமகளும் ஜோதி வடிவினள்தான்; திருவிளக்கிலே தீபலக்ஷ்மியாக வந்து உறையும் தேவி அவள். ஒளி இல்லையெனில் உலகில்லை; உயிர்களில்லை; இரவுமில்லை, பகலுமில்லை. பஞ்சபூதங்களில் ஒன்றான ஒளி இல்லையெனில், ஐம்புலன்களில் ஒன்றான கண்களுக்கும் பொருளில்லை. ஜோதியை, உலகை இயக்கும் ஒளியை வழிபடுவது, நம்முள் அறியாமை இருளைப் போக்க வல்லது என்றுதான் ஜோதிர் மயமான பரம்பொருளைத் தீப வடிவிலே தீபலக்ஷ்மியாக வழிபடுகிறோம்.

பெருமைமிக்க வேதநூல்கள் சூரியதேவனையும், அக்கினியையும் ஒளியின் தெய்வமாகக் குறிப்பிடுகின்றன. மகாகவி காளிதாசனின் குமார சம்பவ காவியம் தீபத் தத்துவத்தையும், அக்கினியின் பெருமைகளையும் சிறப்பித்துக் கூறுகிறது. உப

வி. கோபாலன்

நிஷதங்களும், புராண நூல்களும் ஜோதி மகிமையைப் போற்றிக்குறிப்பிடுகின்றன.

தீபம் மங்கல வடிவம்; ஒளி பொழியும்போது அருட் கனிவையும் அழகையும் ஒருங்கே தீபத்திலே காண்கிறோம். இந்தச் சுபிட்சச் சின்னத்தை நலம் நல்கும் திருமகளின் எழில் வடிவமாக உணர்ந்து வழிபடுவதில்தான் எத்தனை நிறைவு; மகிழ்ச்சி! தீபத்திலே திருமகளை அமர்த்தி வழிபடும் மரபு பன்னெடுங் காலமாகவே இருக்கிறது. அறிவு மயக்கமும், சோம்பலும் உள்ள இடத்தில் லக்ஷ்மி தேவியின் அருட்கடாட்சம் இராது என்பதை அறிவோம். இந்தத் தீய குணங்களின் சின்னம் இருள். இந்த இருளை விலக்கி இன்பம் நல்கும் ஒளியை வாழ்வு தரும் லக்ஷ்மி தேவியாக வழிபடுவது பொருத்தம்தானே!

காகதீயர் கலைப்படைப்பான
தீபலக்ஷ்மி படிமம்
(நேஷனல் மியூஸியம் - தில்லி)



தீபங்களில் பதினாறு வகைகளில், வடிவங்களில் லக்ஷ்மி தேவி உறைவதாகப் பண்டைய நூல்கள் கூறுகின்றன. பதினாறு வகை தீபலக்ஷ்மிகளுள், கையில் ஒளி விளக்கை ஏந்தியவாறு நிற்கும் வடிவம் மிகச் சிறப்பான ஓர் அம்சம். இதுவே ''பாவை விளக்கு'' எனப்படுகிறது. வெண்கலத்தி லான பல அழகிய பாவைவிளக்குகளை ஆலயங்களில் காண லாம். தீபலக்ஷ்மியின் வடிவம் எழில் கொழிக்கக் காணும். புன்னகை தவழும் முகமும், அருளொளி வீசும் கண்களும், நிறைவான ஆபரணங்களும், கவர்ச்சிகரமான அணிகலன்களும் பூண்டு, கரங்களிலே தீபமேந்தி நிற்கும் தீபலக்ஷ்மியின் படி மங்கள் மங்கலச் சின்னமாக விளங்குகின்றன. 'ஒளிசேர் நலமனைத்தும் ஓங்கி வருகின்றன காண்' என்பது போன்று ஒளியைக் கருணையாக்கி அதனைக் கனிய வைத்துத் தருகிறாள் இந்த அன்னை. தீபலக்ஷ்மி சில வெண்கலச் சிலைகளில் பதும ஆசனத்திலும், வேறு சிலவற்றில் சாதாரண பீடத்திலும் உள் ளதை ஆலயங்களில் காணலாம். தீபலக்ஷ்மி தனது கரத்திலே கொண்டிருக்கும் விளக்கு சாதாரண அகல் விளக்கைப் போன்று, சற்றுக் குழி வாக இருக்கும்.

தெய்வ வடிவமான தீபத்தைப் பல அழகிய கோலங்களில் உருவாக்கி ஒளிரச் செய்து வணங்கியதன் மூலம் கலைத்திறனையும்வெளிப் படுத்தியிருக்கின்றனர் நம் கலைஞர்கள்.







தீபலக்ஷ்மி படிமங்கள்
(சென்னை அரசினர் கலைக்கூடம்)

தாமரை மலர் வடிவிலே ஒரு தீபம் உண்டு. காண்பதற்கு அழகான இந்தத் தீபத்துக்குப் பத்ம தீபம் என்று பெயர். பாதி மலர்ந்த தாமரை மலரைப் போன்ற வடிவம் கொண்ட ஒளிவிளக்கு சிறந்ததொரு கலைப் படைப்பு. இந்த விளக்கின் மேற்பரப்பிலே தாமரை இதழ்கள் போன்ற சித்திரிப்பைக் காணலாம்.

தீபலக்ஷ்மி
(சோழர் கலைப்படைப்பு)





இந்த விளக்கு ஒளிரும்போது இறையழகுடன் கலையழகையும் காணலாம். பதும மலரிலே வசிக்கும் திருமகளைப் பத்ம தீபத்திலே கண்டு வழிபடுவது பொருத்தம்தானே! சோழ மன்னர்கள் பல ஆலயங்களுக்குப் பத்ம தீபம் செய்து அளித்திருக்கின்றனர்.

மத்ஸ்ய தீபம் என்பது மீன் வடிவத்திலேயான ஒளி விளக்கு. இதன் அடிப்பாகம் மீன் போன்று காணும். மேலே உள்ள சிகரப் பகுதியில் தீபம் ஒளி பொழிவதற்காக நெய் விடுவதற்கான குழிந்த தட்டு போன்ற அமைப்பு இருக்கும். மத்ஸ்யதீபம் தீப வகைகளுள் மிக அபூர்வமான ஒரு வகையாகும். மத்ஸ்யத்தைப் போன்றே, ஆமை வடிவிலும் தீபங்கள் உண்டு. இதற்குக் கூர்ம தீபம் என்று பெயர். கூர்மத்தின் பூரணமான வடிவை இந்தத் தீபத்திலே காணலாம். கம்பீரமான தோற்றமுடைய தீபம் இது. கூர்ம தீபத்தை ஆலயங்களில் மிக அபூர்வமாகவே காணலாம். செய் திறனும், கலையழகும் ஒருங்கே கொண்டது இத் தீபம்.

நாக வடிவத்தில் உள்ள தீபம் நாக தீபம் எனப்படுகிறது. இதன் தோற்றம் காண்பதற்குக் கவர்ச்சியாக இருக்கும். மேலும், காமாட்சி விளக்கு, கஜலக்ஷ்மி தீபம், கின்னர தீபம் என்று பலவித வெவ்வேறு அமைப்புகள் கொண்ட தீபங்களும் உள்ளன. இந்தத் தீப வகைகளுள் முக்கியமானது குத்துவிளக்கே. பெரும்பாலான வீடுகளில் மாதர் ஏற்றியும் போற்றியும் வழிபடுவது குத்துவிளக்கைத் தானே.

விருட்ச தீபங்கள் ஆலயங்களில் தீபாராதனையின்போது சிறப்பாக உபயோகிக்கப்படுகின்றன. விருட்ச தீபத்தின் அமைப்பு பல கிளைகளுடன் கூடிய ஒரு மரம்போல இருக்கும். தீப மரத்தின் கிளைகளில் விளக்கு பாகம் பொருத்தப் பட்டிருக்கும். ஒரே தீப விருட்சத்தில் ஆயிரம் விளக்குகள் கூட உண்டு. சிலவற்றில் நூற்றெட்டு அல்லது நூற்று முப்பத்திரண்டு விளக்குகள் இருக்கும். விருட்ச தீபம் ஒளிரும்போது அற்புதமாகத் தோன்றும்.

தொங்கு விளக்கு என்று மற்றொரு வகை தீபமும் உண்டு. தீபம் சங்கிலித் தொடரால் மேலிருந்துதொங்கும் அமைப்பை உடையது இது. தொங்கு விளக்கின் சங்கிலியில் நூதனமான "டிஸைன்"களையும், மலர், நடன நங்கை போன்ற அழகிய சித்திரிப்புக்களையும் காணலாம். சில தொங்கு விளக்குகளில் தீபம் சங்கிலியின்



மையத்தில் இருக்கும். தீபத்துக்குக் கீழே சங்கிலித் தொடரில் யானை, மலர், நடன மங்கை போன்ற உருவங்கள் இருக்கும். தொங்கு விளக்குகள் ஆலய கர்ப்பக்கிருஹங்களிலும் பெரிய மண்டபங்களிலும் உபயோகப்படுபவை. இவை கண்ணைக் கவரும் அழகிய வடிவம் கொண்டவை.

விளக்குகளை ஏற்றிச் சுடர் வணக்கம் புரியும் திருநாட்கள் பல உண்டு. வடக்கே தீபாவளி



மேலைச் சாளுக்கியர் கலைப் பண்பு கொண்ட தொங்கு விளக்கு. (நேஷனல் மியூசியம், தில்லி.)

யும் தெற்கே கார்த்திகையும் இவ்வகையில் பிரசித்தி பெற்றவை. சங்க காலத்திலேயே தமிழ் நாட்டவர் தீபங்களை ஏற்றிப் போற்றினர் என்றால் பலருக்கும் வியப்பாக இருக்கும். ''நற்றிணை''யில் மதுரைக் கணம்போதனார் என்பார் நெய்தல் நில மக்கள் மாலைநேரத்தில் தீப வரிசைகளை ஏற்றிக் கொண்டாடிய தீபத் திருநாளைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார். கீழ்க் கடலில் உதித்த ஆதவன் மேர் கடலில் மறையும் மாலை வேளையில் அழகு வளையல்கள் பூண்ட மங்கையர் விளக்கேற்றி மகிழ்ந்தனர் என்கிறது அப்பாடல். தீபங்களை மங்கலச் சின்னமாகப் பெண்கள் போற்று வதைத் திருஞானசம்பந்தர், ''தையலார் கொண்டாடும் விளக்கீடு'' என்று சிறப்பித்துக் கூறுகிறார்.

அழகுக் கலைகளைப் போற்றி வளர்த்த நம் பண்டைய மன்னர்கள் விளக்குகளை உருவாக்கும் கலைக்கும் உயிர் கொடுத்தனர். இதன் விளைவாகப் பல அழகிய தீபங்கள் தோன்றின. 'யவனர் விளக்கு' என்ற ஒரு வகை எழிற் தீபம் இவற்றிலொன்று. யவனர் விளக்கின் அழகைப் பல புலவர்கள் பாடியிருக்கின்றனர்.

ஒளியில் ஒளிர்ந்திருக்கும் அண்ணாமலையாரைப் போற்றும் கார்த்திகைத் திருநாளின் புராதனச் சிறப்பைக் காளஹஸ்தி, காஞ்சி, தேவிகாபுரத்துச் சோழர், விஜயநகரவேந்தர் கல்வெட்டுக்கள் கூறுகின்றன.


ஃ ஃ ஃ

தீபலக்ஷ்மியின் சில அழகு வடிவங்களைக் காண்போம். தஞ்சை மாவட்டத்து வைத்தீசுவரன் கோயிலிலே உள்ள சிவாலயத்தில், சோழ மன்னர்கள் உருவாக்கித் தந்த தீபதேவியின் நளினப் படிமம் ஒன்று உள்ளது. மிக நேர்த்தியான கலைப் படைப்பாக அப் படிமம் விளங்குகிறது. லக்ஷ்மி வளத்தின் சின்னம்; செல்வத்தின் இருப்பிடம். இவ்வன்னையின் அம்சமான தீபலக்ஷ்மியின் வடிவமும் செல்வச் செழிப்பும், நல்வளமும் பிரதிபலிக்கும் வண்ணம்தானே இருக்க வேண்டும்! அந்த அற்புத வடிவத்தை — ஜோதிநாயகியை அப்படியே காண்கிறோம் வைத்தீசுவரன் கோயிலிலே. பதும பீடத்தின் மீது நிற்கிறாள் தேவி. அவள் அணிந்திருக்கும் அணிகலன்களும், ஆபரணங்களும் அழகுக்கு அழகு செய்கின்றன. அழகான ஒன்றைப் பற்றிச் சொல்லும்போது, கிளி கொஞ்சுகிறது என்று மெய் சிலிர்க்கச் சொல்கிறோம் அல்லவா? தீப லக்ஷ்மி படிமத்திலே உண்மையிலேயே அழகு கொஞ்சுகிறது. அதைக் கண்டதும் அதைப் படைத்த கலைஞனுக்கும் கிளியின் நினைவு வந்து விட்டது போலும்! அன்னையிடம் கிளி போய்க் கொஞ்சுவதாகக் கற்பனை புரிந்து, தேவியின் தோள் மீது நிஜமாகவே கிளி ஒன்றின் வடிவத்தையும் அமைத்துத் தன் ரசனையையும் பாருக்கு உணர்த்தியிருக்கிறான், படிமத்தை உருவாக்கிய அக் கலைஞன். தீப தேவி புடவை அணிந்திருக்கும் அழகு தான் என்ன! கரத்திலே விளக்கேந்தி ஒளி கொடுக்கும் அழகுதான் என்ன! இந்த அழகுகளை யெல்லாம் வென்று விடுகிறது தேவியின் முகத்திலே ஒளிரும் கருணை! தீப லக்ஷ்மி விக்கிரகங்களின் கலையழகுக்கும், சிறப்புக்கும் வைத்தீசுவரன் கோயில் படிமம் சிறந்ததோர் எடுத்துக்காட்டு.

சோழ மன்னர்கள் கலையார்வத்தில் உருவான தீப லக்ஷ்மியின் லாவண்யக் கோலங்களைத் தஞ்சை பெரிய கோயில், கங்கை கொண்ட சோழபுரத்துச் சிவாலயம், குடந்தை

நாகேசுவரர் கோயில் ஆகிய இடங்களில் காணலாம். பல அற்புத தீப லக்ஷ்மி வடிவங்களைச் சென்னை அரசினர் அரும் பொருட் காட்சிச் சாலையிலும் சென்னை கலைக் கூடத்திலும் தில்லி தேசியக் கலைக் கூடத்திலும் காணலாம்.

மதுரை மீனாட்சி ஆலயத்தில் நவீன தீப தேவியர் வடிவங்கள் உள்ளன. திருப்பதி ஸ்ரீ வேங்கடேசுவரர் ஆலயத்தில் அபூர்வமான ''கூர்ம தீபத்''தைக் காணலாம். விஜயநகர வேந்தர்கள் பல ஆலயங்களுக்கு எழில் கொழிக்கும் தீப வடிவங்கள் பலவற்றை அளித்திருக்கின்றனர். வெவ்வேறு அரச மரபினரின் கலைப் பண்பில் உருவான தீபலக்ஷ்மி வடிவங்களில், அணிகலன்கள், கேச அமைப்பு, தோரணை இவைகளில் சில மாறுதல்கள் உண்டு. ஆயினும், எந்தக் கலைப் பண்பில் உருவான ஜோதிநாயகியின் வடிவத்திலும் எழில் ததும்புவது உறுதி.



திருவண்ணாமலை அருணாசலேசுவரரும், அம்பிகையும்.

ஒட்டகப் பால்
'அன்பு'



தலைநகரில் பாலுக்குப் பஞ்சம் வந்து விட்டதால் ஒட்டகம் வளர்க்கும் வேலை டில்லியில் புத்துயிர் பெற்று விட்டது.

டில்லியில் ஒட்டகப் பாலுக்குக் கிராக்கி இருப்பதால் அது விற்பனையாகிறது.

ரங்கபுரி என்ற கிராமத்தில் ஒட்டகம் வளர்க்கப் படுகிறது. அங்கு இராஜபுதனத்தைச் சேர்ந்த டாகுர்கள் எனப்படும் நிலக்கிழார்கள் பல நூற்றாண்டுகளாக வாழ்ந்து வருகின்றனர். கடந்த சில ஆண்டுகளாக அக் கிராமத்தின் அருகே மேய்ச்சல் நிலம் குறைந்து ஒட்டகத்தைப் பொதி இழுப்பதற்குப் பயன் படுத்துவதும் குறைந்து விட்டதால் அதன் எண்ணிக்கை தமிழ்ப் படத்தின் தரம்போல் சுருங்கியது.

ஆனால்—

கடந்த மூன்றாண்டுகளாகப் பாலுக்குப் பஞ்சமிருந்து வருவதால் இந்நிலைமை தலைகீழாக மாறிவிட்டது. ரங்கபுரியிலுள்ள ஒட்டகங்களின் எண்ணிக்கை இரட்டித்து விட்டது. அவை அனைத்தும் பெண் ஒட்டகங்களாகவும் இருக்கின்றன.

வெள்ளைப் பண்டங்களை விற்கக் கூடாது என்று நம் தமிழ் நாட்டில் ஒரு வழக்கு நிலவி வருவது போலவே, ஒட்டகப் பாலை விற்கக் கூடாது என்று அதை வளர்ப்பவர்கள் ஒரு காலத்தில் எண்ணி வந்தனர். ஒரு குடும்பத்துக்குப் போதிய அளவு பால் மட்டுமே கறக்கப்பட்டு வந்தது.

ஓர் ஒட்டகம் ஒரு நாளில் 10 முதல் 12 கிலோ வரை பால் கறக்கிறது. (வறட்சியான இடத்தில்தான்) ஆண்டுக்கு ஒரு மாதம் மட்டும் கறப்பதில்லை. ''ஐந்து ஒட்டகம் வைத்திருப்பவர்களுக்கு ஒரு நாளில் ரூ. 50 கிடைக்கிறது'' என்று ஒட்டகம் வளர்க்கும் ராம்சந்த் கூறுகிறார்.

ஒட்டகப் பால் பசும் பாலை விடச் சத்து செறிந்ததாக இருந்த போதிலும் அதை அருந்தலாகாது என்று இந்தியாவில் நினைக்கிறார்கள்.

கடைந்த மோரில் வெண்ணெய் எடுப்பவர்களின் சாமர்த்தியம் எல்லாம் இந்த ஒட்டகப் பால் விஷயத்தில் தோல்வியைத்தான் ஏற்க வேண்டும். ஏன்?

ஒட்டகப் பாலுக்கு உறை ஊற்றித் தயிராக்கி வெண்ணெய் எடுக்க முடியாது!



வான் விழிச் சுடர்!

‘கார்’எனும் இருட்டு வேந்தன்
‘திகை’த்திட ஒளியை வீசிக்
“‘கார்த்திகை’ப் பொன்னாள்” என்றே
கவின்பெயர் கொடுப்ப தற்கோ

சேர்ஒளிச் சுடரே! சோதிச்
சுந்தரப் பொலிவே! ஓங்கும்
கூர்முனை வாய்ந்த அண்ணா
மலைதனில் நீயெ மூந்தாய்!

“நானெனும் அகந்தை நீங்கி
நினைவெலாம் ஒன்றாய்த் தேங்கி
மோனமாம் மலையுச் சிக்கு
முயன்றுநீ வருவா யாகில்

ஞான - வான் வெளியில் சோதி
நடனத்தைக் காண்பாய்!” என்றே
ஊனமாம் புவிமாந் தர்க்கு
உணர்த்தவோ மலைமேல் நின்றாய்!

“சடைமுடிக் கடவுள், யோகச்
சிவனார்தம் நெற்றிப் பொட்டின்
நடுவிழிப் போல்இ ருக்கும்
நலம்பெருஞ் சுடர்நான்! சற்றே

துடித்திவண் விரிந்தால்..... யாவும்
சாம்பலாம்! அறிக!” என்றே
எடுத்திவண் கூறு தற்கோ
ஏறினாய் மலையின் மேலே!

‘ஏன்’எனும் கேள்விக் கிங்கே
எதிர்ப்படும் விடைதான் நீயோ!
‘தான்’எனும் பொருளுக் கெல்லாம்
தனிப்பெரும் உருதான் நீயோ!


காண்ஒளித் தேன்கூ(டு) ஆங்கே
காட்டும்ஓர் துளிதான் நீயோ!
வான்விழிச் சுடரே! உன்னை
வணங்கினேம் அருள்செய் யாயோ!


அநுயாமதி





யாரோ இவர் யாரோ?





'சோ'

அத்தியாயம் 20

ரவியையும், சின்னதுரையையும் பார்க்கப் புறப்பட்ட ரவியின் தகப்பனார் சபாபதி சரியாக இதே நேரத்தில் சின்னதுரையின் வீட்டை அடைந்தார். ''இவ்வளவு பெருந்தன்மையாக, பழைய விரோதத்தையெல்லாம் மறந்து ரவியோடு சகஜமாகப் பழகி, சித்ராவையும் மணம் முடிக்கச் சம்மதித்திருக்கிறான் சின்னதுரை. அப்படியிருக்க, சென்னைக்கு வந்தவுடன் முதலில் அவனைப் பார்ப்பதுதான் நியாயம்'' என்று தீர்மானித்துச் சின்னதுரை வீட்டை அடைந்தார்.

''சின்னதுரை! சின்னதுரை!'' என்ற குரல் கேட்டு மாடியிலிருந்து இறங்கி வந்தார் சின்னதுரை. ஹாலில் வந்து நின்று கொண்டிருந்த சபாபதியைப் பார்த்ததும் திகைத்தார். அவருடைய பழைய மனஸ்தாபங்களும், விரோதங்களும் தலைதூக்கிநின்று நர்த்தனமாடின.

அதையறியாத சபாபதியோ மிகவும் சகஜமாக, ''சின்னதுரை சௌக்கியமா?'' என்று மிகுந்த பரிவோடு விசாரித்தார்.

சின்னதுரைக்கு எரிச்சல் பற்றிக் கொண்டு வந்தது. 'ஒன்றுமே நடக்காதது போல் சர்வ சாதாரணமாகப் பேசுகிறானே, என்ன நெஞ்சழுத்தம் இவனுக்கு......' என்று எண்ணிப் பொருமினார்.

''என்ன?'' என்றார் சின்னதுரை.

'இத்தனை நாட்கள் கழித்துத் தன்னிடம் பேசுவதால் சின்னதுரைக்குச் சற்றுக் கூச்சமாக இருக்கிறது' என்று நினைத்த சபாபதி, ''பரவாயில்லை, சின்னதுரை. உட்காரு, பேசுவோம்'' என்று கூறி அங்கிருந்த சோபாவில் அமர்ந்தார்.

எரிமலை வெடித்தது போல் ஆத்திரம் பீறிட்டுக் கொண்டு வந்தது சின்னதுரைக்கு. ''எழுந்திரு!'' என்றார் சபாபதியைப் பார்த்து.

அவர் குரலில் இருந்த அதிகாரமும், கோபமும் சபாபதியை அப்படியே சோபாவிலிருந்து தூக்கிப் பிடித்து நிறுத்தின. ''என்னப்பா இது!'' என்றார்.

''வெக்கம், மானம் இருந்திருந்தால் இந்த வீட்டுக்குள்ளே காலை வெச்சிருப்பியா, நீ?...'' என்று சின்னதுரை கர்ஜித்தார்.

இந்தக் குரல் கேட்டு ஓடி வந்தாள் அவர் மனைவி. சகோதரனைப் பார்த்து அவள் அழைக்கும் சமயம் சின்னதுரை தம் மனைவியைப் பார்த்து ''நீ போ, உள்ளே!'' என்று கூறி, ''நீ போடா, வெளியிலே!'' என்றார் சபாபதியை.

சபாபதி தாம் ஏதோ தவறுதலாகப் புரிந்து கொண்டு வந்திருக்கிறோம் என்பதை இப்போது தெரிந்து கொண்டார். சின்னதுரைக்குத் தம் குடும்பத்தின் மீது இருந்த ஆத்திரம் தணியவில்லை என்பதையும் உணர்ந்தார். ஆனால் ரவி ஏன் அப்படிக் கடிதம்

எழுத வேண்டும் என்பதுதான் அவருக்குப் புரியவில்லை. வந்த இடத்தில் மானத்தைக் காப்பாற்றிக் கொண்டு வெளியேறினால் போதும் என்று ஒருவாறு சமாளித்துக் கொண்டு, ''நான் உன்னைப் பார்க்க வரவில்லை. என் மகனைப் பார்க்க வந்தேன்!'' என்றார் சின்னதுரையிடம்.

''சீ, போ! உன் மகன் இங்கே எங்கேடா வந்தான்?''

''சின்னதுரை, ஏதோ தவறு நடந்திருக்குது. நான் சொல்றதைக் கேளு!''

''மரியாதையா வெளியே போறியா? இல்லே கழுத்தைப் பிடிச்சுத் தள்ளட்டுமா! மானங்கெட்ட குடும்பம்!''

இதற்கு மேலும் அங்கு நிற்க விரும்பாத சபாபதி, அந்த வீட்டை விட்டு வெளியேறினார். 'மகனைத் தேடி வந்தானுமே! என்ன இது?' என்று சிந்தித்தவாறு நின்றார் சின்னதுரை.

ரவி, தணிகாசலம், முத்து, மூவரும் ஒரு டாக்ஸியில் சின்னதுரை வீட்டை நோக்கி வந்து கொண்டிருந்தனர்.

''அந்தச் சின்னதுரையை நீங்கதான் என் அப்பான்னு சொல்லி எப்படி ஏமாத்தறேன் பாருங்க ஸார்!'' என்று தணிகாசலத்திடம் கூறிக்கொண்டிருந்தான் ரவி.

டாக்ஸியில் முன்னால் வைக்கப்பட்டிருந்த விநாயகர் படம் திடீரென்று களிநடனம் புரிந்ததை யாரும் கவனிக்கவில்லை !

ரவி, தணிகாசலம், முத்து இவர்கள் மூவரும் சென்று கொண்டிருந்த டாக்ஸி சின்னதுரை வீட்டை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. சின்னதுரை வீட்டிலிருந்து புறப்பட்ட சபாபதி எதிரே மற்றொரு டாக்ஸியில் வந்து கொண்டிருந்தார். தனக்கு எதிரே தன் தந்தை வருவதை ரவி பார்த்து உடனே தனது டாக்ஸியை நிறுத்தினான். சபாபதி ஏறி வந்த டாக்ஸியும் நின்றது.

தனக்கு எதிரே நடப்பதைக் கவனிப்பது எப்போதுமே நல்லது. எதிரில் நடப்பதை அலட்சியம் செய்பவர்



களின் நிலை ஆட்டம் கண்டு விடும். எதிர்க் கட்சியை உதாசினம் செய்த வர்களின் சரித்திரமே இதற்கு உதா ரணம் அல்லவா?

எதிரே வருவதை எப்போதும் கவ னிக்கும் வழக்கமுள்ள ரவி இப்போதும் தன் தந்தையைப் பார்த்து நிறுத்தினன். டாக்ஸிகளை விட்டு எல்லோரும் இறங் கினர்கள்.

சபாபதியைப் பார்த்து, ''அப்பா!'' என்றான் ரவி.

''என்னடா எலே மகனே!'' என்று பதில் கொடுத்தார் தணிகாசலம்.

தம் மகனைப் பார்த்து, 'மகனே' என்று அழைக்கும் தணிகாசலத்தை வெறித்துப் பார்த்தார் சபாபதி. ''யார்ரா இது?'' என்றார் ரவியிடம்.

''நான் உனக்கு எல்லாம் விவரமாச் சொல்றேன் அப்பா. ஆமாம், இப்ப நீங்க எங்கே திடீர்னு மெட்ராஸ் வந்தீங்க?'' என்று ரவி கேட்கச் சபாபதி தாம் புறப்பட்டு வந்த காரணத்தை' யும், தமக்குச் சின்னதுரை வீட்டில் ஏற்பட்ட அவமானத்தையும் விவர மாகக் கூறினர்.

''அவசரப்பட்டுக் காரியத்தையே கெட்டுக் குட்டிச்சுவராக்கி விட்டீங்களே அப்பா!'' என்று ஆரம்பித்த ரவி தான் போட்ட திட்டங்களைச் சுருக்க மாகத் தந்தையிடம் வர்ணித்தான்.

''ஏண்டா ரவி! தணிகாசலத் தையே உன் அப்பான்னு சொல்லிக் கல் யாணத்தையே நடத்திடலாம்னு நினைச் சியா?'' என்று கேட்டார் சபாபதி.

''இல்லை அப்பா! கல்யாணத்தை நிச்சயம் செய்து கல்யாணப் பத்திரி கையையும் அச்சடிக்கிற அளவுக்குக் கொண்டு வந்திருப்பேன். அதுக்குப் பிறகு உண்மையைச் சின்னதுரையிடம் சொல்லி விட்டாலும் அவராலே ஒண் ணும் செய்ய முடியாதே!''

''இப்ப இந்தமாதிரி ஒரு குழப்பம் ஆயிருச்சே. நீ இப்ப அவன் வீட்டுக் குப் போன உடனே சின்னதுரை உன்னை வெளியிலேதானே துரத்துவான்.''



''அவ்வளவு சுலபமா இதை விட்டுட மாட்டேன். நீங்க சின்னதுரை வீட்டுலே 'என் மகன் ரவி இங்கே இருக்கானு'ன்னு கேட்டீங்களா, இல்லே 'என் மகன் இங்கே இருக்கானு'ன்னு கேட்டீங்களா?''

''உன் பேரைச் சொல்லலே. என் மகன் இருக்கானுன்னுதான் கேட்டேன்.''

''வெரி குட்'' என்றுன் ரவி. ''இப்ப நீங்க மூணு பேரும் நான் சொல்றபடி செய்யணும். அப்பதான் சின்னதுரைக்கு நான் சபாபதி மகன் என்கிற சந்தேகமே வராது.''

இரண்டு டாக்ஸிகளிலும் 'வெயிட்டிங் சார்ஜ்' ஏறிக் கொண்டேயிருந்தது. டாக்ஸி என்பது தெய்வத்தின் பல அம்சங்கள் பொருந்திய ஒரு சாதனம். ஆண்டவனுக்கும் டாக்ஸிக்கும் எவ்வளவோ ஒற்றுமைகள். தெய்வத்தை நம்பி மனிதன் பூலோகத்துக்கு வருகிறுன். டாக்ஸியை நம்பி ஓரிடத்துக்குச் செல்கிறுன். பூலோகத்துக்கு வந்த பிறகு தெய்வம் நம்மைத் திரும்பி அழைத்துச் செல்லக் காத்து நிற்கிறது. ஓரிடத்துக்குச் சென்ற பிறகு புறப்பட்ட இடத்துக்குத் திரும்பி அழைத்துச் செல்ல டாக்ஸி காத்திருக்கிறது. தெய்வம் காத்து நிற்கையில் நாம் பல காணிக்கைகள் செலுத்துகிறோம். டாக்ஸியில் காத்து நிற்கையில் அதற்கு வெயிட்டிங் சார்ஜ் தருகிறோம். சில சமயங்களில் பூலோகத்துக்கு வந்த பிறகு நம்மை நிர்க்கதியாக விட்டு விட்டுத் தெய்வம் நகர்ந்து விடுகிறது. ஓரிடத்துக்குச் சென்ற பிறகு நம்மைத் தவிக்கவிட்டு டாக்ஸி நகர்ந்து விடுவதும் சகஜம்தான். டாக்ஸியை நம்பி ஓரிடத்துக்குச் சென்ற பிறகு அதற்காகத் தன்னைத் தானே நொந்து கொள்ளவும் நேரிடுகிறது. தெய்வத்தை நம்பிப் பூலோகத்துக்கு வந்த மனிதர்கள் பலரும் 'ஏன் வந்தோம்' என்று வேதனைப்படுகிறுர்கள். டாக்ஸி பல சமயங்களில் நகர்வதேயில்லை; நின்று கொண்டேயிருக்கும். எவ்வளவு கூப்பிட்டாலும் வராது. போய்க் கொண்டிருக்கும் டாக்ஸிகளும் நடுவழியில் நின்று துன்புறுத்துவது உண்டு. அதாவது நின்று நின்றே நம்மைக் கொல்கிறது டாக்ஸி. தெரியாமலா சொன்னுர்கள். அரசன் அன்று கொல்வான், தெய்வம் நின்று கொல்லும் என்று! டாக்ஸியும் அப்படித்தான்!

ரவி தனது திட்டத்தை விவரித்தான். தணிகாசலம் தொடர்ந்து தன் தந்தையாகவே நடிக்க வேண்டியது. சபாபதி தன் மகன் முத்து என்று சொல்லிக் கொள்ள வேண்டியது. முதலில் ரவியும் தணிகாசலமும் முத்துவும், சின்னதுரை வீட்டுக்குப் போவார்கள். சின்னதுரைக்குச் சபாபதி தன் மகனைத் தேடி வந்ததாகக் கூறியது சந்தேகத்தைக் கிளறி விட்டிருக்கும். ஆகையால் ரவி அவர் வீட்டுக்குச் சென்ற உடனே முதல் காரியமாக ''என் சிநேகிதன் முத்துவின் தகப்பனுர் சபாபதி இங்கே வந்திருந்தாரா? அவரை வரச் சொல்லியிருந்தோம்'' என்று கூறி விட்டால் முத்துவைத் தேடித்தான் சபாபதி வந்தார் என்று சின்னதுரையை நம்பச் செய்து விடலாம். சிறிது நேரம் கழித்து, சபாபதியும் வந்தால் அவரை முத்துவின் தந்தையாக அறிமுகம் செய்து வைத்துச் சின்னதுரைக்குச் சபாபதி மகன் ரவி என்ற சந்தேகமே ஏற்படாமல் செய்து விடலாம்.

இப்படியாகத் தனது திட்டத்தை ரவி வர்ணிக்கக் கேட்டவுடனே சபாபதிக்குத் தன் மகனின் சாமர்த்தியத்தை நினைத்துப் பார்த்துப் பெருமைப்படாமல் இருக்க முடியவில்லை. இம்மாதிரி பொய் பித்தலாட்டங்களில் அவருக்கு ஈடுபாடு இல்லாவிட்டாலும் குடும்ப ஒற்றுமைக்காகச் செய்யப்படும் காரியம் என்கிற காரணத்தினுல் அதை ஏற்றுக் கொண்டார்.

ஓர் அயோக்கியத்தனமான காரியத்தைச் செய்யும்போது, ஒற்றுமையை ஏற்படுத்துவதற்காக அதைச் செய்கிறோம் என்று கூறுவது நம் நாட்டு வழக்கம். சின்னதுரையை ஏமாற்றி, அவருக்குச் சம்பந்தமே இல்லாத தணிகாசலத்தை அவர் குடும்பத்தில் திணிப்பது குடும்ப ஒற்றுமைக்காகவே என்பதுதான் ரவியின் வாதம்.

ரவியின் யோசனைப்படியே சபாபதியும் பின் தங்கி நிற்க, மற்ற மூவரும் சின்னதுரை வீட்டுக்கு முதலில் சென்றுர்கள்.

சின்னதுரை வீட்டில் அவர் இன்னமும் ''சபாபதி தன் மகனைத் தேடி வந்ததாகச் சொன்னுனே, யார் அவன் மகன்?'' என்ற பிரச்னையிலேயே உழன்று கொண்டிருந்தார். ரவி முதலானேர் வந்ததையே அவர் கவனிக்கவில்லை. ரவி, ''ஸார்!'' என்று அழைக்கத் திரும்பிப் பார்த்தார் சின்னதுரை. ரவி தொடர்ந்தான். ''ஸார்! இவன் என் சிநேகிதன். முத்துன்னு பேரு. இவன் அப்பா பேரு மிஸ்டர் சபாபதி. இவன் இங்கேதான் இருப்பான்னு சொல்லி அவரை இங்கே வரச் சொல்லியிருந்தோம். வந்தாரா?''



CMTM-10-123.TM

கலிங்கா பிலிக்ரி

கலிங்கா பிலிக்ரி நகைகள் உங்கள் அழகுக்கு அழகு சேர்க்கும் பிரத்யேக அணிகலன்கள்!



- நுண்ணிய வேலைப்பாடமைந்த வெள்ளி நகைகள்
- இன்றைய நாகரிகத்தைப் பிரதிபலிக்கும் நூற்றுக்கணக்கான டிசைன்கள்
- ஒவ்வொரு நகையும் ஒரு கலைச் சின்னம்

எங்கள் நகைகள் கீழ்க்கண்ட செட்டுகளில் கிடைக்கின்றன:

(1) ஜனப் (2) [illegible]
(3) ஜோர் (4) கிரண்
(5) லலித் (6) [illegible]
(7) மோகன்ஜ-ஆரம் (8) மயில் நடனம்
(9) உஷா (10) சித்ரா

தனித்தனி நகைகளை வாங்கி, நீங்களே உங்களுக்கு விருப்பமான முறையிலும் செட்டு சேர்க்கலாம்.

எல்லா நகைகளும் 92.5% சுத்த வெள்ளி அடங்கியவை. ஒவ்வொரு நகையிலும் அரசாங்கத்தால் அளிக்கப்பட்ட தர உத்திரவாத அடையாளச் சீட்டு இருக்கிறதா என்று பார்த்து வாங்கவும்.

நகை அழகின் சிகரம்— கலிங்கா பிலிக்ரி நகைகளை அணியுங்கள்

kfw

தலைமை ஆபீஸ் & தொழிற்சாலை:
ஸ்ரீ கலிங்கா கோ-ஆபரேட்டிவ் ஸில்வர் பிலிக்ரி ஒர்க்ஸ் லிமிடெட்.
மதுபட்ணு, கட்டாக்-3, ஒரிஸ்ஸா

கலிங்கா பிலிக்ரி ஒர்க்ஸ் எம்போரியங்கள் கீழ்க்கண்ட இடங்களில் உள்ளன:

1. 19, லாண்ட்ஸ்டௌன் ரோடு, கொலாபா, பம்பாய்-1
2. G, 56, கன்னாட் ஸர்க்கஸ், புது டில்லி-1.
3. 46/2/1A, காரியஹட் ரோடு, கல்கத்தா-19.
4. ஹாஸ்பிடல் ரோடு, பெங்களூர்.
5. 2/47-A, ராயப்பேட்டை ஹைரோடு, சென்னை-4.
6. ஸபையர் தியேட்டர் பில்டிங், மவுண்ட் ரோடு, சென்னை-6.
7. நயாஸரக், கட்டாக்-2.
8. மெயின் ரோடு, ராஞ்சி.
9. டாடாநகர் ரயில்வே ஸ்டேஷன், ஜாம்ஷட்பூர்.
10. 7, ஸெக்டர்-2, ரூர்கேலா.

CP-KFW-6]

சின்னதுரைக்கு முத்துவின் முகத்தைப் பார்க்கக் கூடப் பிடிக்கவில்லை. ''ஓ! இவனைத் தேடித்தான் அவன் வந்தானு? சரி சரி... முதல்லே இந்தப் பையனை வீட்டை விட்டு வெளியே போகச் சொல்லு'' என்றுர் சின்னதுரை.

''என்ன ஸார் இது? ஏன் இப்படிப் பேசறீங்க?'' என்றுன் ரவி, ஒன்றுமே அறியாதவன் போல.

''ரவி! நான் சொல்லலை! என் குடும்ப விரோதி. அவன்தான் சபாபதி. அவன் மகன் இந்தப் பய முத்து என் வீட்டுக்குள்ளே வந்ததே தப்பு. இப்பத்தான் அப்பன்காரன் வந்தான். வெளியிலே விரட்டினேன். இந்தப் பயலைக் கழுத்தைப் பிடிச்சு வெளியிலே தள்ளு!'' என்று பொரிந்து தள்ளினுர் சின்னதுரை.

''ஸார்! உங்களுக்குள்ளே ஆயிரம் விரோதங்கள் இருக்கலாம். ஆனுல் முத்து என் சிநேகிதன். சபாபதி மகன்... ரொம்ப நல்லவன். சபாபதியினுடைய அதிர்ஷ்டம்தான் மகனுக உருவெடுத்திருக்கிறது. என் சிநேகிதனை வெளியிலே அனுப்பினுல் அது என்னை உங்க வீட்டை விட்டு விரட்டின மாதிரி. அப்புறம் உங்க இஷ்டம்'' என்றுன் ரவி.

சின்னதுரையால் பதில் பேச முடியவில்லை. தம் ஆத்திரத்தை யெல்லாம் அடக்கிக் கொண்டார். ரவியை விரோதித்துக் கொள்ள அவருக்கு மனம் வரவில்லை. ''சரி சரி! உங்கப்பா முதல் முறையா என் வீட்டுக்கு வந்திருக்கிருரு. அவரை இன்னும் உட்காரக் கூடச் சொல்லலை. உட்காருங்க தணிகாசலம்!'' என்றுர் சின்னதுரை.

ரவியிடம் சேர்ந்த பிறகு யார் எதைச் சொன்னுலும் தாம் கேட்க வேண்டியதுதான் தலைவிதி என்று புரிந்து கொண்டிருந்த தணிகாசலம் மறு வார்த்தை பேசாமல் உட்கார்ந்து விட்டார்.

சின்னதுரை தம் மனைவி பார்வதியையும் அழைத்து வைத்துக் கொண்டு, உடனடியாகச் சித்ரா—ரவி கல்யாண விஷயத்தைப் பற்றித் தணிகாசலத்திடம் பேசி முடிவு செய்வது என்று தீர்மானித்துப் பார்வதியை அழைத்தார். பார்வதி அம்மாள் அங்கு வந்தார்கள். பல ஆண்கள் இருந்த அந்தச் சபையில் அந்தப் பெண்மணி மட்டும் வந்து நின்றது. பொட்டல் காட்டில் ஒரு பசுங் கொடி தோன்றினுற்போல் இருந்தது. என்னதான் ஓர் இடத்தில் ஆண்கள் கூடி நின்றுலும் ஒரு ஸ்திரீ ஜென்மம் அங்கு வந்தால் அந்த இடத்துக்கே ஓர் அலாதிக் களை பிறக்கத்தான் செய்கிறது. எந்த ஓர் இடத்துக்கும் பெண்கள் இருந்தால் ஒரு சோபை பிறக்கிறது. பெண்கள் அலங்காரப் பொருள்களே. அலங்காரப் பொருள்கள் அலங்காரமாக மட்டும் இருந்தால்தான் அழகு. அலங்காரத்துக்கு வைக்கப்பட்டிருக்கும் பொருள்கள் அதிகப்பிரசங்கித்தனமாகப் பேச ஆரம்பித்தால் அதை யாரால் சகிக்க முடியும்? மேஜையின் மேல் அலங்காரத்துக்காக மயில், அன்னம் போன்ற பல சிற்பங்களை, பொம்மைகளை வைக்கிறேம். அவை பேச ஆரம்பித்தால் எப்படி இருக்கும்? பயந்து அலறிப் புடைத்துக் கொண்டு ஓட மாட்டோமா? வீட்டுக்கு அலங்காரமான பெண்கள் பேச ஆரம்பித்தாலும் நமக்கு அதே கதிதான்.

பார்வதி அம்மாள் பேசாமல் வந்து நின்றுர்கள். சின்னதுரை பேச்சை ஆரம்பித்தார்: ''இதோ பாருங்கள் தணிகாசலம்! உடனே பேசிக் கல்யாணத்தை நிச்சயப்படுத்திடுவோம்!'' என்றுர். அந்தச் சமயத்தில் சபாபதி வந்து சேர்ந்தார். அண்ணனைப் பார்த்தும் கூடத் தன் கணவர் என்ன நினைத்துக் கொள்வாரோ என்று பயந்து பார்வதியம்மாள் வாய் மூடி நின்று சகோதர பாசத்தைக் கண்களிலேயே தேக்கி நின்றுள்.

''எதுக்குத் திரும்பி வந்தே?'' என்றுர் சின்னதுரை.

''என் மகன் முத்துவைப் பார்க்க!'' என்றுர் சபாபதி.

''அதான் பார்த்துட்டியே. அழைச்சிக்கிட்டுப் போய்த் தொலை'' என்று கத்தினுர் சின்னதுரை.



''ஏண்டா, உங்க தாத்தா கையாலேதான் மருந்து குடிப்பேன்னு பிடிவாதம் பிடிக்கிறே?''

''தாத்தா கை நடுக்கத்திலே பாதி மருந்து கீழே போயிடும்டா. அதனுல்தான்...!'' - ஆர். ரங்கராவ்

ரவி குறுக்கிட்டான்: ''ஸார்! திரும்பச் சொல்றேன். முத்து என் உயிருக்குயிரான நண்பன். சபாபதி அவன் தகப்பனார். அவர்களைக் கேவலமாகப் பேசினால் என்னாலே பொறுத்துக் கொள்ள முடியாது.''

''நீ வேறே என்னப்பா! என் வீட்டிலே இவங்க நுழையறதைப் பார்த்து என்னாலே சகிக்க முடியாது'' என்றார் சின்னதுரை.

''அது வேறே விஷயம். என் நண்பர்களை நீங்கள் மதிக்காட்டி, என்னை மதிக்கலேன்னுதான் அர்த்தம்.''

''சரி, சரி... உட்காரச் சொல்லு. என் தலைவிதி'' என்று சின்னதுரை சலித்துக் கொண்டு சபாபதி தம் வீட்டில் அமர்வதற்கு அநுமதி யளித்தார். கல்யாணப் பேச்சு தொடர்ந்தது. ''கல்யாணத்துக்கு நீங்க சம்மதிக்கிறீங்களா, தணிகாசலம்?'' என்று கேட்டார் சின்னதுரை.

தணிகாசலத்துக்கு ரவியின் தந்தையாக இந்தச் சந்தர்ப்பத்தில் பெரிய தவறான காரியத்தைச் செய்வதுபோல் இருந்தது; தயங்கினார்.

''என்ன சொல்றீங்க?'' என்றார் சின்னதுரை.

''நான் என்னத்தைச் சொல்றது?'' என்றார் தணிகாசலம்.

எங்கே தணிகாசலம் தன்னைக் காட்டிக் கொடுத்துவிடப் போகிறாரோ என்று ரவி பயப்பட ஆரம்பித்தான். அவருக்கு அவர் யார் என்பதை நினைவூட்டுவதற்காக அவரைப் பார்த்து, ''அப்பா! அப்பா! சொல்லுங்கப்பா!'' என்றான்.

தணிகாசலம் ஒரு தீர்மானத்துக்கு வந்தார். சின்னதுரையைப் பார்த்து, ''சபாபதி சரின்னு சொன்னால் எனக்குச் சரிதான்'' என்றார்.

''சபாபதிக்கும் உங்க மகன் ரவி கல்யாண விஷயத்துக்கும் என்ன சம்பந்தம்னு எனக்குப் புரியலே'' என்றார் சின்னதுரை.

''அதெல்லாம் உங்களுக்குப் புரியாது'' என்று சற்றுக் கடுமையாகவே கூறினார் தணிகாசலம்.

''உங்க மகன் ரவி கல்யாணத்துக்குச் சபாபதி சம்மதம் எதுக்கு?'' சின்னதுரைக்குச் சபாபதியின் சம்மதம் பெறுவதில் இஷ்டமே இல்லை.

''அது அப்படித்தான். என் மகன் ரவி கல்யாணத்துக்கு அவர் சம்மதம் கொடுக்கணும். அவர் மகன் முத்து கல்யாணத்துக்கு நான் சம்மதம் கொடுக்கணும்.'' தணிகாசலத்துக்கு ஓரளவாவது உண்மையைக் கூறிவிட்டோம் என்ற திருப்தி.

சபாபதி ''எனக்குப் பரிபூரண சம்மதம்'' என்றார்.

''உங்க மனைவியை ஒரு வார்த்தை கேட்க வேண்டாமா?'' என்றார் சின்னதுரை. சபாபதியின் சம்மதத்தோடு விஷயம் முடிவு பெறுவதை அவர் விரும்பவில்லை.

தணிகாசலம் பொறுமை இழந்தார். ''என் மனைவி சம்மதம் எதுக்குய்யா? அவதான் செத்துப்பூட்டாளே?''

''அட பாவமே! ரவி தாயில்லாப் பிள்ளையா?'' என்றார் சின்னதுரை.

''அது உனக்கு அநாவசியம்'' என்று குறுக்கிட்டார் சபாபதி. தம் மனைவி இறந்து விட்டாள் என்று சொல்வதை அவரால் கேட்டுக் கொண்டு சும்மா இருக்க முடியவில்லை.

''அநாவசியமா எங்க பேச்சிலே குறுக்கிடாதே'' என்று சின்னதுரை சபாபதியை எச்சரித்தார்.

''ஸார்! அவரை நீங்க அவமதிச்சா எங்கப்பாவை அவமதிச்ச மாதிரி'' என்று சின்னதுரைக்கு ரவி ஞாபகப் படுத்தினான்.

''கல்யாணத்தை எப்போ வைச்சுக்கலாம்?'' என்று தணிகாசலத்தைச் சின்னதுரை கேட்க, சபாபதி, ''எவ்வளவு சீக்கிரம் வெச்சுக்கலாமோ அவ்வளவு சீக்கிரம் வெச்சுக்கலாம்'' என்றார்.

சின்னதுரை மீண்டும் சபாபதியைப் பார்த்து, ''நீ ஒண்ணும் பேச வேண்டாம்'' என்றார் எரிச்சலோடு.

இதுவரை பேசாமல் இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த முத்து, இப்போது பொறுமை இழந்தான். ''என்ன ஸார் சும்மா பேசாதே, பேசாதேன்னு சொல்றீங்க? அவர் பாட்டுக்குப் பேசிக்கிட்டே இருக்காரு. நீங்க திரும்பிப் பேசாதேங்கிறீங்க. இதுக்கு ஒரு முடிவே கிடையாதா?'' என்றான் சின்னதுரையைப் பார்த்து.

சின்னதுரை சபாபதியின் மீது வந்த ஆத்திரத்தை யெல்லாம் முத்துவின் மீது கொட்டினார். ''நீ பேசாமல் இரு அறிவு கெட்ட பய!''

தணிகாசலம், ''யோவ்! அவனை அந்த மாதிரி யெல்லாம் பேசாதே. அப்பாலே நான் ரொம்பப் பொல்லாதவனா இருப்பேன்!'' என்று கோபமாகக் கூறினார்.

சின்னதுரைக்கு இந்த விநோத உறவு புரியவில்லை. ''இவனைச் சொன்னால் உங்களுக்கு என்ன ஸார்? இவன் அறிவு கெட்டவன்தான். இவன் ஒரு முட்டாள். இவன் அப்பன் ஒரு முட்டாள்'' என்றார்.

(தொடரும்)




கண்ணைப் பறிக்கும் வெண்மை! கச்சிதமான தூய்மை! எல்லாம் ஸர்ப் செயல்...அதன் எல்லை கடந்த வல்லமை! ஏராளமான நுரை, சலவையே வெகு எளிது. சிறுவர் ஆடை, சட்டை, சேலை....எதற்கும் நிகரில்லாத வெண்மை, சிகரமான தூய்மை. கைப்பட வீட்டிலே சலவை செய்திடவே கைகண்ட துணை ஸர்ப்.

ஸர்ப் சலவை: வெள்ளைவெளேர் சலவை

ஹிந்துஸ்தான் லீவர் தயாரிப்பு. லின்டாஸ்-SU.49-140 TM


சங்கீத

ஏன், நாதஸ்வரக் காரர்கள் மட்டும் தான் நாதஸ்வரத்தைப் பெரிதாக்கிக் கொண்டே வரணுமோ? நாங்கள் மட்டும் சும்மா இருப்போமா?






ஏன், வாய்ப் பாட்டுக் காரர் மட்டும் தான் நாலு சிஷ்யர்களுடன் சேர்ந்து பாடலாம் என்று சாஸ்திரமோ! நாங்க மட்டும் சும்மா இருப்போமா?




பாடும் போது மட்டும் தான் குருவுடன் சேர்ந்து பாடணுமா என்ன? அவர் சபையில் பேசும்போதும் எங்களுக்கு இடம் உண்டு



ரகளை!

சாமா



கடம் வித்வான் மட்டும் தான் பானையைத் தூக்கிப் போட்டு அப்ளாஸ் வாங்கணும்னு எழுதி வச்சிருக்கா? நாங்களும் ஒரு கை பார்த்துவிடுகிறோம்!

பல பேரிடம் சிக்ஷை சொல்லிண்டு ஒருத்தர் தான் தட்டணும்னு சட்டமா? நாங்கள் எல்லோரும் தான் தட்டுவோம்!







சொகுசா காலக்ஷேபம் செய்தால் எல்லோரும் தூங்கறா. இப்படிச் செய்து ரசிகர்களை ஒரு கை பார்த்து விடுகிறேன்!


மகத்தான
தொல்பழங் காலச்
சிறப்பின் பிரதிபலிப்பு
மபத்லால் க்ரூப்
வாயில்களின்
மணியான வனப்பு
மறுமலர்ச்சி, மறைந்திட்ட
மரபின் மறுபிறப்பு.
மபத்லால் க்ரூப்
2x2 வாயில்கள் & லினோக்கள்
'டெரீன்/காட்டன்', 'டெபிலைஸ்டு'
மற்றும் 'மஃபினிஷ்டு' தரம்.
நியு ஷராக், (ஷராக்) அஹமதாபாத் . நியு ஷராக், நாடியாத் . ஸ்டேன்டர்ட், பம்பாய் . ஸ்டேன்டர்ட், (நியு சைனா) பம்பாய் . ஸ்டேன்டர்ட், தேவாஸ் ஸாஸூன், பம்பாய் . ஸாஸூன், (நியு யூனியன்) பம்பாய் . ஸூரத் காட்டன், ஸூரத் . மபத்லால் பைன், நவ்ஸாரி . மிஹிர் டெக்ஸ்டைல்ஸ், அஹமதாபாத்
M. 219 TM



ர. சு. நல்லபெருமாள்

அத்தியாயம் 48

எங்கிருந்தாலும் இன்பமாயிரு!

*ர*ங்கமணி திரிவேணியின் முகத்தைக் கைகளில் ஏந்திக்கொண்டு கதறி அழுதான். அறுநூறு உயிர்களைக் காத்த தெய்வம் அவன் மடியில் உயிரற்றுக் கிடந்தது. தீக்ஷிதர் நிற்க முடியாமல் சோர்ந்து போய்க் கீழே உட்கார்ந்து விட்டார். பொங்கி வந்த அழுகையை வாயைப் பொத்தி அடக்க முயன்று கொண்டிருந்தார்.

சிவானந்தமும் நிலை குலைந்து விட்டான். அவனுடைய கண்களிலிருந்து பெருகிய கண்ணீர், திரிவேணியின் பாதங்களில் விழுந்து சிதறியது. ஒன்றும் செய்யத் தோன்றாமல் திரிவேணியின் முகத்தையே வெறிக்கப் பார்த்துக் கொண்டு சிலையாக நின்றான். திடீரென்று தன்னுடைய கால்களை யாரோ தீண்டுவது போல் இருக்கவே திடுக்கிட்டுக் குனிந்து பார்த்தான்.



ரங்கமணி தன் இரு கரங்களையும் சேர்த்துக் குவித்து, சிவானந்தத்திடம் தன்னை ஒப்படைப்பதுபோல் நீட்டினான். நீட்டிய கரங்களில் பக்கத்தில் நின்ற ஒரு போலீஸ்காரர் விலங்கை மாட்டினார். அந்தக் காட்சியைக் காணச் சகியாமல் சிவானந்தம் கண்களை மூடிக் கொண்டான்.

அந்த இடத்தில் தான் ஒரு போலீஸ் அதிகாரியாக நிற்க வேண்டி வந்து விட்ட விதியை எண்ணி மனம் புழுங்கினான் சிவானந்தம். அந்த உடையில் இருக்கவே மனம் கூசியவனாய், கூனிக் குறுகி நின்றான்.

இவ்வளவையும் நன்றாகப் பார்க்க வேண்டும் என்ற ஆவலில் நிலவு, மேகத்தை விட்டுப் பூரணமாக விலகி வெளியே வந்து விட்டது. தாமிரபரணி அழுவது போல் இரைந்துகொண்டிருந்தது. தவளைகள் ஒப்பாரி வைத்துக்கொண்டிருந்தன. ஆலமரம் கூட அழுவது போல் அந்தச் சமயத்தில் கிளைகளிலிருந்து மழைத் துளிகளைக் கீழே சிதறியது.

சுவர்க் கடிகாரம் ஒரு மணி அடித்தது. கமலவாசகிக்குத் தூக்கம் வரவில்லை. டயரிகளைப் படித்ததனால் ஏற்பட்ட அதிர்ச்சியில் பிரமிப்படைந்திருந்தாள். நடு ஜாமத்துக்கு மேலாகியும் சிவானந்தம் திரும்பவில்லையே என்ற நினைவு வேறு அவளை அழுத்திக்கொண்டிருந்தது. படுக்கை அறை விளக்கை அணைத்து விட்டு ஜன்னல் பக்கம் வந்து நின்றாள். ஜன்னல் வழியாக ஈரக் காற்று வீசியது. ஜன்னல் கதவை விரியத் திறந்து விட்டாள். வானத்தில் சந்திரன் மேகங்களுக்குள் ஒளிந்து விளையாடிக் கொண்டிருந்தது. கமலவாசகியின் நினைவெல்லாம் சேர்மாதேவி பாலத்துக்குச் சென்றுவிட்டது.

''அத்தனை பேரையும் பிடித்துத் தூக்கில் தொங்க விட வேண்டும்'' என்று அவள் வாய் முணங்கியது. அவளுடைய மனக் கண் முன் ரங்கமணி தூக்கில் தொங்குவது போல் தோன்றியது. அவனுடைய முகம் அவளைப் பார்த்து வெறுப்பை உமிழ்வது போல் இருந்தது. அந்தக் காட்சி அவள் மனத்தை என்னவோ செய்தது. கண்களை இறுக மூடிக் கொண்டாள். கண்களை மூடினாலும் நினைவு நெஞ்சில் புரண்டது. மனம் கடந்த காலத்துக்குள் புகுந்து திரிந்தது. வெகு நேரத்துக்குப் பிறகு, அலுத்துச் சுயநினைவை அடைந்த போது, மனத்தில் மிஞ்சியவை கசப்பும், வேதனையும்தான்.

சுவர்க்கடிகாரம் இரண்டு மணி அடித்தது. அதே சமயம் வாசலில் கார் வரும் சத்தம் கேட்டது. கமலவாசகி திரும்பி வாசற்பக்கம் பார்த்தாள். ஒரு ஜீப் கார் உறுமிக் கொண்டே வாசலில் வந்து நின்றது. பரபரப்புடன் வாசல் பக்கம் விரைந்தாள். சிவானந்தத்தை இறக்கி விட்டு ஜீப் சென்று விட்டது. வாசல் நடையில் சிவானந்தம் ஏறிக்கொண்டிருந்தபோது கமலவாசகி வாசலுக்கு வந்து விட்டாள்.

''என்ன... எல்லோரையும் பிடித்து விட்டீர்களா?'' என்று பரபரப்புடன் கேட்டாள்.

''உம்... உம்...'' என்று முணகிக் கொண்டே வீட்டுக்குள் சென்றான் சிவானந்தம். வாசலில் எரிந்த மின்சார விளக்கொளியில் அவனுடைய முகம் சோர்ந்து போயிருந்ததைக் கண்டாள். அவனைப் பின்தொடர்ந்து வீட்டுக்குள் சென்றாள்.

''யாரும் தப்பிவிட வில்லையே...?'' கமலவாசகி ஆவலோடு கேட்டாள். சிவானந்தம் ஒன்றும் பதில் சொல்லாமல், போலீஸ் உடைகளைக் களைந்து கொண்டிருந்தான். கமலவாசகி, பொறுமை இழந்து தவித்தாள்.

''நீங்கள் ஏன் இப்படி அசந்து போயிருக்கிறீர்கள்? பாலத்தைத் தகர்த்து விட்டார்களா...?'' என்று பதற்றத்துடன் கேட்டாள்.

''கொஞ்ச நேரம் என்னை நிம்மதியாக இருக்க விடேன்'' என்று எரிந்து விழுந்தான் சிவானந்தம். கமலவாசகி, துணுக்குற்றாள். அவனையே சிறிது நேரம் உற்றுப் பார்த்தாள்.


''ஏன், என்ன நடந்தது...?''—கமலவாசகி மீண்டும் கேட்டாள்.

''திரிவேணி இறந்து விட்டாள்...'' என்றான் சிவானந்தம். இதைச் சொல்லும்போது, அவன் முகம், வேதனையால் வாடியது; குரல் தழுதழுத்தது.

''ஆ ... அப்படியா ...? தொலைந்தாளா....?'' — உற்சாகத்தோடு கத்தினாள் கமலவாசகி. அவள் பேசி வாய் மூடுமுன் அவள் கன்னத்தில் பளார் என்று விழுந்தது. அந்த அதிர்ச்சியில் நிலைகுலைந்து பக்கத்திலிருந்த கட்டிலில் தடுமாறி விழுந்தாள். அடி விழுந்த கன்னத்தை ஒரு கையால் அழுத்திக் கொண்டே எழுந்து உட்கார்ந்தாள். எதிர்பாராத தாக்குதலால் அதிர்ந்து



முதல் முயற்சி —3—



விட்ட கமலவாசகி, பிரமிப்புடன் சிவானந்தத்தை ஏறிட்டுப் பார்த்தாள். சிவானந்தம், எரிமலையாகப் பொங்கினான்.

"அட, சீ... நீ பெண்தானா ...? திரிவேணியின் தியாகத்துக்கு முன்னால் நீயெல்லாம் அற்பப் புழு ... கேடு கெட்ட ஜன்மம்... த்தூ ..." என்று அவள் முகத்தில் துப்பிவிட்டுத் தன் அறைக்குள் நுழைந்து விட்டான் சிவானந்தம்.

கமலவாசகியால் அந்த அதிர்ச்சியைத் தாங்க முடியவில்லை. கட்டிலில் விழுந்து பொருமினாள். வெகு நேரம் அவளுடைய விசும்பல் ஒலி கேட்டுக்கொண்டிருந்தது.

மறுநாள் முழுதும் கமலவாசகி அந்த அறையைவிட்டு வெளியே வரவேயில்லை. சிவானந்தம் அடித்த அடி அவள் இதயத்தையும் தாக்கியிருந்தது.

மறுநாள் மாலைவரை அவள் அறைக்குள்ளேயே இருந்தாள். மாலையில் சிவானந்தம் வெளியே சென்றிருந்தபோது கமலவாசகி வராந்தாவுக்கு வந்தாள். தலை கலைந்து, முகம் களை இழந்து, அழுத கண்கள் வீங்கி, பார்க்க விகாரமாக வந்து நின்றாள். முகத்தை நல்ல வேளையாகக் கண்ணாடியில் பார்க்கவில்லை. பார்த்திருந்தால் தன் முகத்தைப் பார்த்தே பதறியிருப்பாள். நாள் முழுதும் சாப்பிடாததாலும், உள்ளத்தில் வீசிய புயலின் வேகத்தாலும் அவள் உடல் வாடி வதங்கி விட்டது.

பக்கத்து அறையில் போன் மணி ஒலித்தது. போனை எடுக்காமலேயே வராந்தாவில் நின்றாள். வேலைக்காரன் ஓடிச் சென்று போனை எடுத்துப் பேசினான்:

"ஹலோ... இது டெபுடி எஜமான் பங்களா... எஜமான் இல்லையே... யார் பேசுவது... சி. ஐ. டி. கிருஷ்ணனா.... எஜமான் எப்போது வருவார்களோ தெரியாது.."

கிருஷ்ணன் என்ற பெயரைக் கேட்டதும் கமலவாசகி பரபரப்புடன் அந்த அறைக்குள் வந்தாள். போனை வாங்கிப் பேசினாள். "ஹலோ... சி.ஐ.டி. கிருஷ்ணனா... ஐயா இல்லை... நீர் நேற்று சேர்மாதேவி போயிருந்தீரா? என்ன நடந்தது?" என்று ஆவலோடு கேட்டாள். கிருஷ்ணன் முந்தின நாள் இரவு சேர்மாதேவிப் பாலத்துக் கருகில் நடந்த சம்பவங்களை விவரித்தார். கமலவாசகி மௌனமாக அனைத்தையும் கேட்டுக் கொண்டிருந்தாள். சில சமயங்களில் வியப்பினால் அவள் புருவங்கள் உயர்ந்தன. கடைசியில் கிருஷ்ணன் சொன்னதைக் கேட்டதும் கமலவாசகி, அதிர்ந்து விட்டாள். அவர் சொன்னார்: "எஜமான் வேலையை ராஜிநாமாச் செய்து விட்டார்கள். இன்று காலையில் மேல் அதிகாரிகளிடம் ராஜிநாமாவை எழுதிக் கொடுத்து விட்டார்கள்."

"ஆ... வேலையை ராஜிநாமா செய்து விட்டாரா...?" என்று கூவினாள் கமலவாசகி. அதிர்ந்து போய்ச் சிலையாக நின்று விட்டாள். போனைக் கீழே வைத்துவிட்டு, தன் அறைக்குள் நுழைந்து கதவை மூடிக் கொண்டாள்.

மூன்று நாட்களுக்குப் பிறகு சிவானந்தத்தின் வீட்டு வாசலில் நின்ற நபரைக் கண்டு வேலைக்காரன் திகைத்து விட்டான். கண்களைக் கசக்கிக் கொண்டு பார்த்தான். சந்தேகமே இல்லை. சிவானந்தம்தான் நின்று கொண்டிருந்தான். ஆனால் இதென்ன...?

கதர் வேட்டியும் சட்டையும் அணிந்து காந்திக் குல்லாயுடன் காட்சியளித்தான் சிவானந்தம்! முகத்தில் உற்சாகம் பொங்கியது. வேண்டாத பந்தத்திலிருந்து விடுபட்ட சுதந்திர உணர்ச்சியால் அவன் மனம் குதூகலித்தது.

ஆயிரமாயிரம் அச்சுறுத்தல்கள்

அமெரிக்க ஜனாதிபதி திரு ஜான்ஸனின் பாதுகாப்பைக் கண்காணிக்க ரகசிய முறையில் இயங்கி வரும் ஸ்தாபனம், ஜனாதிபதியின் உயிருக்கு வரும் அச்சுறுத்தல்கள் சம்பந்தமாக வருடத்துக்குப் பதினாயிரத்துக்கு மேற்பட்ட விசாரணைகளைக் கையாளுகிறதாம்.

1963ம் ஆண்டில் அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த திரு கென்னடி சுட்டுக் கொல்லப்பட்டவரை அவர் சம்பந்தமாக ரகசியப் பாதுகாப்பு ஸ்தாபனம் கையாண்ட விசாரணைகளின் எண்ணிக்கை தொள்ளாயிரமாம் !

மேற்கூறிய ரகசிய ஸ்தாபனத்தில் 1963ல் பணிபுரிந்த ஏஜண்டுகளின் எண்ணிக்கை 350. இப்போது இது 575 ஆக உயர்த்தப் பட்டிருக்கிறது.

ஆதாரம்:
இந்தியன் எக்ஸ்பிரஸ்

தகவல்:
எஸ். அனந்தராமன்



''ஐயா...!'' — பின்னாலிருந்து சமையல்காரப் பெண் கூப்பிடுவது கேட்டுத் திரும்பினான்.

''அம்மா மூன்று நாட்களாகச் சாப்பிடவே இல்லே'' என்றாள் சமையல்காரி, வருத்தத்துடன்.

''அதற்கு நான் என்ன செய்ய முடியும்...?' அவள் அப்பாவுக்குத் தந்தி கொடுத்திருக்கிறேன். இனி, அவர் பாடு அவள் பாடு...'' என்றான் சிவானந்தம்.

''நீங்கள் சமாதானப்படுத்தினால்...'' என்று இழுத்தாள் சமையல்காரி சிரித்துக்கொண்டே.

''கடவுளே வந்தாலும் அவளைச் சமாதானப் படுத்த முடியாது'' என்றான் சிவானந்தம் சற்றுக் கோபத்துடன். பிறகு சொன்னான்: ''மத்தியானம் சாப்பிட வர மாட்டேன். பத்து மணிக்கு வெளியே போகிறேன். எனக்காக ஒன்றும் செய்ய வேண்டாம்.''

''அம்மா கேட்டால் நீங்கள் எங்கே போயிருப்பதாகச் சொல்ல வேண்டும்?'' என்று கேட்டாள் சமையல்காரி.

''நீ ஒன்றும் சொல்ல வேண்டாம். அவளுக்குத் தெரிந்து ஆக வேண்டியது ஒன்றுமில்லே... சொல்லேன், சேர்மாதேவிப் பாலத்தின் சதியில் கைதான என் நண்பரைப் பார்க்கப் போகிறேன்'' என்றான் சிவானந்தம் சற்றுக் கடுமையாக. எஜமானரின் கோபத்தை உணர்ந்த சமையல்காரி மெதுவாக வீட்டுக்குள் நழுவி விட்டாள்.

காலையில் பத்து மணிக்கு வாசலில் சிவானந்தத்தின் கார் நின்று கொண்டிருந்தது. வீட்டுக்குள்ளிருந்து சிவானந்தம் வெளியே வந்து காரில் ஏறப்போன சமயத்தில் சமையல்காரி ஓடி வந்தாள்.

''ஐயா.. ஐயா ..'' என்று மேல் மூச்சு வாங்கக் கூப்பிட்டுக் கொண்டே ஓடி வந்து நின்றாள். சிவானந்தம் திரும்பிப் பார்த்தான்.

''கொஞ்சம் இருங்கள். அம்மாவும் வருகிறார்கள்'' என்றாள் சமையல்காரி உற்சாகத்துடன். சிவானந்தம் ஒன்றும் புரியாமல் திகைப்புடன் வீட்டுக்குள் பார்த்தான்.

சிறிது நேரத்தில் வீட்டுக் குள்ளிருந்து கமலவாசகி வாசலுக்கு வந்தாள். அவளைக் கண்டதும் வியப்பினால் கண் விழி பிதுங்க நின்றான் சிவானந்தம். அவனால் தன் கண்களையே நம்ப முடியவில்லே.

சந்தேகமே இல்லே. அவனுக்கு எதிரே வந்து நின்றவள் கமலவாசகியேதான்.

என்ன இந்தக் கோலம்...!

எளிமையான கதர்ப் புடவையும், ரவிக்கையும் கமலவாசகியின் தோற்றத்தையே மாற்றி விட்டன!

தோற்றத்தை மட்டும்தானா?

உள்ளத்தைக்கூடப் புடம் போட்டு விட்டனவே. முகத்தில் புன்னகை படரத் தன் எதிரே நின்ற புதுமைப் பெண்ணை ஏற இறங்கப் பார்த்தான்; தான் காண்பது உண்மையிலேயே நடக்கும் சம்பவமா அல்லது பிரமையா அல்லது ஏதாவது கனவு காண்கிறோமா என்று புரியாமல் குழம்பினான்.

''கமலா, என்ன இது...?'' — சிவானந்தம் வியப்பினால் கூவினான். கமலவாசகி சிரித்தாள். சிவானந்தத்தின் உள்ளமும் உடலும் சிலிர்த்தன. பரவசமடைந்தவனாய் அவளை அப்படியே வாரி அணைத்துக் கொண்டான். அந்தக் காட்சியைக் கண்ட சமையல்காரப் பெண் வெட்கத்தினால் முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டாள்.

சிறிது நேரத்தில் சமையல்காரி திரும்பிப் பார்த்தபோது கார், வாசலைக் கடந்து தெருவில் சென்று கொண்டிருந்தது. சிவானந்தத்தின் பக்கத்தில் கமலவாசகி அமர்ந்திருந்த காட்சியை ரசித்துக்கொண்டு நின்றாள். **(தொடரும்)**

மணிக்கு ஒரு விழா

திருவாசகமணி, திருக்குறள் மணி, நாவலர் மணி, சிவபக்த மணி என்று எத்தனையோ மணி மணியான பட்டங்களைப் பெற்ற இவர் தம் மணிவிழா வயதையும் அடைந்திருக்கிறார்.


சாமிமலை மிட்டாதாரும் அம்மாப்பேட்டை ஜமீந்தாரும் திருநெல்வேலிப் பண்ணையாரும் கட்சிக்காரர்களாக இருந்தால் அந்த வழக்கறிஞர் அமோகமாகச் செல்வம் கொழிக்கும் வாழ்க்கை நடத்தலாம். வழக்குகளில் வெற்றி பெறலாம். வானளாவப் புகழ் சேர்க்கலாம்.

அந்த வழக்கறிஞருக்கு வாசாலகம் இருந்தது; வாய்ப்பும் இருந்தது. அவர் விரும்பியிருந்தால், அவர் வீட்டில் மேலே சொன்னது போன்ற கட்சிக்காரர்கள் கூடியிருப்பார்கள். ஆனால் அவர் தொழிலை ஆரம்பித்த சில ஆண்டுகளுக்குள்ளேயே புதுப் பாதையில் நடக்கத் தொடங்கினார். சில புதிய கட்சிக்காரர்களை இவரே நாடினார். இவர் புகழை அவர்கள் பாடுவதற்கு இடம் கொடுக்காத வகையில் அவர்கள் புகழை இவர் பாடத் தொடங்கினார். பணத்தைவிடப் பயனே இந்தப் பாதையில் நிறையக் கிடைக்கும் என்று அவருக்குத் தெரியும். அப்படிக் கிடைத்த பயனை அவர் தம் சொந்தக் கணக்கில் பாங்கியில் போட்டு வைக்கவில்லை. இருப்புப் பெட்டியில் பூட்டி வைக்கவில்லை. மற்றவர்களுடன் தாராளமாகப் பகிர்ந்துகொள்ளவும் தயாரானார்.

இந்த விசேடக் கட்சிக்காரர்கள் வேறு யாருமில்லை. சுந்தரரும், அப்பரும், மாணிக்கவாசகரும், ஞானசம்பந்தரும் மற்றவர்களும் தான். இவர்களை நாடிப் போனவர் திரு கே. எம். பாலசுப்பிரமணியம், பி. ஏ. பி. எல். இந்தக் கட்சிக்காரர்களால் இந்தச் சட்ட விற்பன்னருக்குக் கிடைத்த பட்டம் 'திருவாசகமணி' என்பதாகும். பார்ஸிலிருக்கும் 'மணி' திருவாசகமணி பட்டத்துக்கு முன் எம்மாத்திரம் ?

சமீப காலத்தில் சுமார் எட்டு மாத கால அளவுக்கு மலேயா நாட்டில் சுற்றுப் பிரயாணம் செய்து சமயச் சொற்பொழிவுகளாற்றிச் சமயபேதமில்லாத அன்புக்குப் பாத்திரமாகித் தாய்நாடு திரும்பியிருக்கும் திருவாசகமணி அவர்கள், இந்த டிசம்பர் மாதத்தில் தம்முடைய ஐம்பத்து ஒன்பதாவது பிராயத்தைத் தாண்டி அறுபதாம் பிராயத்தில் அடியெடுத்து வைக்கிறார். கடந்த காலத்தில் செய்த மொழி, சமய, சமூகத் தொண்டுகளைவிடப் பன்மடங்கு அதிகமாக வருங்காலத்தில் செய்ய ஆர்வம் கொண்டிருக்கிறார்.

தமிழில் போல் ஆங்கிலத்திலும் மடை திறந்த வெள்ளம் போல், கேட்போர் பிரமிக்கும் வண்ணம் பேசும் வன்மை இவருக்கு இருப்பதால் ஆங்கிலம் தெரிந்த எந்த அயல் நாட்டவர்களுக்கும் ஹிந்து சமயத்தின் கோட்பாடுகளையும் அருமை பெருமைகளையும் இவரால் உணர்த்த முடிகிறது. எங்கும் இவர் ஹிந்து சமயத்தின் தனித்தன்மைகளைப் பற்றியே பேசுவது இல்லை. இஸ்லாம், கிறிஸ்தவம் போன்ற இதர சமயங்களுக்கும் ஹிந்து சமயத்துக்கும் உள்ள அடிப்படை ஒற்றுமைகளை ஆராய்ந்து விண்டு காட்டுவதின் மூலம் 'ஒன்றே உலகம், ஒன்றே சமயம்' என்ற தத்துவ வளர்ச்சிக்குச் சிறந்த வியாக்கியானம் அளிக்கிறார்.



பினங்கு நகர மக்கள் சார்பாக, வள்ளல் ரேனு, "நாவலர் மணி" என்ற பட்டம் வழங்கிப் பொன்னாடை போர்த்தித் திருவாசகமணியைக் கௌரவித்தபோது எடுத்த படம்.

இவர் தமிழுக்குச் செய்திருக்கும் சிறந்த சேவை, திருக்குறளை ஆங்கிலத்தில், அதே கட்டுக்கோப்பான வெண்பா உருவில் மொழிபெயர்த்து அளித்திருப்பதாகும்.

திரு பி. வி. ராஜமன்னார், திரு எஸ். ராமச்சந்திர ஐயர், ஸ்ரீ பதஞ்சலி சாஸ்திரி போன்ற புகழ் பெற்ற நீதிபதிகள் ஒரு காலத்தில் வழக்கறிஞராக விளங்கிய திருவாசகமணியின் இந்தத் திருக்குறள் மொழிபெயர்ப்பு குறித்துச் சாதகமான ஏகோபித்த தீர்ப்பை வழங்கி விட்ட பின்னர் அப்பீலுக்கு இடம் ஏது?

எங்கோ நீதி மன்றக் கட்டடத்துக்குள் ஒலித்துக்

கொண்டிருக்க வேண்டிய மணிக்குரல், அருமையான ஆங்கிலக் கவிதைக் குறளாக உலகின் பல பாகங்களிலும் ஒலிக்கிறது.

1951ம் ஆண்டு ஜனவரி 22ந் தேதி இந்த மொழிபெயர்ப்புப் பணியைத் தொடங்கியவர் முதல் அத்தியாயத்தை இரண்டு மணி அவகாசத்தில் முடித்துவிட்டுப் பேனாவையும் கீழே வைத்து விட்டார். முழுப் பணியையும் இவர் முடித்தது 1960 மே மாதம் 5ந் தேதி தான். ஆனால் இந்த ஒன்பது ஆண்டு காலத்தில் இவரால் இந்த வேலைக்கென்று ஒதுக்க முடிந்த நாட்கள் முப்பத்தி ஏழேதான்!

அனாயாசமான ஆங்கில ஞானமுள்ள இவருக்கு சாக்ரடீஸும் ஷேக்ஸ்பியரும், வால்டேரும், வால்டர் ஸ்காட்டும், பேகனும், பென்ஜான்ஸனும், போப்பும் பைரனும் உதவி யிருக்கிறார்கள், திருக்குறள் வாசக உரை விளக்கங்களை எழுதும்போது!

ஆண்மையும் கம்பீரமும் வடமொழியில் இருக்கிறதென்றால், பெண்மையின் நளினமும் இனிமையும் தமிழ்மொழியில் இருக்கின்றன என்று பேசும் இவர் உபநிஷத்துக்களையும், தமிழ் மறைகளையும் ஒரே நோக்கில் பயின்றிருக்கிறார்.

ஒரு காலத்தில் ஹிந்தி மொழி ஆதிக்கத்தை அரசியல் ரீதியாக எதிர்த்துச் சிறை சென்றுள்ளவரிவர்.

எங்கோ அரசியல் கடலில் அலை துரும்பாகப் போகவிருந்த இவரை, சமயக் கடலில் மாபெரும் கப்பலாக மாற்றியவர் திரு வி.க. அன்னாருடன் நெருங்கப் பழக ஆரம்பித்தவுடன், திருவாசகமணி தம் அரசியல் சட்டையைக் கழற்றி வைத்துவிட்டுச் சமயத் துறையில் அக்கறை காட்ட ஆரம்பித்தார். திருவாசகத்தில் திளைத்தார்.

காஞ்சி காமகோடி பீடம் இவருக்குப் பொன்னாடை போர்த்தி ஆசி அளித்தது. சிருங்கேரி பீடம் 'சிவபக்த மணி' பட்டத்தைச் சூட்டிப் பாராட்டியது.

'ஆங்கிலம் அறவே ஒழிய வேண்டும்' என்ற கொள்கை கொண்டோர் நடக்கும் பாதையை விட்டு விலகி நடக்கும் திருவாசக மணி, 'நம் பாரதத்தின் பெருமையையும் தமிழின் அழகையும் வெளி உலகம் புரிந்து கொள்ள வேண்டுமென்றால் அதற்கு ஆங்கிலம் ஒன்றுதான் உதவ முடியும்' என்ற அபிப்பிராயம் கொண்டவர்.

திருவாசகத்தையும், திருக்குறளையும், ஏனைய நாட்டோர் கவனத்துக்கும் சிந்தனைக்கும் அளித்திருக்கும் திருவாசகமணி, பெரிய புராணத்தையும், தேவாரம் திருவாய்மொழியையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பதை லட்சியமாகக் கொண்டிருக்கிறார். அவருடைய இந்த அவாவும் செவ்வனே பூர்த்தியாக ஆண்டவன் அவருக்கு நீண்ட ஆயுளையும் ஆரோக்கியத்தையும் அளிக்க வேண்டும்.

தமிழ்மறைகளையே தங்கள் குழந்தைச் செல்வங்களாகக் கொண்ட திருவாசகமணி—சௌந்தரவல்லி தம்பதி மணியான தம்பதியாக நீடூழி வாழ அவர்கள் மணி விழாக் காணும் நன்னாளில் வாழ்த்துகிறோம். - மேனா

எழுநூறாண்டு இரகசியம்

ஐம்பதாண்டுகளுக்கு முன் மகாநுபாவிகளின் மொழியைப் புரிந்து கொள்ள, வி. எல். பாவே முயற்சி தொடங்கியபோது, ''இது முடிகிற காரியமா?'' என்று மராட்டிய அறிவுலகம் சிரித்தது.

மகாநுபாவிகள் எனப்பட்ட சாதுக்கள் மகாராஷ்டிரத்தில் பன்னிரண்டாம் நூற்றாண்டிலிருந்து உண்டு. இவர்கள் தங்களது சமயக் கருத்துக்களை மாற்றார் அறிந்து கொள்ள முடியாதபடி ஒரு சங்கேத மொழியில் எழுதி வைத்திருந்தனர். ஏழு நூற்றாண்டுகளாக இச்சங்கேத மொழியை வெளியுலகம் புரிந்து கொள்ள முடியாத இரகசியமாகவே காத்து வந்தனர். இம்மொழியைப் புரிந்து கொள்ள லோகமான்ய திலகர், டாக்டர் ஆர். ஜி. பண்டார்கர் போன்ற பேரறிஞர்கள் முயன்றும் பயனில்லை. இதனால் தான் பாவே முயற்சி தொடங்கியதும் அறிவுலகம் இது அசாத்தியம் என்று கருதி விட்டது.

ஆனால் 1925ல் பாவே வெளியிட்ட 'மகாராஷ்டிர சாரஸ்வத்' என்ற நூலைப் பார்த்ததும், முன்பு அவநம்பிக்கைப் பட்டவர்கள் யாவரும் ஆச்சரியத்தில் ஆழ்ந்தனர். திலகராலும் பண்டார்கராலும் இயலாததை பாவே செய்து காட்டியிருந்தார்! மகாநுபாவி இலக்கியங்களிலிருந்து பல பகுதிகளைப் பிரசுரித்து, அவற்றுக்கு விளக்கமும் அளித்திருந்தார்.

உப்பளங்கள் மிகுந்த தாணாவில் ஓர் உப்பு வியாபாரிதான் இந்த பாவே. மழை நாட்களில் உப்பெடுப்பது நின்றுபோகும். அச்சமயங்களில் மராட்டிய இலக்கியத்தில் ஆழ்ந்து விடுவார் பாவே. இதன்விளைவாகவே பண்டைய மராட்டிக் கவிதை இலக்கியத்தின் சரித்திரமாகிய 'மகாராஷ்டிர சாரஸ்வத்'தை 1899 - ல் வெளியிட்டார். அதன் அடுத்த பதிப்பை 1925ல் கொண்டு வருவதற்குள் மகாநுபாவி சாதுக்கள் பலரைத் தமது வீட்டுக்கு வரவழைத்து, உயர்ந்த உபசாரம் புரிந்து, தமது விநயமான பணிவிடையால் அவர்கள் உள்ளத்தை இளக்கி, அவர்கள் மூடுமந்திரமாக வைத்திருந்த சங்கேத மொழியையும் கற்றுக் கொண்டு விட்டார் பாவே. காலஞ்சென்ற பாவேயின் இப் பணிக்காக இன்றும் அவரை மரியாதையுடன் நினைக்கிறது மகாராஷ்டிரம்.

கிருஷ்ண பக்தியை மையமாகக் கொண்ட மகாநுபாவி சம்பிரதாயத்தைத் தொடங்கியவர் பன்னிரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த சக்ரதர். அவர் எதுவும் ஒளிவு மறைவின்றியே உபதேசித்த போதிலும் அவருடைய சீடர்கள் ஒரு சங்கேத மொழியை ஏற்படுத்தித் தமது கொள்கைகளை மூடுமந்திரமாக்கினர். இதையே எழுநூறாண்டுகளுக்குப் பின் அவிழ்த்தார் பாவே.

— வி. எஸ். கக்டண்கர்



அத்தியாயம் 12

ராஜாவைப் பற்றி அவள் தாயார் வெளிப்படையாகக் குறைத்துச் சொன்னதைக் கேட்டதும் ஜானு திடுக்கிட்டாள். "நீங்கள் என்னதான் சொல்லுகிறீர்கள் ?" என்று கேட்டாள்.

"இந்தக் காலத்துப் பெண் பிள்ளைகளுக்குப் பெரியவர்கள் என்ன சொன்னாலும் புரியாது. ஆனால் நான் என் பிள்ளையைப் பற்றியே தூஷணையாகச் சொல்ல வேண்டுமானால், அதுவும் அவனைக் கலியாணம் பண்ணிக் கொள்ளணும்னு இருக்கிற பெண்ணிடமே நேருக்கு நேர் சொல்ல வேண்டுமானால், எவ்வளவு தூரத்துக்கு என் மனசு உடைஞ்சிருக்குன்னு நீயே பார்த்துக் கொள்...."

"அப்போ எதுக்கு மூந்தாநாள் எங்க வீட்டுக்கு வந்தீர்கள்?"

"அவன் என் கழுத்தைப் பிடித்துத் தள்ளாத குறைதான்...இது சம்பந்தமாக உங்களை நான் பார்த்திரா விட்டால் அவன் வீட்டை விட்டுப் போய்விட்டிருப்பான்..."

"நான் என்ன செய்யணும், இப்போ ?"

"என் பிள்ளை பார்க்க அழகாயிருக்கான்... வாஸ்தவம்... எல்லாரையும்விடப் புத்திசாலிதான்... சாமர்த்தியசாலிதான்.... ஆனால் சமூகத்திலே நாலு இடங்களிலே அவன் நல்லவன்னு பேர் எடுக்காதவன்.... அவன் இப்படியே இருந்தால்.... என் மனசு நினைக்கிறதுக்கும் கூசுகிறது.... இருந்தாலும் நினைக்காமல் இருக்க முடியல்லே.... அவன் இப்படியே இருந்தால், வகையாகச் சிக்கிப்பான்...."

வெகு நேரம் மௌனமாக நின்ற ஜானுவின் காதுகளில் லட்சுமி அம்மாளின் எச்சரிக்கை பயங்கரமாக ஒலித்தது. அவளுடைய தன்னம்பிக்கையும் தைரியமும் ஒரு கணம் குலைந்தன. அவள் ராஜாவை மறந்துவிட வேண்டியதுதானா ? காதலாவது, கத்திரிக்காயாவது! ஒவ்வொரு பெண்ணுக்கும் ஒரு கணவன் வேண்டும். அவள் அவனை என்றென்றும் மனம் நோகாமல் அன்புடன் வைத்துக் கொள்ள வேண்டும். சமூகத்தில் அவனுக்கு இருக்கிற மதிப்பையும் மரியாதையையும் பொறுத்திருக்கிறது, குடும்பத்தின் அமைதியும் இன்பமும்! நாளைக்குக் கலியாணம் ஆன பிறகு, ஜானுவின் மீது இருக்கும் அன்பு ராஜாவுக்குக் கொஞ்சம் கொஞ்சமாகத் தேய்ந்து விட்டால், அவன் தன்னுடைய வாக்குறுதிக்கும் சத்தியத்துக்கும் என்ன மதிப்பை அளிப்பான்? சுலபமாக ஒருவரை ஏமாற்றிப் பணம் பறிக்க வாய்ப்பும், விதி வசத்தால் அமைந்துவிட்டால், அவன் தன் வாக்குறுதியைக் காற்றில் பறக்க விட்டுவிடுவானே ? அதன்பின் ஜானுவுக்கு மன அமைதி ஏது? கணவனிடமிருந்து என்ன இன்பத்தை அவளால் பெற முடியும்?

நடைமுறை வாழ்க்கையை எண்ணிப் பாராமல், கனவு உலகத்திலேயே இருப்பது பேதைமை! ஜானு இப்போது காண்பது கனவு ! அந்தக் கனவின் மயக்கத்தில் ராஜாவை முழுக்க முழுக்க நம்புகிறது மனம்! அவனைப் பற்றி அவதூறாகப் பேசுகிறவர்களைக் கண்டால் அவள் வெறுக்கிறாள்! சந்தானம் சொல்லாமல் சொல்லியதற்கே அவன் மீது எரிச்சல் உண்டாகிறது! ஆனால் அவளை அவளுடைய கனவிலிருந்து ராஜாவைப் பெற்றவளே அல்லவா தட்டி எழுப்புகிறாள்! ஏன் ? எதற்கு? இந்த எச்சரிக்கைக்கு என்ன அவசியம்? அவள் நல்ல கணவன் ஒருவனைப் பெற்று, சந்தோஷமாக இருக்க

வேண்டும் என்ற காரணமா? 'என் பிள்ளையைக் கல்யாணம் செய்து கொள்ளாதே, நீ சீரழிந்து விடுவாய்!' என்று பிள்ளையைப் பெற்றவளே சொல்லுவது விந்தையிலும் விந்தை தான். ஆனால் இந்த விந்தை நடக்க வேண்டுமானால், தாயின் மனத்தில் பிள்ளையைப் பற்றிய கருத்துக்கள் வேரூன்றி இருக்க வேண்டும்! பெற்றவளுக்குத் தீராது, பெற்ற தோஷத்துக்குச் சகித்துக் கொள்ள வேண்டும்! ஆனால் ஒரு பெண் முன்கூட்டியே எல்லாவற்றையும் தெரிந்து கொண்டு விட்டால், தப்பித்துக் கொள்ளலாம்! ஜானா தப்பித்துக் கொண்டால் அவளுக்குத்தான் நல்லது என்று லட்சுமி அம்மாள் நினைக்கிறாள்! இது ஒரு பெண் மனம் இன்னொரு பெண் மனத்தினிடம் இரக்கம் கொண்டு செய்யும் காரியம்!

அவள் லட்சுமி அம்மாளைப் பார்த்தாள்.

''நீங்க சொல்றதெல்லாம் எனக்குப் புரிகிறது, மாமி.... உங்களுக்கு நான் ரொம்பக் கடமைப்பட்டிருக்கேன்...''

''உன் வீட்டாருக்கு விருப்பமில்லை என்று தெரிந்தால் அவனால் ஒன்றும் செய்ய முடியாது.... ஆனால் நீ எப்போதும் போலவே இரு.... இனிமேல் அது நடிப்பாகக் கொஞ்ச நாட்களுக்கு இருக்கட்டும்....'' என்றாள் லட்சுமி அம்மாள்.

அவள் சென்றபிறகு, அந்தத் திசையையே நீண்ட நேரம் வைத்த விழி எடுக்காமல் பார்த்த ஜானா கடைசியில் திரும்பினாள்.

அவளுடைய கண்களில் சுரந்த நீர், கன்னங்களில் வழிந்து புறங்கையில் விழுந்து சுட்டது. அவள் புடவைத் தலைப்பால் துடைக்க யத்தனித்தாள். சூரிய ஒளியில் கண்ணீர் முத்து அவள் கண்ணில் பட்டபோதில், அதில் ராஜா புன்முறுவலுடன் நிழலாடுவதாகத் தோன்றியது.

அவளுடைய முகத்தைப் பார்த்த போஸ்ட்மாஸ்டர் சிதம்பரம், ''என்ன ஜானா... என்ன விஷயம்?... முகம் சிவந்து கிடக்கு...அழுதாயா? கண்ணீர் வர்றது....?'' என்று கேட்டார். ஜானா அழுது அவர் பார்த்தது கிடையாது.

''ஆனந்தக் கண்ணீர் !'' என்று அவள் எரிச்சலுடன் சொல்லிவிட்டுத் தன் இடத்துக்குச் சென்றாள்.

ராஜா தன் திட்டத்தை வகுத்தாகி விட்டது. இலங்கைக் கம்பெனிகள் இரண்டும் கண்டிப்பாகப் பணத்தைக் கொடுக்கப் போவதில்லை என்பதை அவன் நன்றாய் அறிவான். பின் எதற்காக ரவியிடம் பணம் வரவேண்டியிருக்கிறது என்றான்? அப்படிச் சொன்னால் தான் இலங்கைக்குப் பாஸ்போர்ட் எடுத்துக் கொள்ள ஒரு வாய்ப்பு உண்டாகும். திடீரென்று நாளைக்குப் போலீஸின் பிடியில் சிக்கிக் கொள்ளாமல் இருக்கத் தேசத்தை விட்டே ஓடவேண்டும் என்றால் இலங்கைதானே அருகில் இருக்கிறது?



சிப்பந்திகளைக் கணக்குத் தீர்த்து அனுப்பியாகி விட்டது. லெட்ஜர் கணக்குகளையும் ஒருவாறு அவன் முடித்தாகிவிட்டது. இனி அவற்றை ரவியும் சந்தானமும் பரிசிலனை செய்வார்கள். மேலெழுந்தவாரியாகச் சந்தானம் பார்த்தானானால் விஷயம் ஒன்றுமே வெளியே வராது. ஆனால் எப்போதும் சந்தேகக் கண்களுடனேயே சந்தானம் ராஜாவைக் கவனித்து வருகிறான். துருவித் துருவிப் பார்க்க மாட்டான் என்பது என்ன நிச்சயம்? எப்படியாவது ஜானா — ராஜா கலியாணம் நடந்துவிடக் கூடாது என்று மனத்தில் சந்தானம் எண்ணுவதாக ராஜா நினைத்தான். அப்படி இருக்கும் பட்சத்தில் கண்டிப்பாக ராஜா சிக்கிக் கொள்ள வேண்டி வரும். அதற்குள் ராஜா, தான் செய்ய வேண்டிய ஏற்பாடுகளை யெல்லாம் செய்துவிட வேண்டும்.

வீட்டில் ஒன்றரை லட்சம் ரூபாய் நோட்டுகளாகக் கிடக்கிறது. அப்படி இருப்பது திடீர்ச் சோதனை நடத்தினால் பேராபத்தில்தான் முடியும். ராஜாவுக்கு மனிதர்கள் பேரில் நம்பிக்கை இல்லை. ஒரே பாங்கியில் முடக்கிவைத்தாலும் அவன் மீது சந்தேகம் உண்டாகும். ஏழெட்டுப் பாங்கிகளில் கொஞ்சம் கொஞ்சமாகப் போட்டு வைத்தால் எந்தப் பெரிய பாங்கியும் அதில் தனது கவனத்தைச் செலுத்தாது. ஸ்டேட் பாங்கியிலிருந்து ஒன்பது பாங்கிகளின் பெயர்களை அவன் குறித்து வைத்துக் கொண்டு, தன் பெயரில் பத்தாயிரம் பன்னிரண்டாயிரம் என்று பணம் கட்டி வைத்தான். எல்லாம் போகக் கையில் இன்னும் முப்பதாயிரம் இருந்தது. வீட்டில் இதுவரையில் அம்மாவிடம் ஒப்படைத்திருந்த இரண்டாயிரம் ரூபாய் அவளிடமே இருக்கட்டும் என்று முடிவு செய்த அவன் ஜானாவைச் சந்திக்கப் புறப்பட்டான்.

ஜானாவுக்கும் அவனுக்கும் கல்யாணம் நடக்கப் போகிறது என்று தெரிந்ததிலிருந்து, ரவி அவனிடம் பழகும் விதத்தில் மாறியிருக்கிறான் என்ற உணர்ச்சி ராஜாவின் மனத்தில் உண்டாயிற்று. இதுவே ஒரு புதுத் தென்பையும் அளித்தது. சீதாவுக்குக் கணவனாக வரப் போகிறவன் அவனுடைய தங்கையின் கணவன் மீது பகிரங்கமாக நடவடிக்கை ஏதும் எடுக்க மாட்டான் என்ற எண்ணம் எழுந்தது. ராஜா செய்த மோசடியைக் கண்டுபிடித்தாலும் அவன் போலீசாரிடம் செல்லாமலேயே பணத்தைத் திரும்பப் பெற முயலுவான்.




இளமேனியருக்கு இணங்கிய உறவு பியர்ஸ்...













இப்போது, புதிய புள்ளிக்கோல மேலுறையோடு உமக்கே!

மென்மை கொஞ்சும் தூய கிளிசரின் சோப்

பச்சின மேனிக்கும் இணங்கிய மென்மையுள்ளது பியர்ஸ். வரண்டிடாமல் உங்கள் சருமத்தை இளங்கொழுந்து போல் புதுமையோடு போற்றுவது பியர்ஸ் சோப்பிலுள்ள கிளிசரின். தூய்மையானது பியர்ஸ்...மாணிக்கம் போல் படிகத் தன்மை படைத்தது உங்கள் மேனிமீது இளமை கொஞ்சிடவே! பியர்ஸ்

தன் தூய்மையைக் கண்கூடாக உணர்த்துவது பியர்ஸ்

இந்துஸ்தான் லீவர் லிமிடெட்டின் தரமான தயாரிப்பு

லின்டாஸ்-PS, 158-140 TM

போலீஸ் இதில் தலையிடாமல் இருக்கும் வரை ராஜா யாருக்குப் பயப்பட வேண்டும்? கல்யாணமானால் மறுநாளே சென்னையை விட்டே—அவன் வடக்கே ஓடிவிட மாட்டானா? வடக்கே எவ்வளவோ சிறிய சிறிய ஊர்கள் இருக்கின்றன. ஹிந்தியைச் சரளமாகப் பேசுகிற ராஜா ஒரு வட இந்தியனைப் போலவே ஆகிவிடுவானே?

மனக் கோட்டைகள் அவன் உள்ளத்தில் வானளாவ எழ, அவன் அடையாற்றை அடைந்தான்.

ஜானு தபாலாபீசை விட்டு வெளியே வந்து கொண்டிருந்தாள். முகத்தில் எப்போதும் ஒளி போல் வீசும் புன்னகை மறைந்திருந்தது. கண்கள் சோகத்தில் ஆழ்ந்திருப்பது போலக் காணப்பட்டன.

''ஹலோ ஜானு!'' என்று அவன் அவள் முன்னால் நின்றான்.

திடீரென்று ஜானு சிரிப்பை வரவழைத்துக் கொண்டாள்.

''இன்னிக்கு ரொம்பக் குஷியாக இருக்கிறாப் போல இருக்கு!''

''ஆமாம்... எல்லாம் காரணமாகத்தான்... எனக்கு ஒரு வேலை கிடைத்திருக்கு. சம்பளம் என்னவோ நானூறு ரூபாய்தான்.''

''எங்கே? மெட்ராஸிலேதானா?''

''இல்லே. கோஸிகால்னு என்ற ஓர் ஊரிலே... டெல்லிக்குப் போகிற வழியில் ... முப்பது நாற்பது மைல்தான் இருக்கும் டெல்லிக்கு.''

''ரொம்ப சந்தோஷம். ஏற்றுக் கொண்டாகி விட்டதா?''

''அதெப்படி முடியும்? கோதண்டராமன் கம்பெனியை ஒருவாறு மூடிவிட்டு, அக்கௌண்ட்ஸை ரவியின் கையிலே ஒப்படைச்சுட்டேன்னு... அப்புறம், ஒரு கல்யாணமும் ஆயிட்டா, மனைவியையும் அழைச்சுண்டு போயிடுவேன். ரெண்டு மாசம் 'டைம்' கேட்டிருக்கேன். தந்திருக்கிறார்கள். ஏன் ஜானு, உனக்கு வடக்கே போகப் பிடிக்கலையா? பிடிக்கலைன்னா இந்த வேலை வேண்டாம்னு எழுதிப் போட்டுவிடுகிறேன்...''

''நோ... நோ... அப்படியெல்லாம் செய்து விடாதீர்கள். இந்தியாவிலே எந்த ஊராயிருந்தால் என்ன? ஒரு விதத்தில் உங்களுக்கு முன்னேபின்னே தெரியாத ஊர்தான் நல்லது என்று எனக்குப் படறது.''

'' அம்மாகிட்டே சொன்னேன்... ரொம்பச் சந்தோஷப் படறாள்.''

''இயற்கைதானே!'' என்ற ஜானு, திடீரென்று, ''நமக்குக் கல்யாணம் நடந்து முடிகிறவரைக்கும் அடிக்கடி சந்தித்துக் கொள்ளாமல் இருப்பது தேவலைன்னு எனக்குத் தோண்றது. நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?'' என்று கேட்டாள்.

ராஜாவின் முகம் சுருங்கிக் கறுத்தது. ஆனால் அடுத்த கணமே அவன் சமாளித்துக் கொண்டான். ஜானு தொடர்ந்தாள்: ''என்னை வித்தியாசமா நெனைச்சுக்காதீர்கள்...''

''நோ... நோ... என் கண்ணை நானே குத்திப்பேனா? என்னமோ, உன்னை ஒரு நாள் பார்க்காமல் போனால் எனக்கு வாழ்க்கையே அஸ்தமித்து விடுகிறது!'' என்றான் ராஜா.

'உங்களைக் கல்யாணம் செய்து கொண்டால் என் வாழ்க்கையே அஸ்தமித்து விடும் என்று உங்கள் அம்மா சொல்லுகிறாள்' என்று மனத்துக்குள் நினைத்துக் கொண்ட ஜானு அவனிடமிருந்து விடைபெற்றுக் கொண்டாள்.

ராஜா தன் சிந்தனையிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு ஆழ்வார்ப் பேட்டை செல்லும் பஸ்ஸில் ஏறினான்.

ராஜாவைக் கண்டதும் ரவி, ''நீ கொலம்போ என்னிக்குப் போறே?'' என்று கேட்டான்.

''நாளன்னிக்கு...''

''போனா வர எத்தனை நாளாகும்?''

''காரியம் முடிஞ்சா உடனே திரும்பிடவேண்டியதுதான்!'' என்ற ராஜா ரவி கையில் வைத்துக் கொண்டிருக்கும் செக் புத்தகத்தைப் பார்த்தான். ஒரு கணம் அவனுக்குப் பகீரென்றாகியது.

''நீ போறதுக்கு முன்னாலே, காஷ் புக்கையும், வௌச்சர் ஃபைலையும் என் கிட்டே கொடுத்துவிட்டுப் போ...''

''சரி.''

''அப்பா செத்துப் போனன்னிக்கு ஏதாவது செக் எழுதினாரா?''

தெரிந்து கொண்டுதான் கேட்கிறான் என்பதைப் புரிந்து கொண்ட ராஜா ''ஆமாம்... ரெண்டு செக் எழுதினார்; ஒண்ணு இன்கம்டாக்ஸ் டிபார்ட்மெண்டுக்கு...'' என்று நிறுத்தினான்.

''இன்னொன்று ஒரு லட்சத்து முப்பதாயிரம் ரூபாய்க்கு!''

''அதைப் பணமா வாங்கி, ஏமெட்டு 'டிராப்டுகளாக மாத்தி அனுப்பினோம். எல்லாம் காஷ் புக்கிலே இருக்கே...''

''சரி, பார்த்துக்கொள்ளுகிறேன்...'' என்ற ரவி, ''உனக்கும் ஜானுவுக்கும் கல்யாணம் என்று கேள்விப்பட்டேன்'' என்றான்.

ராஜா சிரித்தான். ''உங்கள் கல்யாணத்துக்குப் பிறகு நடக்கலாம்!''

''ஏன், செலவை உத்தேசித்து ஒரே பந்தலில் ஒரே சமயத்திலும் நடக்கலாம் இல்லையா?'' என்றான் ரவி.



''நேபாளத்திலிருந்து இந்தி. இந்தியிலிருந்து தமிழ், தமிழிலிருந்து மலையாளம் என்று ஒரு டப்பிங் படம் எடுத்தீர்களே! என்ன ஆச்சு!''

''டப்பாவிலேயே இருக்கு!''

''ஆனால் எனக்கு அதுக்கு முன்னாடி ஒரு நல்ல வேலை கிடைக்கணும்...''

''எங்காவது பார்த்து வைத்திருக்கிறாயா?''

''அதுக்கெல்லாம் நேரம் ஏது? முப்பது வருஷத்துக் கம்பெனி அக்கௌண்ட்ஸை மூணு மாசத்திலே க்ளோஸ் பண்றதுன்னு எளிசா...?''

''அதுவும் இந்தக் கம்பெனி அக்கௌண்ட்ஸை!'' என்று கேட்டுக் கொண்டே அகிலா திடீர்ப் பிரவேசம் செய்தாள்.

''ஏன் அகௌண்ட்ஸ் ஒழுங்கா இல்லையா?'' என்று கேட்டான் ராஜா.

''எனக்கென்ன தெரியும்?''

''முதல்லே அதைத் தெரிந்துகொள்ளுங்கள். அதுக்கு முன்னாடியே குற்றம் சொல்லாதீர்கள்... நான் பி. காம் படித்தவன்!'' ராஜாவின் கோபம் தலைக்கேறியது.

''எங்க அப்பா என்ன பிஸினெஸ் பண்ணினாருன்னு எங்களுக்குத் தெரியாமல் இருக்கலாம்... ஆனால் அதை எப்படி எப்படியெல்லாம் பண்ணினாருன்னு தெரியும். ஏன், ஊரிலேயே வெட்ட வெளிச்சமாச்சே! அப்படி இருக்கும்போது, உங்கள் லெட்ஜரும் காஷ் புக்கும் ஜோடிச்ச கதையாகத் தானே இருக்க முடியும்?'' என்றாள் அகிலா.

''நீங்கள் எது வேண்டுமானாலும் பேசலாம்னு பேசறேள்... சரி, கணக்கிலே எங்க இடஞ்சலே தப்பு?''

''முதல்லே கம்பெனியை விட்டு விட்டு வீட்டுக் கணக்குக்கு வரேன்! ருத்ர ஹோமத்தன்னிக்குச் சாம்பிராணி வாங்க மறந்து போயிட்டதாக அம்மா சொன்னா. நான் எட்டணா கொடுத்து அனுப்பினேன். நீங்க பெரிய கணக்கா காத்தாடி வால் நீளத்துக்கு எழுதி எங்கப்பா கிட்டக் கொடுத்தீர்களே, அதிலே சாம்பிராணி இரண்டு ரூபாய்க்கு வாங்கியிருப்பதாக இருக்கு. நானும் தேடு தேடு என்று தேடினேன். சாம்பிராணி இரண்டு ரூபாய்க்கு வாங்கியிருந்தாத்தானே வீட்டிலே தென்படும்!''

ராஜாவின் ரத்தம் கொதித்தது. அவனுடைய கூற்றை அவனால் மறுக்க முடியாது.!

''பாவம் ஜானு!'' என்று சிரித்த அகிலா, ''வா, அண்ணு டயபராது... சந்தானம் காத்துக்கொண்டிருப்பார்!'' என்றாள். பிறகு ராஜாவைப் பார்த்து, ''கண்டு பிடிக்கிறதுன்னு ஆரம்பிச்சா இந்த மாதிரி ஆயிரம் கிடைக்கும்!'' என்றாள். அவனுடைய முகத்தில் பிரதிபலித்த வெறுப்பை ராஜாவால் தாங்க முடியவில்லை.

லட்சுமி அம்மாள் சந்தித்துப் போனதிலிருந்தே ஜானுவின் மனம் ஒரு நிலையிலில்லை. ராஜா என்னும் ஒரு மனிதனை அவள் ஏன் சந்தித்தாள்? அவனிடம் நட்பாக ஆரம்பித்த பழக்கம் இப்போது கல்யாணம் வரைக்கும் சென்று விட்டது. பெற்ற தாயாரே தன் பிள்ளையைப் பற்றி இகழ்வாகப் பேசி அவள் நல்வாழ்வு பெற வேண்டும் என்ற ஒரே எண்ணத்துடன் அவனை மறக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறாள் என்றால், ராஜா மிகவும் மட்டமான பேர்வழியாகத்தான் இருக்க வேண்டும்! சந்தானம் அவனைப் பற்றி ஒரு கோடி காண்பித்தானே தவிர, இக்காரியத்தில் எந்த விதத்திலும் தலையிடவில்லை.

தனக்குக் கோனிகால்லுவில் நானூறு ரூபாய் சம்பளத்தில் வேலை கிடைத்து விட்டது என்று ராஜா சொன்னதையும் ஜானுவால் நம்ப முடியவில்லை. அவன் மீது அவளுக்கு ஏதாவது அதிருப்தியோ தப்பபிப்பிராயமோ இருக்கக் கூடுமானால் அவை அவள் மனத்திலிருந்து விலகட்டும் என்று கருதியேதான் இப்படி ஒரு செய்தியைச் சொல்லியிருக்கிறான்.

அன்று மாலை அவள் வீட்டை அடைந்தபோது அம்மாவைத் தவிர வேறு யாரும் இல்லை. என்றைக்கு லட்சுமி அம்மாள் பெண் கேட்டு வந்தாளோ அன்றையிலிருந்து பாகீரதி



யின் போக்கே மாறியிருந்தது என்பதை உணர்ந்து கொண்ட ஜானு அவளிடம் அதிகமாகப் பேச இஷ்டப்படாவிட்டாலும், அலைக்கழியும் உள்ளத்துக்கு ஆதரவாக யாராவது இரண்டு வார்த்தை பேசமாட்டார்களா என்று ஏங்கினுள். லட்சுமி அம்மாள் தபாலாபீசுக்கு வந்து பேசிவிட்டுப் போனதை இது வரையில் அவள் யாரிடமும் வெளியிடவில்லை. அம்மாவிடம் வெளியிடக் கூடாது என்றுதான் முதலில் நினைத்திருந்தாள். ஆனல் இன்று ராஜாவைச் சந்தித்ததிலிருந்து அவளுடைய மனத்தில் இனம் அறியாத சஞ்சலமும், தான் தன் தலையிலேயே மண்ணை வாரிப் போட்டுக் கொள்ளுகிருேமோ என்ற பயமும் அவளுள் புகுந்து தவிக்க வைத்தன.

கைகால் கழுவ வேண்டும் என்ற நினைவே இல்லாதவளாய், அவள், ''அம்மா!'' என்று அழைத்தாள்.

ஏன் என்று கேட்காமல் பாகீரதி பெண்ணை ஏறிட்டுப் பார்த்தாள்.

''என்னை மன்னிச்சுடு அம்மா... தாமரைக் குளம்னு நெனைச்சு, சகதி நெறைஞ்ச குட்டையிலே நான் கால் வைச்சூட்டேன்...''

''நீ என்ன சொல்றே?''

''எனக்குக் கல்யாணம் வேண்டாம், அம்மா!''

''ரொம்ப சரி!''

''ஏம்மா என் பேரிலே தாபமா யிருக்கே...''

''நான் அப்படி இருந்தாலும் அதிலே உனக்கு ஒரு நஷ்டமும் இல்லையே!''

''ஏதோ நான் பிடிவாதமா இருந்தேன். தப்புதான். ராஜாவைப் பத்தி அவருடைய அம்மாவுக்கே நல்ல அபிப்பிராயம் இல்லே...''

''சந்தோஷம்...''

''நான் அவரைக் கல்யாணம் செய்து கொண்டால் அவதிப்படுவேன் என்கிருள்...''

''தொட்டிலையும் ஆட்டிவிட்டுக் குழந்தையையும் கிள்ளுகிருளோ?''

''அவளைச் சொல்லிக் குற்றமில்லை அம்மா... ராஜாவின் நச்சரிப்பும் பயமுறுத்தலும் பொறுக்க முடியாமல் தான் உன்னைப் பார்க்க வந்திருக்கிருள். ஒரு நல்ல குடும்பத்திலிருந்து ஒரு பெண் தன் பிள்ளைக்கு மனைவியாக வர்றது அவள் பாக்கியம்னு தோணினுலும், பிள்ளையைப் பத்தி நினைக்கிற போது அவளுக்குப் பயமா யிருக்காம்.''

''இதை அவளே சொன்னுளா?''

''ஆமாம்...''

''நீ என்ன சொன்னே?''

''நான் ஒண்ணும் சொல்லல்லே.

''என்ன சொல்லப் போறே,

''உன் அபிப்பிராயம் என்னம்மா?'

''அது தெரிஞ்சா அதன்படி நடப்பாயா?''

''சொல்லேன்...''

''என்னை எதிர்த்துப் பேசாமல் இந்த வீட்டிலே சீதா ஒருத்திதான் இருக்கா... இருந்தாலும் நான் சொல்றேன்..... எனக்கு ராஜாவைத் துளியும் பிடிக்கவில்லே....''

''நீ இன்னும் அவரைப் பார்த்தது கூட இல்லே...''

''மனசிலே அப்படி ஓர் எண்ணம் விழுந்துடுத்து... சந்தானத்தைக் கேட்டால் எல்லாம் தெரியும்... ஆனு கேட்கத்தான் பயமா யிருக்கு... அந்தக் கல்யாணத்துக்கு அப்புறம் அவன் கிட்டே பேசறதுக்கே பயமா யிருக்கு!''

''ராஜா நாணயமில்லாம நடந்துண்டிருக்கார்னு அவரே என்கிட்டே சொல்லி யிருக்கார். ஆனு திருந்திவிட்டதாகவும் சத்தியம் பண்ணி யிருக்கிருர்...''

''இதையெல்லாம் என்கிட்டே எதுக்காகச் சொல்லி என்னைக் குழப்பறே?''

''இப்போ, நான் இவ்வளவு சொன்னப்புறம் நீ கண்டிப்பா இந்த வரன் வேண்டாமென்றுதான் சொல்லுவே!''

''உனக்கேதான் தெரிஞ்சிருக்கே... என்னை வேறே கேட்பானேன்?''

''எனக்கு மனசு ரொம்பக் குழம்பி யிருக்கு அம்மா... ஒரு பக்கம் பயமா யிருக்கு... இன்னொரு பக்கம், தவறு செய்தவன் திருந்தி விட்டால் எனக்கு நல்ல காலம்தானேன்னு தோணறது.''

திடீரென்று பாகீரதி அவளைப் பார்த்துக் கேட்டாள்:


''உனக்கு இந்த ராஜாவை எத்தனை வருஷமாத் தெரியும்? மாசக் கணக்கிலே கூடத் தெரியாது... பத்துப் பன்னிரண்டு தடவை பார்த்திருப்பாய். அவ்வளவுதானே? அதுக்குள்ளே இவ்வளவு நடந்தாச்சு. அவனைப் பற்றி நீயே நாணயம் இல்லாதவன்னு சொல்றே... ஜானு, நீ என்னைக் கேட்டால் அவனை மறந்துவிடுன்னுதான் நான் சொல்லுவேன்...''

''மறக்கிறது அவ்வளவு சுலபமா இருக்கும்னு...'' ஜானு இழுத்தாள்.

''அப்போ கல்யாணம் பண்ணிண்டு எதையெல்லாம் அனுபவிக்கணுமோ, அதையெல்லாம் அனுபவி.''

''சாபம் கொடுக்காதேம்மா!''

ஜானு வெகு நேரம் அழுதுகொண்டே யிருந்தாள். அவள் காப்பி, டிபனையும் அன்று மறந்தாள். **(தொடரும்)**


சக்திக்கும், வலிமைக்கும்!
பால்
கோகோ
சர்க்கரை
மால்ட்
Bournvita
THE IDEAL FOOD DRINK FOR STRENGTH AND VIGOUR
காட்பரீஸ்
போர்ன்விடா
ஊட்டப்பொருள்கள் அனைத்தும் ஒருங்கே தேவையா? ஒரு கப் போர்ன்விடா அருந்துங்கள். தசைகள் வளர புரதங்களும், சக்திக்கும் வலிமைக்கும் புஷ்டியான மாவுச்சத்தும், எலும்புகளை வலுவாக்க தாது உப்புக்களும், பூரண ஆரோக்கியத்திற்கு மிக்க அவசியமான வைட்டமின்களும் இதிலே உள்ளன. மிகச் சுலபமாக தயாரிக்கலாம். காலையில் உற்சாகத்துடன் எழுந்திருக்க வேண்டுமா? இரவில் அமைதியாக உறங்க வேண்டுமா? போர்ன்விடா அருந்துங்கள்.
CP-579 TAM

புளோரியன் குட்டிக் கதைகள்

தொகுத்தவர்: கு. அழகிரிசாமி

புளோரியன் - 1755-94-பிரான்ஸ் நாட்டு ஆசிரியர். 1792ல் அவர் தம் குட்டிக் கதைகளின் தொகுதியை வெளியிட்டார். பிரஞ்சுப் புரட்சியின்போது அவர் சிறைவாசத் தண்டனையும் அனுபவித்திருக்கிறார்.

அட்டை வீடு



ஒரு காலத்தில் இரண்டு சகோதரர்கள் இருந்தார்கள். இருவரும் மாணவர்கள். மூத்தவன் எந்நேரமும் புத்தகமும் கையுமாக இருப்பான். பாடப் புத்தகங்களை மட்டுமின்றிப் பொது அறிவை ஊட்டும் பிற நூல்களையும் வாசித்துக் கொண்டிருப்பான்.

இளையவனுக்கு விளையாட்டில்தான் பிரியம். ஆடி ஓடிக் கும்மாளி போடுவது அவன் வழக்கம்.

ஒரு நாள் மூத்தவன் ஒரு பெரிய சரித்திரப் புத்தகத்தை வாசித்துக் கொண்டிருந்தான். அப்போது இளையவன் பக்கத்தில் மேஜை மேல் உட்கார்ந்து அட்டைகளை வைத்து ஒரு வீடு கட்டிக் கொண்டிருந்தான். பலமாக மூச்சு விட்டாலும் அட்டை வீடு சரிந்துவிடும் என்று மிகவும் ஜாக்கிரதையாக அவன் அதைக் கட்டினான்.

மூத்தவன் தன் எதிரே அமர்ந்திருக்கும் தந்தையைப் பார்த்து, "அப்பா! இந்தப் புத்தகத்தில் சில வீரர்களை வெற்றி வீரர்கள் என்றும், வேறு சில வீரர்களை சாம்ராஜ்ய ஸ்தாபகர்கள் என்றும் குறிப்பிட்டிருக்கிறது. ஏன் அப்படி? வெற்றி வீரனுக்கும் சாம்ராஜ்ய ஸ்தாபகனுக்கும் என்ன வித்தியாசம்?" என்று கேட்டான்.

அப்பா பதில் சொல்லுவதற்காக யோசனை செய்து கொண்டிருந்தபோது, இளையவன் வெகு நேரம் சிரமப்பட்டுக் கட்டிய அட்டை வீட்டுக்கு மாடியும் வைத்துக் கட்டிவிட்டதற்காகச் சந்தோஷத்தினால் கை தட்டி, "மாடியும் கட்டிவிட்டேன்" என்று ஆரவாரம் செய்தான்.

அவன் ஆரவாரத்தைக் கேட்டுக் கோபம் கொண்ட மூத்தவன் எழுந்து சென்று, தம்பி சிரமப்பட்டுக் கட்டிய அட்டை வீட்டை ஒரே உதையில் சிதைத்து நாசமாக்கி விட்டான்.

அப்போது தந்தை அவன் கேள்விக்குப் பின்வருமாறு பதில் கூறினார்: "மகனே! உன் தம்பி ஸ்தாபகன்; நீ வெற்றி வீரன்."

தந்தையும் மகனும்



"தந்தையே, லட்சக் கணக்கில் பணம் சம்பாதிப்பது எப்படி?" என்று கேட்டான் மகன்.

"பெரும் பணம் சம்பாதிக்க வேண்டும் என்றால் அல்லும் பகலும் பொதுநலனுக்காக அயராது உழைக்க வேண்டும். நாட்டுப் பணிக்கே உழைப்பை அர்ப்பணிக்க வேண்டும்" என்றான் தகப்பன்.

"அது மிகவும் கஷ்டமான காரியம். வேறு சுலபமான வழி ஒன்றைக் கூறுங்கள்."

"அப்படியானால் பெரிய சூழ்ச்சிக்காரனாக நீ தலையெடுக்க வேண்டும். சூழ்ச்சியில் வல்லவனாக இருந்தாலும் பெரும் பணம் சம்பாதிக்கலாம்."

"அப்பா! அது மிகவும் இழிவான காரியம். தீய காரியமும் செய்யாமல், உடம்பை வருத்தியும் உழைக்காமல் பணம் சம்பாதிக்க நான் விரும்புகிறேன்" என்றான் மகன்.

"மகனே! இனி ஒரே ஒரு வழிதான் இருக்கிறது. அது என்ன தெரியுமா? நீ ஒரு முழு முட்டாளாக மாறிவிட வேண்டும். எத்தனையோ முழு முட்டாள்கள் பெரும் பணம் சம்பாதித்ததை என் வாழ்நாளில் நான் பார்த்திருக்கிறேன்" என்றான் தகப்பன்.

மொட்டு மரம்

ஒருவனுடைய தோட்டத்தில் ஒரு மொட்டு மரம் இருந்தது. வயதாகி விட்டதால் அது சில ஆண்டுகளாகக் காய்க்காமல் இருந்தது. அதை வெட்டிவிடத் தீர்மானித்தான் தோட்டக்காரன். அவன் கோடாலியால் ஒரு வெட்டு வெட்டியதும் மரம் அவனைப் பார்த்து, "என்னை வெட்டாதே. உனக்கு எத்தனையோ வருஷங்களாக நான் ஏராளமான பழங்களைக் கொடுத்திருக்கிறேன். அதைக் கொஞ்சம் எண்ணிப் பார். இப்போது எனக்கு வயது முதிர்ந்து விட்டது. என்ன செய்வேன்? நான்



இயற்கையாகவே செத்துக் கொண்டிருக்கிறேன். இயற்கை மரணம் அடைவதற்குமுன் என்னை ஏன் வெட்டிக் கொல்கிறாய்? இன்னும் சில நாட்கள் நான் வாழ்ந்து விட்டுச் சாகிறேன்'' என்று கூறியது.

தோட்டக்காரனோ, ''எனக்கு விறகு தேவை. அதனால் வெட்டுகிறேன்'' என்றான்.

அப்போது ஏராளமான பறவைகள் வந்து, ''தோட்டக்காரா! மரத்தை வெட்டாதே. இந்த வட்டாரத்தில் இந்த ஒரு மரம்தான் இருக்கிறது. உன் மனைவி இதன் நிழலில் அமர்ந்திருக்கும் போது நாங்கள் எங்கள் இனிய கானத்தால் அவளுக்குச் சந்தோஷத்தை அளிக்கிறோம். நீ வெளியே போயிருக்கும் சமயங்களில் அவள் தன் தனிமைத் துயரை மறப்பதற்கு எங்கள் கானத்தால் உதவுகிறோம்.''

தோட்டக்காரன் பறவைகள் சொன்னதைக் கேட்டு அலட்சியமாகச் சிரித்தான். இரண்டாவது தடவையாக அவன் மரத்தைக் கோடாலியால் வெட்டினான். அப்போது ஏராளமான தேனீக்கள் பறந்து வந்து, ''இரக்கமில்லாமல் மரத்தை வெட்டுகிறாயே, நீயும் ஒரு மனிதனா? வெட்டாதே. இந்த மரம்தான் எங்களுக்கு வாசஸ்தலம். உனக்கு நாங்கள் நிறையத் தேன் தருகிறோம். நீ அதைக் கொண்டு போய் விற்கலாம். உனக்கு அது நல்ல வருமானம்'' என்று கூறின.

தோட்டக்காரனுக்கு மனம் உருகி விட்டது. ''இந்த மரத்தையும் வெட்ட நினைத்தேனே! எனக்கும் என் மனைவிக்கும் அளவற்ற உதவி புரிந்த மரம் அல்லவா இது? இனி வெட்ட மாட்டேன். பறவைகள் இங்கே இருந்து பாடட்டும். தேனீக்கள் எனக்கு வருவாய் தரட்டும். தேனீக்களுக்காக நான் இந்தப் பகுதி முழுவதிலுமே பூஞ்செடிகளைப் பயிர் செய்கிறேன்'' என்று சொல்லிவிட்டுக் கோடாலியோடு வீடு திரும்பினான்.

ஏமாந்த குடியானவர்கள்

இரண்டு குடியானவர்கள் வயல் வழியாக நடந்து போய்க் கொண்டிருந்தார்கள். தூரத்தில் ஒரு கரு மேகம் தெரிந்தது. அதைப் பார்த்ததும் வில்லியம் என்ற குடியானவன், ''ஐயையோ, அங்கே என்ன இருக்கிறதென்று பார்த்தாயா?'' என்று கேட்டான்.

''ஆமாம். கருமேகம் இருக்கிறது. அதற்கு என்ன?'' என்று கேட்டான் ஜான் என்ற குடியானவன்.

''அதற்கு என்னவா ? அது மகா கெட்ட மேகம் ஆயிற்றே! அது இங்கே வந்தால் ஆலங்கட்டிகளாகப் பெய்து நம்முடைய பயிரையெல்லாம் அழித்துப் பாழாக்கிவிடும், தெரியுமா ?''

''ஏன் அப்படிச் சொல்கிறாய்? அந்த மேகம் இந்தப் பக்கம் நகர்ந்து வந்துவிட்டால் நல்ல மழை பெய்யும். நம்முடைய பயிர்களும் செழிக்கும். இந்த வருஷம் நிறைய மகசூல் எடுப்போம். இதற்குச் சந்தோஷப்படுவார்களா; இல்லை, அழுது கூப்பாடு போடுவார்களா?''

''நீ ஒரு மூடன். அதனால் இப்படி மனப்பால் குடிக்கிறாய்'' என்று கோபத்தோடு சொன்னான் வில்லியம்.



''நீ ஒரு அச்சான்யம்.....'' என்றான் ஜான்.

வாக்குவாதம் முற்றி இருவரும் கைகலந்து விட்டார்கள். ஒருவனை ஒருவன் அடித்துப் பிறாண்டிக் கொண்டிருந்தபோது ஒரு காற்றடித்துக் கருமேகம் கலைந்துவிட்டது. அதை வெகு நேரம் கழித்துத்தான் இருவரும் பார்த்தார்கள். அப்போது அவர்கள் ஏமாற்றத்துக்குள்ளாகி முகத்தில் அசடு வழிய நின்றார்கள்.



அவஸ்தைப்படுவதற்காக !

''நீ கீழே விழுந்து 32 பல்லில் 31 பற்களும் உடையணும்.''

''ஏன் ஒரு பல்லை மட்டும் விட்டு வைத்தாய் ?''

''பல் வலி வந்து நீ அவஸ்தைப்படுவதற்காக !''

— தங்க சங்கரபாண்டியன்

அப்பாவின் அழியாப் பெயர்

எஸ். ரங்கநாயகி



இனி ஒன்றுக்கும் கவலையில்லை என்ற நினைப்புடன் இரவு கழிந்து பகலை நோக்கும் ஆர்வத்துடன் வஞ்சுளம் பெருமிதத்துடன் காணப்பட்டாள். கணவர் நாராயணனிடம் அவள் பன்முறை கேட்டுவிட்டாள். "இனி மேல் குழந்தை முருகனுடன் நாம் இருக்கலாம் அல்லவா? அவன் சம்பாதிக்க ஆரம்பித்து விடுவானே!"

நாராயணன் பதில் கூறக் காணோம், புன்முறுவலுடன் அவளை நோக்கினார். அப் புன்முறுவலில் தங்கி நிற்கும் பொருள் அவருக்குத்தான் புரியும். வறட்சிக்குப் போர்வையாக அந்தப் புன்முறுவலை அவர் உபயோகிக்கும்போது வஞ்சுளமோ...அவள் நினைத்துக் கொள்கிறாள், மகன் முன்னேற்றத்தில் அவர் அவ்வளவு மகிழ்வு அடைவதாக!

இருக்கத்தானே செய்யும்? 'குழந்தை' எனப் பேச்சிடையே உபயோகிக்கும் அப் பதத்துக்குரியவன் என்றைக்குமே அவர்களுக்குக் குழந்தைதான். அவன் இப்போது டாக்டர் பட்டம் பெற்று விட்டவன். அகன்ற மார்பும், திரண்ட தோளும், சிவந்த மேனியுமாக ஆஜானுபாகுவான ஆண் மகன் முருகன்.

தானாகவே வளர்ந்துவிட்ட சரீரம்தான் என்றாலும் டாக்டராக, அப்பெரிய படிப்புக்கு, தனக்கே சொந்தமான ஒரு தொழிலை மேற்கொள்ளும் நிலைக்கு அவனை ஆளாக்கியதெல்லாம் அவனது பெற்றோர்களின் தியாகச் செயல்களே. அவர்கள் முதல் போட்டுச் செய்த முயற்சிக்கு அவை பயனாக நிற்பவை. செங்கற்பட்டில் ஒரு கிராமத்தில் ஒரு பள்ளியில் ஆசிரியராக இருந்த நாராயணனைப் பார்த்துப் பொறாமைப்பட்டவர்களும் உண்டு. உறவினர்களிடையே அவர் குலத்தில் அவர்தான் ஓர் ஆண் சந்ததியைப் பெற்றவர். அந்த ஆண் சந்ததியும் ஓர் அறிவுச் சுடர்.

பொருளாதார நிலையில் பின்னடைந்தவர் நாராயணன். ஆயினும் ஆண்டவனை நம்பிப் பிள்ளையை மருத்துவப் படிப்பில் சேர்த்தார்.

முருகன் வைத்தியக் கல்லூரி வாழ்வுக்காக விடைபெற்றபோது, "சௌக்கியமாக இருப்பா குழந்தை. நன்னா முன்னுக்கு வந்து உங்கப்பா பெயரை நீ விளங்கச் செய்ய வேணும். உன் அப்பாவின் அழியாப் பெயரும், உன் அப்பாவின் சுகமான எதிர்காலமும் உன் கையில்தானப்பா இருக்கிறது" என்று குரல் தழுதழுக்க ஆசி கூறினாள் வஞ்சுளம். அப்போதும் நாராயணன் வாய் திறந்து ஒன்றும் கூறாமலே நின்றார்.

அந்த ஏழைப் பெற்றோர் பிள்ளையைப் பெரிய படிப்புப் படிக்க வைப்பதற்குப் பூர்வீக நிலம் ஒன்றுதான் உதவிக்கு வந்தது. அதன் சொந்தக்காரர் உரிமை மாறியது. ஆனால் இந்த இழப்பின் துயரே தெரியாதபடி முருகன் வெகு நல்ல முறையில் படிப்பில் முன்னேறி வந்தான்.

விரைவிலேயே புதிதாக ஒரு துயரத்தின் சாயல் படரலாயிற்று. வருடங்கள் மேலேற ஏற, மகனைப் பற்றி விரிசலின் ஆரம்பம் விழுவதாக உணர்ந்தார் நாராயணன். தந்தைக்கும், மகனுக்கும் உறவு, பாசம் என்பதெல்லாம் குறித்த காலம் கடந்தபின், தந்தைக்கே சொந்தமான தந்தையின் பக்கம் மட்டுமே சாயும் உணர்ச்சியாக ஆவதற்கு அவர் எத்தனை உதாரணங்களைக் கண்டு விட்டார்! அந்த உணர்ச்சிகளுக்கு அவர் இல்லம்கூடச் சான்றாக நின்றுவிடுமோ என்ற அச்சம் அவர் மனத்தில் பதிய ஆரம்பித்தது. மகன் மெள்ள மெள்ள அவர்களிடமிருந்து விலகிச் சென்று கொண்டிருக்கும் பாதை கண்களில் புலப்படுவதாகத் தோன்றியது. ஏனெனில், அவன் விடுமுறைகளுக்குக்கூட வீட்டுக்கு வருவதில்லை. அவ்வளவுக்குத் தொடர்பைக் குறைத்துக் கொண்டு விட்டான்.

இறுதிப் பரீட்சையை முடித்துவிட்டு முதலாவதாகத் தேறிய செய்தியோடு அவன் வந்தபோது விரிசல் நன்றாகவே புலனாயிற்று. வந்த அன்று இரவே புறப்படும் ஏற்பாட்டில் இருந்தான் முருகன்!

நாராயணன் வழக்கம்போல் வாய் திறவாமலே இருந்தார். வஞ்சுளம்தான் மகனோடு சண்டையிட்டாள்.

"அம்மா! சண்டை பிடித்து ஒரு பயனுமில்லை. குறிப்பிட்ட இலட்சியத்தில் நான் நுழைந்துவிட்ட போது இங்கு அடிக்கடி வர முடியாது. நான் சொல்வதை நீங்கள் புரிந்து கொள்வதுதான் நல்லது." — அழுத்தம் கொடுத்த சொற்களாக ஒலித்தது.

"வஞ்சுளம்! நீ அவனைக் கண்டிக்கக் கூடாது. அவன் இனி ஹவுஸ் ஸர்ஜனுகப்



பணியாற்ற வேண்டும். அவன் புறப்பட்டுப் போகட்டும்.''

நாராயணன் கூறிவிட்டுச் சுவரை நோக்கினார். தந்தை ஆற்ற வேண்டிய கடமை முடிந்து விட்டது. 'பலனை எதிர்பாராத கடமை' என்ற கோணத்தில் சென்றுபோனவற்றை நிறுத்தித் தன்னைத் தியாகியாக நிறுத்திக் கொள்ள வேண்டும்!

வஞ்சுளம் கணவர் கூறியதை ஏற்றுக் கொண்டாள். வழக்கம்போல், ''உன் அப்பாவின் அழியாப் பெயரும், சுகமான எதிர்காலமும் உன் கையில்தான் அப்பா இருக்கின்றன'' என்று ஆசிகளை வழங்கினாள். வேண்டுகோள் என்றும் கூறலாம்.

முகுந்தன் புறப்பட்டு விட்டான்.

ஹவுஸ் ஸர்ஜனாகப் பணியாற்றும் காலம் முடிந்து விட்டது என்று வஞ்சுளத்துக்குப் புரிந்தது. அவள் தினமும் கணவரைத் துளைத்தாள். ''இனிமேல் குழந்தை முகுந்தனுடன் நாம் இருக்கலாமல்லவா? சம்பாதிக்க ஆரம்பித்து விடுவானே......!''

நாராயணனுக்குச் சொற்களால் பதில் கூறும் திறமையில்லை. புன்முறுவல் ஒன்றைத் தான் அவர் பதிலாகக் காட்ட முடிந்தது.

நாராயணன் பள்ளித் தொழிலை விடவில்லை. மாறாக மேலும் இரண்டு டியூஷன்களை ஏற்பாடு செய்து கொண்டார்.

''அப்பப்பா, உங்கள் கஞ்சத்தனம் போகாது. இந்த ஊரைவிட்டே போய்விடப் போகிறோம். அதற்குள் இந்த டியூஷனில் வரும் வரும்படியை விட்டுவிடக்கூடாதாக்கும்'' என்று இடித்தான் வஞ்சுளம்.

நாராயணன் பதிலே கூறவில்லை. தான் டியூஷன் ஏற்ற காரணம் தனக்கு மட்டும் தெரிந்தால் போதுமென்பதே அவர் எண்ணம். மனைவியைப் பற்றி இதுநாள்வரை இல்லாத கவலை இப்போது பெரிய பிரச்னையாக எதிர்நின்று விட்டது. பாரம்பரிய நிலம் மகனின் முன்னேற்றத்துக்காகக் கைமாறி விட்டது. சேமிப்பு என்பதற்கும் அவர் சம்பளத்துக்கும் சம்பந்தம் இருந்ததில்லை. அதனால் தனக்குப் பிறகு வஞ்சுளத்தின் கதி என்ன என்ற கேள்விக்கு அவர் விடை தேட வேண்டியிருந்தது. ஆதாரத் தூணாக அவர் நின்ற இடத்தில் மகனை இனி நிற்க வைக்க முடியாதென்ற அச்சம். மனிதன் செய்யாததைப் பொருளாவது செய்ய வேண்டுமெனத் தீர்மானித்து விட்டார். டியூஷன்களில் கிடைக்கும் பொருள் இனி அவருக்குச் சொந்தமில்லை. மனைவிக்குச் சொந்தமாக்கி விட வேண்டும். சேமிப்புக்கும் அவருக்கும் தொடர்பு உண்டு என்று காட்டி, அந்தச் சேமிப்பை அவருக்குப் பிறகு மனைவிக்குத் துணைப் பொருளாக்கிவிட வேண்டும்.

அவர் திட்டத்தை உறுதியிட்டது போல் தான் மகனின் கடிதம் வந்தது. முகுந்தன் இனி சென்னையிலேயே தங்கிப் பிரசித்திபெற்ற டாக்டர் ஒருவரின் துணையாளனாக முதலில் பணி புரியப் போகிறான். பிறகு சொந்த முறையில் வைத்தியத் தொழிலை ஆரம்பித்து விடுவான்.

வஞ்சுளம் கடிதத்தைப் பற்றிக் கேட்ட கேள்விக்கு நாராயணன் முதலில் பதில் சொல்ல விரும்பவில்லை. மழை பொழிந்து குளிரவைக்கும் என எதிர்நோக்கும் அவள் கனவுகளைக் கலைத்து, அவை மேகக்கூட்டமல்ல, புகைமூட்டம் என உடனே காட்ட அவருக்குப் பிடிக்கவில்லை.

இரவுச் சாப்பாட்டு நேரத்தில் வஞ்சுளம் தான் பேச்சைத் தொடங்கினாள். ''முகுந்தன் நம்மைச் சென்னைக்கே வந்துவிடச் சொல்லித் தானே எழுதியிருக்கிறான்? இந்தக் கிராமத்திலேயே பழகி இதை விட்டுப் போக உங்களுக்கு விருப்பமில்லையாக்கும்! அதனால் கடிதத்தைப் படித்துச் சொல்லவில்லை. என்னுடைய ஒரே ஒரு வேண்டுகோளுக்கு மட்டும் செவிசாய்ப்பீர்களா? நான் உங்களை விட்டுப் பிரிந்திருக்கப் போவதில்லை. ஆனால் மகனோடு இருக்க வேண்டும் என்ற ஒரே விருப்பத்தை இத்தனை நாட்கள் தேக்கி வைத்திருந்தேனே, அந்த விருப்பத்தை ஈடேற்ற ஒரு வாரம் மட்டும் அனுமதி கொடுங்களேன்.''

நாராயணன் கையில் எடுத்த கவளத்தை வாயில் போடவில்லை. இலையிலேயே போட்டு விட்டு மீண்டும் பிசைவதாகப் பாவனை செய்தார். உண்மையில் அவர் உள்ளம்தான் பிசைந்து தள்ளியது.

''வஞ்சுளம்! உன் ஆவல் எனக்குத் தெரியாதா? முகுந்தன் இப்போது பெரிய டாக்டர் ஒருவருக்குப் பெரிய உதவியாளனாகப் பணி புரிந்து கொண்டு அவர் வீட்டிலேயே தங்கியிருக்கிறான். அந்தப் பெரிய டாக்டர் வீட்டில் நாமும் போய்த் தங்கினால் நன்றாக இராது. முகுந்தன் முன்னுக்கு வரும் நிலையை அடையட்டும். தனி வீடு தேடி நம்மை அழைத்துச் செல்வான்.''

வஞ்சுளம் மௌனமாகி விட்டாள். கணவர் உண்மைக்குத் திரையிட்டு விட்டிருப்பார் என அவளுக்குத் தோன்றவில்லை.

காலம் ஓடியது. அந்தக் கால ஓட்டத்தில் வஞ்சுளத்துக்குப் பாதையிலே சில தெளிவுகள் புரிவதுபோல் இருந்தன. மகனின் தொடர்பில் நிறைவு இல்லை. அடிக்கடி கடிதம் வருவதாகக் காணவில்லை. மகனின் சிறு வயதில் அவனுடைய அறிவைச் சொல்லிச் சொல்லி மகிழ்ந்து வந்த கணவர், இப்போது தம் குறிக்கோள் பூர்த்தி அடைந்து விட்டதில் மனப் பூரிப்பு காணுவதை வஞ்சுளம் உணர்ந்தாள். ஆனால் அவரிடம் அவள் விளக்கம் கேட்டுக் கொண்டிருக்கவில்லை.

இந்த நிலையில்தான் எதிர்பாராதவிதமாக நாராயணனின் உதவியை நாடித் தலைமை ஆசிரியர் சாம்பசிவம் வந்தார். அவருடைய மைத்துனனைச் சென்னையில் மருத்துவக் கல்லூரியில் சேர்க்க வேண்டுமாம். அதனால் முகுந்தனிடம் நாராயணன் சிபாரிசு செய்ய வேண்டுமாம்.

சாம்பசிவத்துக்கு நாராயணன் எவ்வளவோ கடமைப்பட்டவர். உதவி புரிய வேண்டியது அவசியமே. ஆனால் தம் மகனிடம் தமக்குள்ள தற்போதைய நிலையைக் கூறவும் தயக்கம்.

'சரி' என்பதற்கு அடையாளமாகத் தலையாட்டினார். முகுந்தன் வைத்தியத் தொழிலில் எவ்வளவு முன்னேறியிருக்கிறான் என்பது பற்றித் தாம் கேள்விப்பட்டதையெல்லாம் சொல்லிவிட்டு அகன்றார் சாம்பசிவம்.

வஞ்சுளம் கணவரை நோக்கியபடி இருந்தாள். இப்போதுதான் முழுநிலை விளங்கிவிட்டதுபோல் அவள் உணர்ந்தாள். மகனின் பெருமையைச் சாம்பசிவத்தின் மூலம் கேட்டு அவள் மனம் குளிர்ச்சியடைந்தது. ஆனால் அந்தக் குளிர்ச்சியின் இடையே யாரோ மனத்தையே திருகிவிட்டது போலிருந்தது கணவரின் நிலை. மகனை முன்னுக்குக் கொண்டு வரவேண்டும் என்ற ஒரே குறிக்கோளுடன் முன்னோர்களின் நிலத்தைக்கூட விற்றவர் அவன் பெருமைகளைக் கேட்கும்போது பெருமிதம் கொள்ளாமல் தவிக்க வேண்டுமென்றால்......?

வஞ்சுளத்துக்கு நெஞ்சு கனத்தது.

மறுநாள் காலை பஸ்ஸிலேயே சென்னைக்குப் புறப்பட்டுவிட்டார் நாராயணன்.

விலாசத்தைத் தேடி மகன் இருப்பிடத்தை அடைந்தார் நாராயணன். பெரிய பங்களா. அதில் வசிக்கும் டாக்டரைப் பற்றி அவர் கேள்விப்பட்டிருக்கிறார். பிரசித்தி பெற்றவர். அந்த வீட்டில் அவர் கீழ் மகன் இருக்கிறான். ஒருகணம் பெருமையின் பூரிப்பு விரிந்தது. ஆனால் அதில் உடனே புழு ஒன்று நுழைந்து விட்டதாக வேதனை மூட்டம் மூண்டுவிட்டது. மகனைச் சந்திப்போம் என்ற பேராவலுக்கே பொருள் தெரியாதபடி சந்திக்க வேண்டுமே என்ற துயரத்தின் கருமையை அனுபவித்தார்.

அவர் உள்ளே நுழைந்தபோதே மகன் தான் முதலில் கண்களில் தென்பட்டான்.

''வாருங்கள், அப்பா !''

இந்தச் சிறிய வரவேற்பும் நாராயணனுக்குச் சற்று ஆறுதலாக இருந்தது. உட்புறம் சென்று நாற்காலியில் அமர்ந்து கொண்டார். முகுந்தன் மேஜை மணியை அடித்தான். சமையற்காரரைக் காப்பி கொண்டு வரச் சொன்னான். தந்தையைக் கவனித்துக் கொள்ளச் சொன்னான்.

''அப்பா! எனக்கு நேரமாகிறது. நான் ஆஸ்பத்திரிக்குப் போகிறேன். இவர் உங்களுக்கு வேண்டியதைச் செய்வார்.''

கிளம்பிவிட்ட மகனை நோக்கினார் தந்தை. பிறகு பெருமுயற்சியுடன் பேச்சை வரவழைத்துக் கொண்டு, ''முகுந்தா! நான் வந்திருக்கும் காரணத்தைக் கேட்டுவிட்டுப் போப்பா. தலைமை ஆசிரியர் சாம்பசிவத்தின் மைத்துனன் ரமணி வைத்தியக் கல்லூரியில் சேருவதற்கு வந்திருக்கிறான். இன்று இண்டர்வ்யூ. உன் உதவி தேவை என்று தான் என்னை அனுப்பினார்'' எனக் கூறியவர் ரமணியின் இண்டர்வ்யூ நம்பரையும் மற்ற யோக்கியதாம்ச விவரங்களையும் தந்தார்.


Kleertone
நேர்த்திக்கும்
சிக்கனத்திற்கும்
கிளியர்டோன்
இஸ்திரிப் பெட்டிகள்:
"எலிகெண்ட்" இஸ்திரிப் பெட்டி.
"இம்பீரியல்"
ஆட்டொமேடிக்
இஸ்திரிப் பெட்டிகள்.
கெட்டில்கள்:
சூடெதிர்க்கும் கைப் பிடியும், குமிழ் மூடியும், பாதமும் பொருந்தியது "இம்பீரியல்" கெட்டில்.
ஜாஸ்-பேன் கெட்டிலும் கிடைக்கிறது
டோஸ்ட்டர்:
முறுகலான பொன்னிற டோஸ்ட்டுகள் தயாரிக்க.
ரேடியண்ட் ஹாட் பிளேட்:
ஒரு தொல்லையில்லை, பரபரப்பு இல்லை— உங்கள் சமையல் வேலையே இலகுவாகிவிடும்.
மடக்கக்கூடிய எஃகு பர்னிச்சர்:
கலையும் சிக்கனமும் பொருந்தியவை. சோபிக்கும் வர்ணங்களிலே நாகரீக வடிவழகு வாய்ந்தவை.
கிளியர்டோன் தயாரிப்புகள் என்றாலே உறுதியான பாதுகாப்பும் நிலையான மதிப்பும் உங்களுக்குக் கிடைப்பது நிச்சயம். செப்பம் செய்வதிலே யாதொரு தொல்லையும் இராது. ஏனெனில், நம் நாடெங்கும் இவ் வசதிகள் கிடைக்கின்றன. தவிர இத் தயாரிப்புகள் எல்லாவற்றுக்கும் 1 வருட கால உத்தரவாதம் தரப்படுகின்றன.
நல்வாழ்வுக்கே கிளியர்டோன் தயாரிப்புகள்
GRA
ஜெனரல் ரேடியோ & அப்ளையன்ஸஸ் லிட்.

அவர் குரலில் அவர் அறியாமலே, 'நான் உன்னைப் பார்க்கும் ஆவலில் வரவில்லை. மற்றொருவருக்காக வந்திருக்கும் பயணம் இது' என உணர்த்தும் வடிவம் இருந்தது.

அவர் கொடுத்த காகிதங்களை மேலோட்டமாகப் பார்த்தான் முருகந்தன். பிறகு அதைக் தன் கையிலிருந்த தோல் பையில் போட்டுக் கொண்டு சென்று விட்டான்.

சமையற்காரரும் பணியாட்களும் அவரைக் குறைவறப் பார்த்துக்கொண்டனர். ஆனாலும் முட்புதரில் இருப்பது போலவேதான் அவர் உணர்ந்தார். பணியாட்களிடம் மகனைப் பற்றிய விவரங்களை அவர் கேட்கவில்லை; அவர்களும் கூறவில்லை.

பிற்பகல் இரண்டு மணிக்கு முருகந்தன் போன் செய்தான். "அவசர கேஸ்கள். ஆதலால் சாப்பிட வர முடியவில்லை. நீங்கள் வந்த காரியம் வெற்றிகரமாக முடிந்துவிட்டது. ரமணியே இண்டர்வ்யூவை நன்றாகச் செய்து விட்டான்.... ஊரில் அம்மா தனியாக இருப்பாளே என்று நீங்கள் இன்றே போக விரும்புவீர்கள். அதனால் நீங்கள் சென்னையில் எங்கேயாவது போகவேண்டுமென்றால் காரை அனுப்புகிறேன். அதில் போகலாம்!" என்றான்.

கார் வந்தது. ஆனால் நாராயணன் எங்கும் போகவில்லை. மகன் வருமுன்பே கிளம்பி விடலாம் என்ற யோசனையுடன் இருந்தார். ஆனால் முருகந்தன் திரும்பிவிட்டான்.

முருகந்தனோடு ஒரு பெண். அவள்தான் அவன் வந்த காரைச் செலுத்தி வந்தாள். அது அவள் காராக இருக்க வேண்டும். ஒருகால் அவனுடன் பணி புரிபவளாக இருக்கலாம்.

இருவரும் உள்ளே நுழைந்தனர்.

"அப்பா! இந்தச் சுமதிதான் இந்த இல்லத்தின் சொந்தக்காரரின் மகள். இவளும் டாக்டர் பட்டம் பெற்று என்னோடு பணி புரிபவள்" என்றான் முருகந்தன்.

"காலையில் நீங்கள் வந்தபோது ஒரு கடினமான பிரஸவ கேஸ். இப்போதுதான் அது நல்லபடி முடிந்தது. எல்லாம் கிடக்கட்டும், மாமியையும் ஏன் அழைத்து வந்து இங்கே சில நாட்கள் இருக்கக் கூடாது?" என்று கேட்டாள் சுமதி.

பாலைவனத்துக்கு நடுவில் திடீரென மழைத் துளிகளை அநுபவித்துக் குளிர்ந்துவிட்ட பாதசாரியாக நாராயணன் உணர்ந்தார். எனினும், அப்போதும் மகன் வாய் திறவாதது மனத்தில் தைத்தது.

"அதற்கென்ன, வந்தால் போயிற்று." பட்டுக் கொள்ளாமல் பதில் உரைத்தார்.

நாராயணன் கிளம்பி விட்டார். முருகந்தன் உடனே ஒப்புதல் கொடுத்து விட்டவனைத் தான் நின்றிருந்தான்.

"என்ன அதற்குள் கிளம்பிவிட்டீர்கள்?" சுமதியிடமிருந்து இந்தக் கேள்வி வந்ததும் நாராயணன் அவளைத் திரும்பிப் பார்த்த அதே நேரத்தில், முருகந்தனும் சுமதிக்குச் சைகை மூலம் அவள் உபசாரத்தை நிறுத்திக் கொள்ளும்படி குறிப்பிட்டதை அவர் கண்டு விட்டார்.

புறப்பட்ட தினத்தன்று இரவு திரும்பி விட்ட கணவரைக் கண்டதும், வஞ்சுளத்துக்கு

கடன் வாங்கும் அளவுக்குத் தெரியும்



"அவரை உனக்குத் தெரியுமா?"

"ஓ, ஓரளவுக்குத் தெரியும்!"

"ஓரளவு என்றால்.....?"

"கடன் வாங்கும் அளவுக்குத் தெரியும்; கடன் கொடுக்கும் அளவுக்குத் தெரியாது."

— தங்க. சங்கரபாண்டியன்

எல்லாமே புரிந்தன. வந்ததுமே படுத்து விட்டவரை அவள் ஒன்றும் கேட்கவில்லை.

மறு நாள் நாராயணனே அவளிடம் எல்லாம் விளக்கிவிடத் துடிப்பவராகப் பேசினார்.

"வஞ்சுளம்! நம் பாசத்தைச் செலுத்துவதற்காகக் கடவுள் ஒரு மகனைக் கொடுத்துத் தம் கடமையை முடித்துக் கொண்டு விட்டார். நாம் அவனை வளர்த்து ஆளாக்கி விட்ட கடமையை முடித்துக் கொண்டோம். தந்தையின் பெயர் விளங்க மகன் செய்ய வேண்டிய கடமையை நாம் எதிர்பார்க்கக் கூடாது. என் துணைக்குப் பிறகு நீ இவ்வுலகில் இருக்க நேரிட்டால் ஆண்டவனின் துணையை ஏற்றுக் கொள். நீ பொருளாதார நிலையில் தாழ்ந்துவிடக் கூடாது என்பதற்காகவே நான் டியூஷன்களை ஏற்றுக் கொண்டேன். அந்தச் சேமிப்பு உனக்கு உதவும்........"

வஞ்சுளம் சொற்களைக் கொட்டித் தாபத்தைத் தீர்க்க முயன்றும் முடியவில்லை. பேசச் சக்தியற்றவளாகக் காணப்பட்டாள்.

காலப் பாதை நீண்டு கொண்டு சென்றது. அப்பாதையில் வஞ்சுளம் மெள்ளக் கணவருடைய துணையில் தன் மனத்துக்கு மற்றக் காட்சிகளைக் காட்டிக் கொண்டு நிம்மதி பெறப் பார்த்தாள்.

அன்று காலையில் விழித்ததுமே வஞ்சுளம் தன் மனத்தில் சொல்லொணா மகிழ்ச்சி கூடுவதாக உணர்ந்தாள். ஆனால் காரணமே தெரியவில்லை. நாராயணனும் அப்படித்தான் உணர்ந்திருப்பார் என்று அவர் குதூகலமாகப் பேசுவதிலிருந்து உணர்ந்தாள்.

சூரியன் உதித்து ஒரு மணி நேரத்துக்குள் என்ன ஆச்சரியம்!.... முருகந்தன் தன் காரில் வந்து இறங்கினான்.

உள்ளே தேங்கியிருந்த துயரங்களையும் மறந்து விட்டவர்களாக, பெற்றோர்கள், "வாப்பா!" என்று வரவேற்றனர்.

வந்ததுமே பெற்றோர்களை நமஸ்கரித்து விட்டு, "அம்மா! இன்று உன் அருமையான சாப்பாட்டைச் சுவைக்கப் போகிறேன்" என்று முருகந்தன் கூறினான். இருவருமே

திரும்பி விட்டனர். இடையில் கழிந்த காலம் கனவுக்குள் சென்று விட்டது போல் தங்க ளிடம் சிறுவனாக வளர்ந்த முகுந்தனையே இப்போது மீண்டும் கண்டனர் பெற்றோர். மகனைப் பற்றித் தப்பாக எடை போட்டுக் கணவர் கூறியிருப்பாரோ என வஞ்சளம் நினைக்க, மகனை மங்கிய கண்களுடன் நோக்கி விட்டோமோ அல்லது அவனுக்கு எவரேனும் அறிவுரை கூறி அனுப்பியிருப் பார்களோ என நாராயணன் நினைக்கத் தொடங்கினார். அந்த வீட்டிலேயே வளர்ந்து அவர்களுடன் பழகியவனாகவே முகுந்தன் வீட்டுக்குள் நடமாடினான்.

சாப்பாடு முடிந்தது. முகுந்தன் அவர்கள் எதிரில் அமர்ந்து பேச ஆரம்பித்தான்.

''அப்பா! நான் லாரிக்குச் சொல்லிவிட்டு வந்திருக்கிறேன். நாளை காலையிலே இங்கிருந்து எல்லாச் சாமான்களையும் ஒழித்துக்கொண்டு இந்த வீட்டைக் காலி பண்ணிவிட்டு நீங்கள் சென்னையில் என்னுடனேயே இருக்க வந்து விடப் போகிறீர்கள்.''

நாராயணன் திடுக்கிட்டார். ஒரு நாள் கூடத் தங்கச் சொல்லாதவன், இத்தனை வரு டங்களுக்குப் பிறகு தன்னுடனேயே வந் திருக்கும்படி சொல்ல முடியுமா?

''எதற்கப்பா இதெல்லாம்? நாங்கள் இங்கேயே இருக்கிறோம். நாங்கள் உன் னுடன் வந்திருந்தால் சிரமமாக இருக்கும். நீயோ பெரிய டாக்டர் வீட்டில் இருக்கிறாய்!'' நாராயணன் கூறினார்.

முகுந்தன் மெள்ளப் புன்னகை புரிந்தான். ''எனக்குப் புரிகிறது அப்பா, உங்கள் பேச்சு. உங்கள் இருவருக்கும் என் மீது கோபம் இருக்கும். நான் இத்தனை நாட்களாக என் னுடன் வந்து இருக்கும்படி உங்களை அழைக்க வில்லை. இடையே வந்த போதும் உங்களைத் தங்கச் சொல்லவில்லை. இதெல்லாம் உங்கள் மனத்தைப் புண்படுத்தியிருக்கும். நான் சொல்வது சரிதானே அம்மா?'' தாயை நோக்கினான் முகுந்தன்.

''பெற்றோர்களுக்கு மனம் நோகும் எனத் தெரிந்தும் நீ இப்படி இருந்தது ஆச்சரியம் தான்'' என்று வஞ்சளம் கூறினாள்.

''அம்மா! நான் அவற்றுக்கு அதிக விளக் கம் கூறவில்லை. நீ ஒன்றை மட்டும் நினைவு படுத்திக் கொள். 'உன் அப்பாவின் அழியாப் பெயரும், சுகமான எதிர்காலமும் உன் கையில்தான் இருக்கின்றன' எனக் கட்டளை மொழியாக ஆசி கூறுவாயே! அந்த உன் ஆசியை உருவாக்குவதையே என் முக்கிய லட்சியமாகக்கொண்டேன். அதை ஈடேற்றுவ தற்காகக் கல்லூரியிலும் விடுமுறையிலும் நோய்கள் பற்றின பல ஆராய்ச்சிகள் செய் தேன். பிறகு என் லட்சியத்தை ஈடேற்றும் வழிக்குப் பெரிய துணையாகப் பிரபல டாக்டர் நடராஜனிடம் நான் உதவியாளனானேன். என் இலட்சியத்தில் வெற்றி பெற்று இன்று பெரிய டாக்டராகி விட்டேன். ஆனால் என் கடமையில் நான் தோற்றதாகவே உங் களுக்குத் தோன்றும். உண்மையைச் சொல் கிறேன். நான் அப்படிப்பட்ட பாவியல்ல. டாக்டர் பரீட்சையில் சிறப்பாகத் தேறவும், பிறகு தொழிலில் பெயரெடுக்கவும் நான் உழைத்த உழைப்பே உங்களிடம் என் ஒட்டுதலை வெட்டியது. நீங்கள் அங்கு என் னுடன் இருந்திருந்தால் நான் அப்படி உழைப்பதை உங்கள் பாசம் தடுத்திருக்கும். இரவு பகல் பாராமல் நான் உழைத்தால் நீங்கள் அதைக் காணப் பொறுக்க மாட் டீர்கள். என்னை இளைப்பாறச் சொல்லிக் கட்டாயப் படுத்தி விரும்பீர்கள். நான் அதற்குக் கட்டுப்பட வேண்டி யிருக்கும். அதனால் நான் மனத்தைத் திடப்படுத்தி உங்கள் பாசத்தை இந்நாள்வரை விலக்கி வைத்திருந்தேன். அதனால்தான் அப்பாவைச் சுமதி தங்கச் சொன்னபோதும் நான் அவ ளைத் தடுத்தேன். என் லட்சியம் அவளுக்குத் தெரியும். அவள் புரிந்து கொண்டு விட்டாள். என் லட்சியம் ஈடேறிவிட்டது. இனி நம் பிரிவுக்கு அவசியமில்லை.''

''ஏதோ லட்சியம், குறிக்கோள் என் கிறாய். எங்களுக்கு ஒன்றும் புரியவில்லை யேப்பா.''

''அம்மா, அப்பாவின் பெயர் அழியாமல் இருப்பது என் கையில் இருப்பதாகக் கூறு வாயல்லவா? உங்களுக்குச் சோறு போட்டு விடலாம், வசதியாக இருக்கச் செய்யலாம். இதெல்லாம் அப்பாவின் பெயரை அழியா மல் நிறுத்துமா? எந்தப் பிள்ளையும் செய்கிற கடமைக்கு மேல் இதில் ஒன்றுமில்லையே. அதனால் அப்பாவின் பெயர் நிலைத்திருக்க, என் வற்றாத உழைப்பினாலும், முயற்சியிலும் பணம் சேர்த்து, அப்பா பெயரில் ஒரு நிலம் வாங்கி, அதிலேயே ஒரு நர்ஸிங் ஹோம் கட்டி அப்பாவின் பெயரிலேயே 'நாராயணா நர்ஸிங் ஹோம்' எனப் பெயர் சூட்டி யிருக் கிறேன். என்னோடு போட்டியிட்டாள் சுமதி. அம்மா, உனக்கு நாட்டுப் பெண்ணாக வரு வதற்குச் சங்கற்பித்துவிட்ட சுமதி 'வஞ்சளம் பிரசவ விடுதி' என்ற பிரிவைப் பார்த்துக் கொள்வாள். ஆம், அம்மா! என் வரும்படி யோடு தன் வரும்படியையும் சேர்த்து, சுமதி உதவியதால்தான் இந்த வைத்திய சாலையே எழும்பி யிருக்கிறது. சுமதியின் தந்தையும் எங்கள் லட்சியத்தைப் போற்றி அன்பு செலுத்துகிறார்.''

பெற்றோர்கள் நெகிழ்ந்து விட்டனர். அவர் களுடைய பாசத்தையே தடை போட்டுத் தன் இலட்சியம் ஈடேறும் வரை விலக்கி வைத்திருக்கிறான். நிலையான பெயரை நிறுத்த எவ்வளவு பெரிய சாதனை செய்து விட்டிருக் கிறான்!

பெற்றோரை மேலும் மகிழ்விக்க முகுந்தன் உற்சாகத்துடன் மொழிந்தான்:

''அப்பா, நர்ஸிங் ஹோமுக்குப் பக்கத்தி லேயே ஒரு சிறு வீட்டில் நாம் குடியேறப் போகிறோம். நாளைக்கே நர்ஸிங் ஹோம் திறப்பு விழாவோடு அந்தக் கிருஹப் பிரவேச வைபவமும் நடக்கப் போகிறது!'' என்று கூறிய மகனை இடைமறித்தாள் வஞ்சளம்: ''அப்புறம் உனக்கும் சுமதிக்கும் விவாகமாகிக் கிருகப்பிரவேசம் நடத்த வேண்டியதுதான்.''

இத்தனை நாட்கள் வாய் திறவாமல் மௌனியாகி யிருந்த நாராயணனும் இப் போது வாயெல்லாம் பல்லாக நகைத்தார்.



பாரதி கலா மன்றம்

மாதுங்கா - பம்பாய்-19

பாரதி விழா

இடம் :

தென் இந்திய உயர்நிலைப்பள்ளி ஹால்

பிராமின்வாடா ரோடு, மாதுங்கா

16-12-67 மாலை 6-30 மணிக்கு

விழாத் துவக்கம்

சொற்பொழிவு : "கவிச்சித்திரம்"

— திரு மீ. ப. சோமசுந்தரம் ("சோமு")

(Chief Producer (Features) All India Radio)

இரவு 8-30 மணிக்கு

Meet the Human computer - SHAKUNTHALA DEVI

(India's Mathematical Miracle)

17-12-67 காலை 9-45 மணிக்கு

பொது வரவேற்பு

பேச்சு :

போட்டிகளில் வெற்றி பெற்றவர்கள்

சொற்பொழிவு :

"நமது செல்வம்" —"சோமு"

மாலை 5-45 மணிக்கு

பரிசுகள் வழங்குதல்

இசை :

திருமதி பத்மா நரசிம்மன் - பாட்டு

திருமதி மீனாக்ஷி விஸ்வநாதன் - வயலின்

திரு எல். வி. கிருஷ்ணன் - மிருதங்கம்


சொற்பொழிவு :

"விடுதலைக் குரல்" —"சோமு"

□

அனைவரும் வருகை தந்து சிறப்பிக்க வேண்டுகிறோம்.


விமானம் அல்ல; ஹோட்டல்!



நடுத் தெருவில் 'விமானம்' இறங்கி விட்டதோ எனத் திடுக்கிட வேண்டாம்; திகைக்கவும் வேண்டாம். படத்தில் காணப்படும்; 'சூப்பர் கான்ஸ்டலேஷன்' விமானம் ஜெர்மன் 'லுப்தான்சா' விமானக் கம்பெனியில் இருந்து சமீபத்தில் 'ஓய்வு' பெற்றது. இந்த விமானம் ஹாம்பர்க் நகருக்கு அருகில் உள்ள உல்லாச நீச்சல் இடத்துக்குக் கொண்டு செல்லப்படுகிறது. 'ஓய்வு' பெற்ற விமானம் ஆகிற்றே. பறக்க முடியாதே! ஆதலால் சக்கரங்களினால் உருண்டு செல்கிறது. இந்த விமானத்தை வாங்கியவருக்கு ஒரு புதுமையான யோசனை! விமானத்தை ஹோட்டலாக மாற்றுகிறார். விமானப் பணிப் பெண் போல் ஆடை அணிந்து இரு பெண்கள் உணவு பரிமாறுவார்கள். விமானத்தில் பறக்க விரும்பாமல் சாப்பிட மட்டும் விரும்புவோருக்கு இது மிகவும் பிடிக்கும் அல்லவா?

— யூ. பி. எஸ்.

நாய்க்குச் சிலை!



ஜப்பானில் ஷிபுகா என்ற இடத்தில் டாக்டர் தஹிசாபுரா வசித்து வந்தார். இவர் ஒரு நாய் வளர்த்தார். இவர் டோக்கியோவுக்குத் தினந்தோறும் ரயிலில் செல்வது வழக்கம். நாய் அவரைக் காலையில் வழியனுப்ப ஸ்டேஷனுக்குச் செல்லும். மாலையிலும் ஸ்டேஷனுக்குச் சென்று அவரை அழைத்துக் கொண்டு வரும். ஒரு நாள் டாக்டர் எதிர்பாராமல் டோக்கியோவில் இறந்து விட்டார். வழக்கம் போல் இந்த நாய் அவரை வீட்டுக்கு அழைத்துச் செல்ல வந்தது. ஆனால் தன் எஜமானனைக் காணாமல் சோர்ந்த முகத்துடன் வீடு சென்றது. இப்படிப் பதினொரு வருடங்களாகத் தன் எஜமான் வருவார், வருவார் என்று எதிர்பார்த்து நாய் ஷிபுகா ரயில் நிலையத்துக்கு நாள் தவறாமல் வந்தது. கடைசியில் துயரம் தாங்காமல் இறந்துவிட்டது. ஷிபுகா ரயில் நிலையத்துக்கு எதிரே, நன்றி விசுவாசம் மிகுந்த அந்த நாய்க்கு வெண்கலத்தால் சிலை எழுப்பினர் ஜப்பானிய மக்கள்.

ஆதாரம்: "மிரர்"

தகவல்: செபத்தை செல்வன்



இதெல்லாம் வெண்பா வா?
கலிப்பா வா?
ஒன்றுமில்லை, சிரி - பா!

சிரி — பா : 1

விருந்தோ விருந்து!

வெள்ளைக்காரர் நான்கு பேரை
விருந்துக் கழைத்து வருவதாய்க்
கொள்ளைக் கார ஜுலுசொன்னான்,
கூடிச் சுற்றம் மகிழ்வதேன்?



வருவிருந்தெல்லாம் 'உள்ளே'
செல்விருந்து ஆவதால்!

சிரி — பா : 2

விடும் விளையாட்டும்



''அப்பா நானே'' என்றான் ராஜா
''அழகு நீயே அம்மாவாம்.
கப்பு நீயே குழந்தை!'' என்றான்;
கடலின் கரையில் ஆடினராம்.
''கம்மா என்னைச் சுற்றி வராதே.
தூரப் போ!''எனச் சொன்னான்
'அப்பா'.
'அம்மா'விடமும் வசவே கண்டாள் —
அழுதே விட்டாள் குழந்தை கப்பு.
களைத்துப் போனான், டூவிட்டாள்.
கப்பு பாவம், அவள்வரையில்
விளையாட் டிற்கும் வீட்டிற்கும்
வித்தி யாசம் இல்லையே!

— ''சிரி–வாசன்''

ஜாக்கிரதை, சூரிய வெளிச்சத்தை மறைத்தால் நீட்டிவிடப் போகிறார்கள் அபராதம்! பயந்து விட்டீர்களா? இங்கேயல்ல; ஜப்பானில்தான்.

தொழிலதிபர் ஒருவர் தம் வீட்டுக்கு இரண்டாம் மாடி கட்டினார். அவ்வளவு தான். வந்ததே ஆபத்து! மாடி கட்டியதால் சூரிய வெளிச்சம் தம் வீட்டுக்கு வருவது தடைப்படுவதாய் வழக்குத் தொடுத்தார் அண்டை வீட்டுக்காரர். போதிய சூரிய வெளிச்சம் இல்லாததால் தம் குடும்பத்தினரின் தேக நலன் கெட்டுவிட்டது என்பது அவர் புகார்.


வழக்கை விசாரித்த டோக்கியோ ஹைகோர்ட் அளித்த தீர்ப்பு என்ன தெரியுமா? மாடி கட்டி வெளிச்சத்தை மறைத்தவர் அண்டை வீட்டுக்காரருக்கு இரண்டு லட்சம் 'என்' (ஜப்பானிய நாணயம்) அதற்கான வட்டியுடன் கொடுக்க வேண்டும்.

வெய்யிலில் குளிக்க...



ஆதாரம் : ''கரண்ட்''

தகவல் : ''கோமதி''


ஸ்வஸ்திக்
பர்ஃப்யூம்டு காஸ்டர் ஆயில்
படியாத கேசத்தையும் படியச் செய்கிறது—நாள் முழுவதும் மழமழப்பாய் வைக்கிறது
நேர்த்தியாக வாரிவிடப்பட்ட கவர்ச்சி மிக்க கேசம்... கண்ணைக் கவரும் பளபளப்புள்ள கரும் கேசம்—நாள் முழுவதும் மழமழப்புடன் திகழச் செய்வது ஸ்வஸ்திக் பர்ஃப்யூம்டு காஸ்டர் ஆயில்.
SWIpl SOM 24 Tam
ஸ்வஸ்திக் ஆயில் மில்ஸ் லிட்., பம்பாய

நினைப்பும் நடப்பும்

"அம்மா!"

இந்த அழைப்புடன் கதவு தட்டும் ஓசையும் வந்தது.

"யாரது?" என்று கேட்டுக் கொண்டே சென்று கதவைத் திறந்தாள் சிவில் கண்ட்ராக்டர்ஸ் (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்தின் ஆபீஸ் மானேஜர் சென்னகேசவலுவின் மனைவி லக்ஷ்மம்மா.

கதவைத் தட்டிக் கூப்பிட்டவன் ஆபீஸ் சேவகன் அன்னகாமு. அவனுடைய வெள்ளை யங்கியின்மீது குறுக்கே கம்பெனி டவாலியின் வில்லை வெள்ளி போல் பளபளத்தது.

"இந்தாங்கம்மா. இந்தப் பைலையெல்லாம் வீட்டிலே கொடுத்துட்டுப் போகச் சொன்னாங்க எசமான்." — ஒரு பெரிய காகிதக் கட்டை அப்படியே வைத்தான்.

"எசமான் வர நாழியாகுமாமா? ஏதாச்சும் சொன்னாங்களா?"

"ஒண்ணும் சொல்லலீங்களே!"

"சரி."

அன்னகாமு ஸெம்புலிப் போலத் திரும்பியவன் லக்ஷ்மம்மாவைப் பார்த்துக் கேட்டான்: "அம்மா. எசமானுக்கு நீங்கதான் கொஞ்சம் சொல்லக்கூடாதா? அவங்கதான் அநியாயமா ஒரே பிடிவாதமா இருக்காங்க."

லக்ஷ்மம்மா இங்கிதமாகச் சிரித்தாள். அவனுக்குத் தன் கணவர் நீடித்து வேலை பார்க்க வேண்டும் என்பதில் இவ்வளவு ஆசையா என்று அகமகிழ்ந்தாள்.

"அன்னகாமு! உனக்கு எசமான் குணம் தெரியாதா? அவர்தான் பிடிவாதக்காரர் ஆச்சே? நான் எல்லாம் சொன்னா, எங்கே கேக்கப் போறார்?"

அவன் வியப்புடன் வினவினான். "நீங்க சொல்லிப் பாத்திட்டீங்களா?"

"நிறையச் சொல்லிப் பார்த்தாச்சு. அவங்க கேட்டாத்தானே?"

"அதுதாங்க நாங்களும் அதிசயப்பட்டுப் போறோம். பிடிவாதமா மாட்டேங்கிறாரு."


"உனக்கோ தெரியும் நம்ம வீட்டு நிலைமை. இப்பத்தான் நம்ம மகன் வேங்கடேசலு படிச்சு வந்து, வேலைக்கு மனுப் போடத் தொடங்கியிருக்குது. இந்தக் காலம் இருக்கிற இருப்பிலே, வேலை அதுக்கு என்னிக்குக் கிடைக்கப் போவுதோ? மகன் வேலையிலே நுழைஞ்சு, உருப்படணும் இனிமேத்தான். ஒரு பொண்ணுக்குத்தான் கண்ணாலம் ஆயிருக்குது. உனக்குத்தான் தெரியுமே."

"ஆமாங்க, சரோஜாம்மா இருக்குதே, கண்ணாலத்துக்கு."

"பின்னே, நீயே சொல்லு, உங்க எசமானுக்குக் கொழுப்புத்தானே இது?" என்று சிரித்தவண்ணம் லக்ஷ்மம்மா கேட்க, அவன், "ஆமாங்க" என்று சிரித்தான்.

"நீங்க — ஆபீஸிலே இருக்கிறவங்கதான் சொல்லி உங்க எசமானுடைய மனசை மாத்தணும். நீங்கதான் கொஞ்சம் முயற்சி பண்ணுங்களேன்."

"இன்னிக்கு அங்கிட்டு ஆபீஸிலே எல்லாருமாச் சேந்து ஐயாவை இதுதான் குடைஞ்சுக்கிட்டிருந்தாங்க. அகௌண்டண்ட் ஆராவமுதய்யங்கார், ஹெட் டிராப்ட்ஸ்மேன் ஹரிபர், பி. செக்ஷன் சூபரெண்ட் பத்மநாபன், ஜூனியர் ஆர்க்கிடெக்ட் நவமணி ஐயர் — ஜாடாப் பேரும் ஐயாவைச் சூழ்ந்துகிட்டு, நீங்க எக்ஸ்டென்ஷன் கேட்டு மனுப் போடப் போறீங்களா — இல்லியா? ஒரே வார்த்தையிலே சொல்லுங்கன்னு கலாட்டா பண்ணிக்கிட்டிருந்தாங்க."



"அப்புறம்?"

"நம்ம எசமான் முரண்டு பண்ணிக்கிட்டிருந்தாரு. அவங்க எசமானை விடறதாய் இல்லே. அவங்களே சேந்து, டைப்பெல்லாம் அடிச்சுக்கிட்டு வந்துட்டாங்க."

லக்ஷ்மம்மாவுக்கு வாயெல்லாம் பல். உத்தியோக நீடிப்பே கிடைத்து விட்டாற் போன்ற ஒரு மகிழ்ச்சி.

"கையெழுத்துப் போட்டாத்தான் ஆச்சன்றாங்க. ஐயா அதெல்லாம் மாட்டேங்கறாரு. அப்பத்தான் எசமான் இந்த பைலை

களப்பாள் நம்பி

யெல்லாம் என்கிட்டே கொடுத்து இங்கிட்டுக் கொடுத்துட்டுப் போகச் சொன்னாரு.''

இந்த நேரம் வாசலில் அரவம் கேட்டது.

''எசமான் வர்றாப்பலே இருக்குது'' என்று அன்னகாமு எழுந்தான். அவன் சொன்னது சரி — சென்னகேசவலு கோட்டும் தலைப்பாகையுமாக உள்ளே நுழைந்தார்.

''ஏண்டா, நீ இன்னும் போலியா, அன்னகாமு?''

''இதோ, போயிடறேனுங்க.''

''என்ன ஜோலி உனக்கு இங்கே இத்தனை நேரம் வரை?'' என்று அவர் வியப்பு மேலிட விசாரித்தார். லக்ஷ்மம்மா அவருக்குப் பதில் சொன்னாள்-''எல்லாம் உங்க விஷயம்தான்.''

அவர் முகத்தில் ஒரு முறுவல் தோன்றிப் பரவி மறைந்தது. கோட்டு, தலைப்பாகையைக் கழற்றி அவற்றுக்கான முளைகளில் மாட்டினார்.

''நல்ல அவஸ்தை இது! இங்கே இவளானு உசிரை வாங்கறா. அங்கே ஆபீசிலே உங்க உபத்திரவம் தாங்கலே'' என்று அன்னகாமுவைப் பார்த்துச் சொன்னார் சென்னகேசவலு.

''ஆமாங்க, பின்னே என்ன? மூவாயிரம் நாலாயிரம் வாங்கற சிப் என்ஜினீயர் நடராஜய்யரெல்லாம் எக்ஸ்டென்ஷன் கேட்டு மனுப் போடறாங்க. எசமானுக்கு என்னங்க வந்தது கௌரவக் குறைச்சல்?''

இப்படிக் கேட்ட அன்னகாமுவை, லக்ஷ்மம்மா பாராட்டினாள். ''அப்பிடிக் கேளு, அன்னகாமு.''

''என்னடா பேச்சிது? நடராஜய்யர் கேட்டா, அது சரின்னு நான் சொன்னேனா?'' என்று அவர் பொருமினார்.

''அப்பிடி இல்லீங்க. நம்ம கம்பெனி சட்டத்திலே அறுபது வயசு மட்டும் வச்சுக்கறேன்னு சொல்றாங்க. குடும்ப நிலைமையைச் சொல்லி, எக்ஸ்டென்ஷன் வேணுமின்னு கேட்டு மனுப் போட்டாத் தந்துடறாங்க.''

அவருக்கு மீசை துடித்தது. ''ஆமாண்டா, பெரிய பேச்சு இது! அவன் வாங்கினான், இவன் வாங்கினான்னுட்டு! இப்பிடியே வயசு ஆனவங்க ஒவ்வொருத்தனும் வேலையிலியே ஒட்டிக்கிட்டே இருந்தா, தேசம் ரொம்ப உருப்பட்டுடும்! புதுசா வேலை தேடற சிறு பசங்களுக்கு வேலை அப்புறம் எப்பிடிக் கிடைக்கும்?'' என்று அவர் முணுமுணுத்தார். அன்னகாமுவும் தலையைச் சொறிந்து கொண்டே போய் விட்டான்.

இரண்டு நாட்கள் கழித்து நடந்த டைரக்டர்கள் கூட்டத்தின்போது, சக சிப்பந்திகள் அவர் கழுத்தைப் பிடித்து உள்ளே தள்ளி விட்டார்கள். அடுத்து 'என் வேலை நீடிப்புப்பற்றி டைரக்டர்களை நான் கண்டு பேச விரும்புவதால், வரும் டைரக்டர் கூட்டத்தில் அதற்கொரு வாய்ப்புத் தருமாறு வேண்டுகிறேன்' என்று அவர்கள் தட்டெழுத்தில் தயார் செய்து கொணர்ந்து நீட்டிய வாசகத்தின் அடியில் கையெழுத்து இட்டதன் பலனாக இப்போது அவர் உள்ளே செல்ல வேண்டி வந்தது.

''சென்ன கேசவலுகாரு, விடாகிர் வராசான்லை. ஆமாம்!'' என்ற வார்த்தையும் கண் சிமிட்டலுமாக அவரை உள்ளே தள்ளி விடக் கதவும் தானே சாத்திக் கொண்டது. அந்த நாட்களில் சாந்திமுகூர்த்த அறைக்குள் தம்பதியை அனுப்பிவிட்டு, வெளியே நிற்கும் நடுத்தர வயதுப் பெண்டிர் போல, நண்பர் பட்டாளம் வெளியில் காத்து நின்றது.

உள்ளே சென்றவர் தமக்கு உரிய ஆசனத்தில் அமர்ந்தார். ''சொல்லுங்கள், நீங்கள் சொல்ல வேண்டியதை யெல்லாம்'' என்று ஆங்கிலத்தில் கம்பெனியின் இயக்குநர் ஒருவர் அவருக்கு எடுத்துக் கொடுத்தார்.

சென்னகேசவலு தொடங்கினார்:

''நாம் — அதாவது வயசிலே மூத்தவங்க, பெரியவங்க ஒரே ஒரு சின்னத் தொண்டு செய்யலாம். அதுவே பெரிய கைங்கரியம். நம்ம நாட்டிலே இப்ப இருக்கிற வேலையில்லாத் திண்டாட்டம் ஒழியணுமின்னா, காலா காலத்திலே வயசானவங்க ஒதுங்கிக்கிட்டா நல்லது. புள்ளே படிக்கோணும்; இல்லாட்டிப் பொம்பளைப் பசங்களைக் கட்டிக் கொடுக்கோணும் — இப்பிடி எதினாச்சும் சொல்லிக்கிட்டு அட்டை மாதிரி வேலையிலே ஒட்டிக்கிடாமெ, மரியாதையா விலகிப் போயிடணும். கடேசிக் காலத்திலேயாச்சும், போற வழிக்கும் நல்லது — ராமா கிருஷ்ணான்னு சொல்லிக்கிட்டு விட்டோட இருக்கக் கூடாதா, சொல்லுங்க. உசிர் போறவரை, காசுக்காக மாரடிக்கோணுங்களா? வீட்டுலே பேரன் — பேத்தி குழந்தைங்களோடே விளையாடிக்கிட்டு ஆனந்தமா இருக்கலாமுங்களே.'' சென்னகேசவலு உணர்ச்சிவயப்பட்டுப் பேசினார். எதிரே இருந்தவர் எவருமே பேசவில்லை.

''நான் வரேங்க'' என்று கும்பிட்டுவிட்டு எழுந்தார். நேரே தமது இருக்கையில் சென்று, 'தொப்'பென்று அமர்ந்தார். முகமெல்லாம் வேர்வை துளித்திருந்ததைத் துடைத்து விட்டுக் கொண்டார். ''என்ன, ஐயா சொல்லிட்டு வந்தீர்?'' என்று அவரை நண்பர்கள் சூழ்ந்து கொண்டனர்.

அவருக்கு அவர்கள் பிடுங்கல் எரிச்சலாக இருந்தது. ''நான் வேலையிலே இருந்தாப் போதுமா? என் மகனுக்கும் அவனை மாதிரியான சிறு பசங்களுக்கும் வேலை கிடைக்க வேணுமா? வயசானவங்க ஒதுங்கி, வழி பண்ணிக் கொடுக்க வேணும்?''

''இதைத்தான் அங்கேயும் போய்ச் சொன்னீரா?'' என்று ஒருவர் அவரைக் கடிந்து கொள்ளும் குரலில் கேட்டார். அதே தருணம், சிப் என்ஜினீயர் நடராஜய்யர் உள்ளே போய் விட்டுப் பேசி முடித்தபின் 'ஹீஹீ'யென்ற அசட்டுச்சிரிப்புடன் வெளியே வந்தார். சேவகன் அன்னகாமு அவரிடம் ஒரு கார்டை நீட்டினான். ''சார், தபால் ஒண்ணு வந்திருக்குது உங்க பையன் பேருக்கு. பப்ளிக் சர்வீஸ் கமிஷன் முத்திரை போட்டிருக்குது. இந்தாங்க'' என்றான்.

அது ஒரு 'இல்லை'க் கடிதம்.

''இந்தாங்க, நம்ம வேங்கடேசலு ஐயாவுக்கு ஒரு கவர் வந்திருக்குங்க தபால்லே. சர்வீஸ் கமிஷன்லேர்ந்து உத்தரவு போல இருக்குதுங்க எசமான்!'' என்று கூறி அன்னகாமு தந்த தபால் உறையைப் பிரித்த சென்னகேசவலு நண்பர்களிடம் கடிதத்தைப் பெருமிதத்தோடு ''இப்ப என்ன ஐயா சொல்றீர்?'' எனக் காட்டிக் கொண்டார்.

ஆதவன் சாய்ந்து நிலவின் மாதவம் தொடங்கும்போதெல்லாம் கமலநாதனுடைய இதயத்திலே கலகலத்த சிரிப்பொலி, அதிர்ஷ்டதேவதை மீட்டும் யாழொலியாய்க் கேட்கும்! இந்தச் சில நாட்களாக அந்த இசையில் ஏன்தான் சிறு அபசுரம் கேட்கிறதோ? அது அபசுரம்தானா? இல்லை பாஷாங்க ராகமா?

''அண்ணா....! அண்....ணா!''

கணீர் என்று குரல் கொடுத்த வண்ணம் அங்கயற்கண்ணி உள்ளே நுழைந்தாள்... அவளைக் கண்டதும் அலை மோதும் நெஞ்சத்தைச் சற்றே அமைதிக்கு அழைத்து நிமிர்ந்து நோக்கினான் கமலநாதன். ''என்னம்மா, அங்கயற்கண்ணி?''

''அண்ணா! அத்தை கோயிலுக்குப் போறாங்க. இன்னிக்கு முருகனுக்குச் சந்தனாபிஷேகமாம். நானும் அத்தைகூடப் போயிட்டு வரட்டுமா?''

''போயிட்டு வாம்மா!''

கள்ளமற்ற புள்ளிமான் ஒன்று துள்ளி ஓடுவது போலச் சென்ற அங்கயற்கண்ணியைக் காணும்தோறும், கமலநாதனுடைய இதயத்தில் மதுரைக் கோயிலேயே கட்டி முடித்தது போன்ற ஒரு புனித உணர்வு முகிழ்க்கும்.

நாள் காட்டியை நோக்கினான். ''இன்னும் இரண்டுமாதங்களில் அவன் வந்துவிடுவான்!'' என்று அவன் வாய் முணகிக் கொண்டது.

அரை மணி நேர அமைதிக்குப் பிறகு...

மெட்டியின் கிணுங் கிணுங்கென்ற ஓசை...

மீண்டும் அதே போராட்டத்தின் ஒரு புதிய அத்தியாயம் தொடங்கப் போகிறது! அமைதி தேடுபவன் போலக் கண்களை மூடிக் கொண்டான் கமலநாதன்.

அருகே வந்து நின்ற அஞ்சுகம், கணவனின் நிலை கண்டு கண்களை உருட்டிக் கொண்டாள்.

''என்னங்க .... உங்களைத்தான்!''

குரலில் ஒரு வேகம்; வெடிப்பின் ஒலிச் சீற்றம்.

''ம்..... என்ன அஞ்சுகம்?''

''தயவு செய்து இப்பவாவது உண்மையைச் சொல்லுங்கள்! அங்கயற்கண்ணி உங்க கூடப் பிறந்த தங்கைதானா?''

''இது என்ன பைத்தியக்காரத்தனமான சந்தேகம்? நான் அவள்மேலே வைச்சிருக்கிற பாசம் உனக்குப் புரிபடலையா?''

''எல்லாம் புரிபட்டுத்தான் கேக்கறேன்.''

''எனக்கும் தெரியும். போன வாரம் ஒரு கல்யாணத்துக்காக நீ அத்தையோட திண்டிவனத்துக்குப் போய்த் திரும்பினதிலிருந்து அதிகமாச் சந்தேகப்பட ஆரம்பிச்சுட்டே! எனக்கு ஒரு தங்கை இருக்கிறதும் இல்லாததும் உறவுக்காரங்களுக்குத் தெரிந்திருக்கணும் என்கிற அவசியமில்லையே?''

''இது முழுப் பூசனிக்காயைச் சோற்றுக்குள் மறைக்கிற பேச்சுமாதிரி இருக்கு. நீங்கதான் உங்கம்மாவுக்கு ஒரே புள்ளையாமே!''

''யாரோ தப்பாச் சொல்லியிருக்காங்க. போய் வேலையைப் பாரு!''

''என்னம்மோ? நீங்களும், அவளும் அண்ணன் தங்கைன்னு நாடகம் ஆடறது ஊர் சிரிக்க முடிந்திடக் கூடாது.''

நெற்றிப் பொட்டில் தாக்கிய துடிப்புடன் எழுந்தான் கமலநாதன்.

விக்கலும் விசும்பலுமாக வெளியேறினாள் அஞ்சுகம். சொல்லப் போனால் அஞ்சுகத்தின் உணர்ச்சியிலும் குறை காண முடியாது. மெட்டி தரித்து, மேனி சுவைத்து என்று அந்த வீட்டில் புகுந்தாளோ, அன்று முதற்கொண்டே ஒரு புரிபடாத விந்தையைச் சந்தித்தாள். எதற்கெடுத்தாலும் தங்கை, எங்கு சென்றாலும் தங்கையா? போகட்டும்; ஊர் பேர் தெரியாத ஒருத்தி இவள், என்று



பட்டதும் படாததுமாகக் கேள்விப்பட்டும் எப்படித்தான் மனத்தை அடக்கிக் கொள்ள முடியும்? பெருமூச்சு கிளம்பத்தானே செய்யும்? அமைதியாக எரிந்து கொண்டிருந்த தீபச்சுடர் அலைமோதத் தொடங்கியது.

மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல் இருந்த அத்தையம்மாளுக்கு எல்லாம் தெரியும். தெரிந்து என்ன செய்ய முடியும்? கமலநாதனுடைய மனிதாபிமானத்துக்கே சிகரம் வைத்தாற்போல் நிகழும் இந்த நிகழ்ச்சியை அஞ்சுகத்துக்குப் புரிய வைப்பதன் மூலம் அங்கயற்கண்ணிக்கும் கலக்கம் ஏற்பட்டு விடக் கூடாதல்லவா? புதிரான பெண்ணின் போக்கு புயலாகவும் முடியும் என்கிறார்களே!

எப்படியோ அங்கயற்கண்ணியை ஒரு நல்ல வரனுகப் பார்த்துக் கைப்பிடித்துக் கொடுத்துவிட்ட பிறகு நேருவது நேரட்டுமே என்று நெஞ்சைப் பிடித்துக் கொண்டிருந்தாள். விழுப்புரத்தில் ஒரு |மாப்பிள்ளைகூட ஏற்பாடாகி விட்டது. எதற்கும் 'அவன்' விடுதலையாகி வரட்டும் என்கிருனே கமலநாதன்!

ஃ |ஃ ஃ

இருளை இமை மிமையாகப் பிரிக்கும் சின்னஞ்சிறு விளக்கின் வாழ்வெனும் கதையைப் புரட்டிக்கொண்டிருந்த நேரம் அது. முடிகின்ற பயணம்தான் வாழ்க்கை என்ருலும் அது எல்லோருக்கும் இன்பமாகவும், எளிதாகவும் முடிந்து விடுகிறதா, என்ன?

தங்கராசுவின் வாழ்க்கையையும், அவன் கொண்ட இலட்சியத்தையும், அடைந்த தண்டனையையும் நினைத்தால் எந்த நெஞ்சுதான் வியர்க்காது? எங்கோ இருக்கும் வல்லம்படுகையிலிருந்து வந்தவன், இங்கே இருக்கும் மத்திய சிறையிலே வாடுகிருனே!

இலட்சியத்தைச் சுமையாகத் தாங்கிக் கொண்டு வந்த தங்கராசுக்கு, நட்பாகிய கைவிளக்கேந்தி, வழி காட்டத்தான் செய்தான் கமலநாதன். விதியெனும் சக்கர வட்டம்தானே என்னமோ, புதுப்பேட்டை





கள்வனின் தங்கை

கோவி. மணிசேகரன்

பொன்னுசாமி உருவில் வட்டமிடத் தொடங்கியது. என்ன செய்ய? இப்போது சிறையில் கண்ணீர் வடிக்கிறான். கூடா நட்பின் பயனை அனுபவித்துத்தானே தீரவேண்டும்? காலம் கடந்த ஞானோதயம் கடைவழிக்கு வாராதே!

வல்லம்படுகையி லிருக்கும் கிழட்டுத் தாயைக் காக்கவும், குருட்டுத் தங்கைக்கு ஒளி நிறைந்த வழி காட்டவும் சென்னைக்கு வந்தான் தங்கராசு. எப்படியும் கையில் கொஞ்சம் பணத்தைச் சேர்த்து, தங்கையின் கண்களைக் குணப்படுத்த முயன்ற அவனுடைய இலட்சியம் வரவேற்கத்தக்கது தான்! முதுகு புண்ணாக மூட்டை சுமந்தான்; கைவலிக்க வண்டியும் இழுத்தான். பயன்? சோற்றுப் புரட்சியோடு சொப்பனங்கள் நின்றுவிட்டன! பொன்னுசாமியின் குறுக்கு வழி, சிந்தனையைக் கந்தலாக்கியது. கொஞ்சம் முயற்சி செய்தால் வசமாக எங்காவது ஆயிரம் ரூபாய் கிடைக்காதா?

எத்தனையோ எடுத்துச் சொல்லியாகிவிட்டது. மெல்ல மெல்ல நட்பும் நழுவத் தொடங்கியது. பொன்னுசாமி விரித்த ம்ன் வலையை நம்பி நட்பாகிய பொன் வலையை உதறுகிறானே இந்தப் பைத்தியக்காரன்! செய்த உதவிகளையெல்லாம் ஒரு கணத்தில் மறந்து விட்டானே! இரண்டாண்டு சிறைவாசத்தை ஏற்ற பிறகு கண்ணீர் வடிக்கிறான்! கண்ணீரால் சிறைக் கதவுகள் திறந்துவிடுமா, என்ன?

இரண்டாண்டுகள் கழித்துத்தான் அந்தப் பாழும் சிறைக் கதவுகள் திறந்தன! தங்கராசு விடுதலையானான்.

தமிழக அரசு போக்குவரத்து இல்லம் வரை மெல்ல நடந்து வந்தான். நேரே சிந்தாதிரிப் பேட்டைக்குச் சென்று நண்பன் கமலநாதனைக் காணலாமா? எந்த முகத்தை வைத்துக் கொண்டு அவனைப் போய்க் காண்பது? தொட்டுத் தொட்டுப் புத்தி சொன்ன காலத்திலெல்லாம், அவனை விட்டு விட்டு விலகிச் சென்றோமே! இன்று சிறை சென்று திரும்பிய ஒரு கைதியை அவன் நண்பனாக ஏற்பானா?

நேப்பியர் பூங்கா வழியே தளர்நடை போட்ட கால்கள், திடுமென்று கம்பமாய் நிற்பானேன்? கண்கள் மருள மருள விழிப்பானேன்?

வாயிலிருந்து, ''கமல்!'' என்ற சொல் காற்றாய் — பெருமூச்சாய் வெளிவந்தது! ஆமாம்; தொலைவினில் கமலநாதன், தன்னுடைய வாடகைக் காரைப் பழுது பார்த்துக் கொண்டிருந்தான்.

நெஞ்சில் திடத்தையும், நினைவில் துணிவையும் வரவழைத்துக் கொண்டு அருகில் சென்று நின்றான் தங்கராசு.

திறந்துவிட்ட கதவில் கழற்றிய சட்டையை மாட்டிவிட்டு, காரின் முன்புறத்தைத் திறந்து 'ஆக்ஸிலேட்டரை'ப் பழுது பார்த்துக் கொண்டிருந்த கமலநாதன், பின்னால் வந்து நின்ற தங்கராசுவைக் கவனிக்கவில்லை.

''கமல்.......!''

''யார்?'' — தலையை வெளியே இழுத்துக் திரும்பிப் பார்த்தான் கமலநாதன். உள்ளுறைப் பாசம் மருவிய வேதனை கொந்தளித்தாலும், வெளியே அலட்சியம் மருவிய வெறுப்பு வெளிப்பட்டது. ''யார் நீ?''

''என்னைத் தெரியலையா கமல்?''

''என்ன விளையாடுறாய்?''

''நான்தான் உன் சிநேகிதன் தங்கராசு!''

''என் சிநேகிதன் தங்கராசுவா? அவன் செத்துப் போய் இரண்டு வருஷமாவுது. நீ யாரோ, போ, போ!''

தங்கராசுவின் கண்களில் நீர் திரை விட்டது.

''மெய்தான் கமல், மெய்தான். அந்தப் பாவி செத்துத் தொலைஞ்சிட்டான். இப்போ நிக்கிறது புதிய தங்கராசு. அவன் உன் சிநேகிதனாக இருக்கத் தகுதி இல்லாதவன். 'மெட்ராஸ்' வாழ்க்கை போதும்னு ஊரைப் பார்க்கப் போகிறான். ஆனா.... ஒரே ஒரு ஆசை! தங்கச்சிக்குக் கண்ணை வாங்கிக்கிட்டுப் போகலாம்னு வந்தேன். முடியலே. இப்போ, கைதிங்கிற பட்டத்தைத்தான் வாங்கிக்கிட்டுப் போறேன். அதோட ஒரு புதுப் புடவை; ஜாக்கெட்டும் வாங்கிக்கிட்டுப் போகலாமென்னுதான்.''

''அதுக்கு என்னை என்ன செய்யச் சொல்றே?''

''ஒரு பதினைந்து ரூபாய் பணம் வேணும். எங்கிட்டே பணமிருக்கு. அது ஜெயில் பணம். போயும், போயும் இந்தப் பணத்திலேயா அவளுக்குத் துணி வாங்கிட்டுப் போறது?''

தங்கராசு தன்னை ஓர் ஆண் என்பதையே மறந்து — நடுத்தெரு என்பதை உணராது பெண் பிள்ளைபோல் அழத் தொடங்கினான்.

தங்கராசுவின் இந்த மாற்றத்தை வெறும் நடிப்பென்றே கருதினான் கமலநாதன். ஏதோ சில கால ஜீவனத்துக்காகப் பணத்தைத் திரட்டிக் கொண்டு, மீண்டும் திருடத் தொடங்க உத்தேசித்திருக்கிறான் என்றே நினைத்தான். ஆகவே, ஒரு சல்லிக் காசும் உதவ முடியாது என்று இதயத்தை இறுகப் பற்றிக் கொண்டு கூறி விட்டான்.

அதற்குமேல் அவனைப் பொருட்படுத்தாதவனாய்க் காரைப் பழுது பார்ப்பதில் முனைந்தான் கமல். காரின் கதவில் மாட்டியிருந்த சட்டையின் மீது தங்கராசுவின் கண்கள் சென்றன. பையில் 'மணிபர்ஸ்' ''இதோ, நான் இருக்கிறேன்!'' என்று கூறுவதுபோல் தலைநீட்டிக் கொண்டிருந்தது. எப்படியும் அதில் பதினைந்து ரூபாய்க்குக் குறையாமல் இருக்கும் என்று திடமாக நம்பிய தங்கராசு, ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து, அந்த 'மணிபர்ஸை' எடுத்துக் கொண்டு ஓட்டம் பிடித்தான்.

என்ன காரியம் செய்து விட்டான் தங்கராசு! வாடகைக் காரின் முதலாளிக்குச் செலுத்த வேண்டிய நேற்றைய பணமல்லவா அதில் இருக்கிறது? ஒன்றா, இரண்டா? எழுபது ரூபாயாயிற்றே!

பின்தொடர்ந்து ஓடிக் கொண்டேயிருந்தான் கமலநாதன்.

மனிதரோடு விளையாடுவதற்கென்றே காலம் இருக்க, அதனோடு மனிதன் விளையாடத் தொடங்கினால் சோதனைதானே?

என்ன செய்வது? எல்லாம் விதிப் பயன்! போலீஸ்காரர்களுடைய கரங்களிலே தங்கராசு புழுவாகத் துடித்தான். கையிலே 'மணிபர்ஸ்' !

''டேய், கமல்! திருந்தி வந்த என்னை, தாயையும், தங்கச்சியையும் பார்க்க நினைத்த என்னை, போலீஸிலே மாட்ட வச்சிட்டே! அடப் பாவி கமல்! ஒழுங்காப் பணம் கொடுத்திருந்தால் நான் ஏன்டா இந்தக் கதி அநுபவிக்கப் போகிறேன்? முதல்லே என்னை ஜெயிலுக்கு அழைச்சுக்கிட்டுப் போனானே பொன்னுசாமி அவன் எவ்வளவோ மேல்! இப்போ நீ அனுப்பி வைக்கிறதுதான் கொடுமைடா, பெரிய கொடுமைடா; பெரிய கொடுமை! அவன் அழைச்சுக்கிட்டுப் போனான்; நீ அனுப்பி வைக்கிறே! அவன் துணையாக வந்தான்! நீ தூர நிக்கிறே! டேய், கமலநாதா! உன்னை நான் பார்த்துக்கறேன்டா, பார்த்துக்கறேன்.''

ஒளியைத் தேடி அலைகிற வாழ்வைப் போன்ற அலமரும் அந்திப் போது. பனிச் சென்று பரவியது மின்சார விளக்கின் வெளிச்சம். கரங்களைக் கூப்பிக் கண்களில் ஒற்றிக் கொண்டான் கமலநாதன். ஒளியே அவனைத் தேடி வந்த அதிர்ஷ்ட வாழ்வல்லவா, அவனுடைய வாழ்வு ! எல்லாம் மாய வித்தை போல் மூன்று மாதங்களுக்குமுன் நடந்து முடிந்தவை. தாய் வழிச் சொத்து ஒன்று அவனைத் தேடிவரவேண்டும் என்றிருக்கிறதே! அந்த விதவைத் தாயார் எத்தனையோ ஆண்டுகளுக்குமுன், தன் பயணத்தை முடித்துக் கொண்டான். ஆதாரமாக நின்றதும், நிற்பதும் தந்தையுடன் பிறந்த அத்தை ஒருத்திதான் !

சொத்துக்களை விற்றுக் கிரயமாக்கினான். பல்லாவரம் பகுதியில் மலிவான விலையில் உயர்தரமான வீடு ஒன்று வாங்கினான். மிகுந்த பணத்துக்குச் சொந்தத்தில் இரண்டு வாடகைக் காரை வாங்கிக் கொண்டான். வாழ்வில் கஷ்டங்களை அநுபவித்தவனாயிற்றே! புத்திசாலித்தனமான ஏற்பாட்டில் அவனுடைய சிந்தை சென்றதில் விந்தை என்ன ?

வீட்டின் கீழ்ப் பகுதியை வாடகைக்கு விட்டு விட்டான். அந்தப் பகுதியில் போலீஸ் ஸ்டேஷனைச் சார்ந்த சப்-இன்ஸ்பெக்டர் ஒருவர் குடியிருந்தார். வாடகை ஒழுங்காக வந்தது. ஒரு வாடகைக் காரை நம்பிக்கையான ஒருவனிடம் ஒப்படைத்துவிட்டு, இன்னொன்றைத் தானே ஏற்று நடத்தினான். கடனற்ற தின வருமானம் பெருகிக் கொண்டே வந்தது.

இந்த நிலையில்தான் அத்தையம்மாள், தன்னைச் சார்ந்த உறவில் ஒரு பெண்ணை யெடுத்துக் கல்யாணம் செய்ய முனைந்தாள். பண்ணுருட்டியில் பெண் அமைந்தது. கமலநாதன் சென்று பார்த்தான். அவனுக்கு அஞ்சுகம் நன்றாகவே பிடித்திருந்தாள்.

எல்லாவற்றையும் முடித்துக் கொண்டு சென்னைக்குத் திரும்பும் போதுதான், பக்கத்தில் இருக்கும் வல்லம்படுகை அவனுடைய நினைவில் பனித்திட்டது. நட்பின் பாசம் இதயத்தே கழித்துத் தலைதூக்கியது.

வல்லம்படுகையை அடைந்த கமலநாதன் விசாரித்துப் பார்த்தான். அந்தக் கிழத் தாயும், குருட்டுப் பெண்ணும் சிதம்பரத்துக்கு அண்மையில் இருக்கும் புவனகிரிக்குச் சென்று விட்டதாகக் கேள்விப்பட்டான். கொஞ்சமும் மனம் சளைக்காமல் புவனகிரி நோக்கிப் பயணமானான் கமலநாதன்.

ஆனால் அங்கே அவனை இறந்து கொண்டிருக்கும் தங்கராசுவின் கிழத் தாய்தான் வரவேற்றாள். அவளுக்கு மகனாய், குருட்டுப் பெண்ணுக்குத் தங்கையாகத் தன்னை ஆக்கிக் கொண்டு, அன்று மாலையே, அந்தக் கிழத் தாயாருக்கு ஈமக்கிரியைகளைச் செய்து முடித்தான். மறு நாள் அந்தத் தாய் வயிற்றுக்குப் பாலூற்றினான். பிறகு அங்கயற்கண்ணியுடன் சென்னைக்குப் புறப்பட்டான்.

கமலநாதனுடைய இந்தச் செய்கை முதலில் அத்தையம்மாளுக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை. போகப் போக அவனுடைய அந்த மனிதாபிமானச் செயலை ஆதரிக்கவே செய்தான். ''அத்தை! அன்னிக்கு நான் மட்டும் ஒரு பதினைந்து ரூபாய் கொடுத்திருந்தால், இரண்டு ஜீவன்களுக்குரிய ஒரு தெய்வத் தாய் மாண்டிருக்க மாட்டாள் !'' என்று கமலநாதன் அடிக்கடி கூறும்போதெல்லாம், அத்தையின் கண்கள் பனிக்கத் தொடங்கும். உண்மைதானே !

மருத்துவ நிலையத்தில் அங்கயற்கண்ணியை டாக்டர்கள் பரிசோதித்துக் கொண்டிருந்தனர். பெரியம்மையால் பறிபோன கண்களானாலும் குணப்படுத்த முடியும் என்று டாக்டர்கள் நம்பிக்கை தெரிவித்தனர். கமலநாதன் நெஞ்சுக்கு ஓர் ஆறுதல். இது விஷயத்தில் ரூபாய் ஆயிரமானாலும் அவன் செலவழிக்கத் தயாராக இருந்தான். அவளைத் தன் சொந்தத் தங்கையாகவே பாவித்து விட்டான்.

அங்கயற்கண்ணியின் கண்களில் ஒளி நிறைந்தது. கமலநாதன் இதயத்தில் பால் சுரந்தது. அண்ணனைக் கண்ணாரக் காணக் காண ஆனந்தப் பெருக்கால் கூத்தாடினாள் அங்கயற்கண்ணி. அடடா ! அவள்தான் இப்போது எவ்வளவு கொள்ளையழகாக இருக்கிறாள்! கமலநாதன் பூரிப்புக்கோர் எல்லையுமுண்டோ ?

மங்கலத் திருநாளில் கமலநாதனுக்கும், அஞ்சுகத்துக்கும் சென்னையில் திருமணம் நடந்தது. காலம் உருண்டது...

அங்கயற்கண்ணிக்காக விழுப்புரத்தில் ஏற்பாடாகியிருந்த வரன் குதிர்ந்து விட்டது. அவர்கள் கேட்ட நகைநட்டுக்களைப் போடுவதாகவும் ஒப்புக் கொண்டான் கமலநாதன். எல்லாம் அத்தையம்மாள் ஏற்பாடுதான் ! குடும்பத்தில் அமைதி நிலவ வேண்டுமே!

வாடகைக் கார்களை 'ஷெட்'டில் விட்டு விட்டு, மாடி ஏறி வந்தான் கமலநாதன்.

அன்று வெகுவாகத் தன்னை அலங்கரித்துக் கொண்டிருந்தாள் அங்கயற்கண்ணி. மனக் கவலையுடன் வந்து அமர்ந்த அண்ணனை நாடி வந்தாள். ''ஏன் அண்ணா, ஒரு மாதிரியா இருக்கீங்க ?''

''ஒண்ணுமில்லேம்மா, எல்லாம் உன் கல்யாணத்தைப் பற்றிய யோசனைதான்!''

''அது சரி, அண்ணு! ரொம்ப நாளா உங்களைக் கேட்கணும்னு...உங்க பேருதான் தங்கராகவாச்சே! கமலநாதன்னு ஏன் வைச்சுக்கணும் ?''

''அதுவாம்மா! மூட்டை தூக்கினப்போ தங்கராகன்னு பேரு! இப்போ கொஞ்சம் பணம் சம்பாதிச்சுட்டேன். பழைய தங்கராகவான்னு யாரும் சொல்லக் கூடாதல்லவா ? அதனுல்தான் !''

''சரியண்ணு, சாப்பிட வாங்க!''

''அப்புறம் வர்றேன். நீ போய்ச் சாப்பிடும்மா !''

முறுவலித்த முகத்தினளாய் எழுந்து நடந்தாள் அங்கயற்கண்ணி.

உண்டு முடித்து அனைவரும் உறக்கத்தில் ஆழ்ந்து கிடந்தனர். அங்கயற்கண்ணி மட்டும் ஊமை உறக்கத்துடன் ஏதேதோ ரகசியம் பேசிக் கொண்டிருந்தாள்.

தெருக்கோடியில் நாய் ஒன்று குரைக்கும் சத்தம் கேட்டது. அமாவாசைக்கு இன்னும் மூன்று தினங்களே இருந்ததால் இருளரக்கியின் தாண்டவம் உச்ச நிலையில் இருந்தது.

வாழ்வின் அந்திம யாத்திரையில் நடைபயின்று கொண்டிருந்த உருவம் ஒன்று, பழி தீர்க்கும் உணர்ச்சியுடன் வந்து கொண்டிருந்தது. ஆமாம்; தங்கராகதான் வந்து கொண்டிருந்தான். அவன் சென்ற வாரமே விடுதலையாகி விட்டான். முதலில் எந்தவித உணர்ச்சிக்கும் ஆளாகாமல் நேரே வல்லம்படுகை நோக்கிச் சென்றான். பின்னர் புவனகிரிக்கு வந்தான். எவனோ ஒருவன் ஏமாற்றி, தங்கையைப் பறித்துக் கொண்டு சென்றுவிட்டான் என்ற செய்தி தெரியவந்தபோதுதான், அவனுடைய நெஞ்சிலே நெருப்பு மூளத் தொடங்கியது. அந்த நெருப்பால் இந்த உலகைச் சுட்டெரிக்க முடியாவிட்டாலும், தான் இந்த நிலைக்கு ஆளான அல்லது ஆளாக்கிய கமலநாதனைச் சுட்டெரித்துவிடலாம் அல்லவா ? அன்றுமட்டும் அவன் ஒரு பதினைந்து ரூபாய் கொடுத்திருந்தால் இன்று இந்த நிலை ஏன் வரப் போகிறது?

சிந்தாதிரிப்பேட்டையில் கமலநாதனைக் கண்டான்! அவன் இப்போது சொந்த வீட்டுக்காரன். வயிறு மேலும் பற்றி எரிந்தது. அன்றிரவு அவனை எப்படியும் தீர்த்துவிடுவது என்ற முடிவுடன் நடந்து வந்தான்.

தோட்டப்புறமாக இருந்த சுவரைப் பிடித்துக் கொண்டு ஏறி, மாடியை அடைந்தான். முதலாவதாக இருந்த அறையைத் தொட்டதும் திறந்து கொண்டது. கட்டிலில் யாரோ படுத்திருப்பது தெரிந்தது.

இடுப்பில் இருந்த கத்தியை உருவிக் கொண்டான் தங்கராக. படுத்திருப்பது கமலநாதனுகத்தான் இருக்க முடியும்! இருட்டில் அவனைக் கொல்வானேன்? சாகுமுன் தன்னைக் கொன்றவன் தங்கராக என்ற உண்மை அவனுக்கும் தெரிய வேண்டாமா?

பித்தானை அழுத்தினுன். குபீரென்று பிரகாசம் பரவியது. ஊமைத் தூக்கத்திலிருந்த அங்கயற்கண்ணி, போர்வையை உதறிவிட்டு மருட்சியுடன் எழுந்தாள். எதிரே, ஒருவன் கத்தியுடன் நிற்கக் கண்டு, 'வீல்' என்று கதறி விட்டாள். அத்துடன் ''ஐயோ, திருடன், திருடன்!'' என்றும் கூச்சலிட்டு விட்டாள்.

தங்கராக கல்லாய்ச் சமைந்து அப்படியே நின்று விட்டான்! தங்கை அங்கயற்கண்ணி! ஒளி நிறைந்த கண்களுடன் மருள மருள விழிக்கிறுளே! ஆகா! எத்தனை அழகு! கொள்ளை அழகு!

தன்னை ஒருவாறு திடப்படுத்திக் கொண்டு ஏதோ கேட்க வாயெடுத்தான். அதற்குள் அனைவரும் ஓடி வந்துவிட்டனர். கீழ்ப் பகுதியில் குடியிருந்த சப் — இன்ஸ்பெக்டர் துப்பாக்கி சகிதமாய் ஓடி வந்து விட்டார்.

திடுமென்று தங்கராக கலகலவென்று பெருத்த குரல் எழுப்பிச் சிரித்தான். அந்தச் சிரிப்பில் ஆவேசம் கலந்த ஆணவமோ, வெறுமை கலந்த சூனியமோ தென்படவில்லை. அதில் ஒருவித நிறைவின் கொக்கரிப்பு எதிரொலித்தது !

முதல் முறையாக அவனை சிறைக் கம்பிகளை எண்ணவிட்டான். இரண்டாம் முறையாக நண்பன் கமலநாதன் எண்ண வைத்தான். மூன்றும் முறையாக —

இலட்சியத்தின் சுமையாக நின்று ஆட்டிப் படைத்த அருமைத் தங்கை வழியனுப்பி வைக்கிறுள்! ஒருவனுடைய வாழ்க்கை இதைவிடத் துரதிர்ஷ்டமாக அமைய வேண்டியதில்லை. வெண்ணெய் திரண்டு வந்த போது அவனுகவே தாழியை உடைத்துவிட்டான்.

அங்கயற்கண்ணியின் திருமண ஏற்பாடுகள் துரிதமாக நடைபெற்றுக் கொண்டிருந்தன.

அழைப்பிதழுடன் மத்தியச் சிறைச்சாலை நோக்கி நடந்தான் கமலநாதன். அமைதியான அதே புன்முறுவலுடன் கமலநாதனை வரவேற்றான் தங்கராக. ஆனுல் கமலநாதன் விக்கி விக்கி அழத் தொடங்கி விட்டான்.

''அட பைத்தியமே! ஏன், அழறணும்? அழ வேண்டிய நானே சிரிச்சுக்கிட்டு இருக்கேனே ! ஏன் தெரியுமா ? இந்த உலகில் தெய்வத்துக்கு மேலான ஒரு சிநேகிதன் இருக்காங்கிறதுக்காகத்தான். அன்று ராத்திரி — அந்த ஒரு நொடிப்பிலே தான் எல்லாத்தையும் புரிஞ்சுகிட்டேண்டா!

''அக்ரமா முடிய வேண்டிய வாழ்க்கை தானே என் வாழ்க்கையும்? போகட்டும், கமல்! தங்கராகன்னு ஒருத்தன் 'இருக்காங்கிறதை எல்லாரும் மறந்துடுங்க! அங்கயற்கண்ணிக்கு உன்னைவிட ஓர் அண்ணன் எந்தப் பிறப்பிலேயும் கிடைக்க மாட்டானே !.... கேவலம் ஒரு கைதியின் தங்கை என்ற பழிச்சொல் அவளுக்கு வேண்டாம். ஒரு கௌரவமானவனின் — கண்ணியமானவனின் தங்கை என்கிற சிறப்பான பெருமை அவளுக்கு இருக்கட்டும். அதனுலே, நீயே அவளுக்கு அண்ணனு இருடா, கமல்! நீதான் அவளுடைய அண்ணன்!''

இத்தனை நேரம் நிமிர்ந்த நெஞ்சுடன் பேசி வந்த தங்கராக, இந்தக் கட்டத்தில் ஏன்தான் விசும்பி அழத் தொடங்கினுனே?

அது அவனுக்குத்தானே தெரியும்? அவனுக்கு மட்டும்தானு ?



வளரும்
உங்கள்
குழந்தைகளுக்கு

காமதேனு
வனஸ்பதி



வைடமின்கள்
A & D நிறைந்தது

'காமதேனு' சிறந்த சமையல் சாதனம்


மேட்டூர் கெமிகல் & இண்டஸ்ட்ரியல்
கார்ப்பொரேஷன் லிமிடெட்
மேட்டூர் அணை R.S. சேலம் ஜில்லா
மானேஜிங் ஏஜெண்ட்ஸ்:
சேஷசாயி பிரதர்ஸ் பிரைவேட் லிமிடெட்

Criterion-MC-1134

★ கார்த்திகை நினைவு

★ திக்விஜயம்

★ தமிழகத்தின் இழப்பு



ராஜாஜிக்குத் தொண்ணூறாண்டு பிறப்பதில் ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. என் வாழ்க்கையில் அவர் தொடர்பாக நடந்த ஓர் உண்மையான விஷயத்தை எழுத ஆவல் ஏற்பட்டு இதை எழுதுகிறேன்.

கவர்னர் ஜெனரல் பதவியிலிருந்து ஓய்வெடுத்துக் கொண்டிருந்தபோது அவர் வீட்டிலிருந்து மாலையில் உலாவுவதற்காகத் தினம் எங்கள் வீட்டை தாண்டிச் செல்வார். (63 பஸுல்லா ரோட்டில் நாங்கள் வசித்து வந்தோம்.) என் ஐந்து வயதான மகன் படு சுட்டி. அவர் யார் என்பது அவனுக்குத் தெரியாது. ஆனாலும் தினம் அவர் கையைப் பிடித்துக் கொண்டு கொஞ்ச தூரம் போய்விட்டு வருவான். ஒரு நாள் என் கணவர் குழந்தையின் கையைப் பிடித்து வருவது யார் என்று பார்த்த போது அவர் கண்களையே அவரால் நம்ப முடியாமல், "தங்களுடனா அவன் தினம் விளையாடுகிறான்?" என்று பயபக்தியுடன் பேசிவிட்டு, "இதுதான் என் வீடு. நாளை கார்த்திகை தீபம். மாலையில் தாங்கள் கட்டாயமாக வரவேண்டும்" என்று கேட்டுக் கொண்டார். மறு நாள் அவர் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம். அவரும் வந்தார். நானும் என் கணவரும் அவர் கால்களில் விழுந்து நமஸ்கரித்துவிட்டு, நான் வாங்கி வைத்திருந்த பல விதமான இனிப்புப் பண்டங்களையும் அத்துடன் பொரி உருண்டை, அப்பம் முதலியவைகளையும் வைத்தேன். ஆவி பறக்கும் காப்பியையும் வைத்து விட்டுச் சாப்பிடும்படி கேட்டுக் கொண்டேன். அவர் என்னிடம் இனிப்புக்களைக் காண்பித்து, "இவைகளின் பெயர்களைக் கிடுகிடுவென்று சொல்" என்றார். எனக்கு அவைகளின் பெயர்களில் சில தெரியாததால் சிரித்து விட்டேன். அவரும் சிரித்துக் கொண்டு, "சரி, நீ செய்த பொரி உருண்டையையும் அப்பத்தையும் மட்டும் நான் சாப்பிடுகிறேன்" என்று சொல்லிக் கொஞ்சம் சாப்பிட்டுவிட்டு ஆவி பறக்கும் காப்பியை மேல் துண்டினால் பிடித்துச் சாப்பிட்டார். ஒவ்வொரு கார்த்திகையின்போதும் அவர் வருவதுபோலத் தோன்றுகிறது; ஒவ்வொரு கார்த்திகையிலும் அவர் சொன்ன வார்த்தைகள் என் காதில் ஒலிக்கின்றன.

சென்னை — 17 பார்வதி நாகராஜன்

உலகத்தின் ஒரு பகுதியில் தமிழ் இலக்கியத்தின் சார்பில் விஜயம் செய்துவிட்டு வெற்றியுடன் திரும்பியிருக்கும் கல்கி துணை ஆசிரியருக்கு என் மகிழ்ச்சியை மனப்பூர்வமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

'சங்கம் வளர்த்த தமிழ்'க்கு மீண்டும் பெர்க்லி தமிழ்ச் சங்கத்தின் சார்பில் வளரக் கிடைத்திருக்கிற வாய்ப்பு உற்சாகம் அளிக்கிறது. 'எழுத்தாளர்கள்கூடப் பிழைத்துக் கொள்வார்கள் போலிருக்கிறதே' என்ற நம்பிக்கை ஏற்படுகிறது. அமெரிக்கப் பயணத்தின் மூலம் நல் வாய்ப்பையும், நம்பிக்கையையும் தேடிக் கொணர்ந்திருக்கிற கல்கி துணை ஆசிரியருக்கு நன்றி.

சென்னை — 18 வாசகன்

"**ச**பாஷ் ராமசாமி!" என்று ராஜாஜியால் பாராட்டப் பெற்றவர் ப. ரா. அப்படி அவர் செய்த காரியம் என்ன?

திருநெல்வேலி நகரசபை சேர்மனாகப் பணியாற்றியபோது, டவுனில் ஒரு பிரசவ ஆஸ்பத்திரி நிர்மாணித்தார். அதற்குப் பண வருவாய்க்குப் பொருட் காட்சி நடத்திக் கலையரங்கு ஏற்பாடு செய்து பொருள் ஈட்டினார். அந்த ஆஸ்பத்திரியைத் திறந்து வைக்க, அன்று இரண்டாவது தடவையாகச் சென்னை முதல் மந்திரியாகப் பதவி ஏற்றிருந்த ராஜாஜி விஜயம் செய்தார். ப. ரா.வின் உழைப்பைப் பார்த்து சபாஷ் கொடுத்தார்.



திருநெல்வேலி ஜில்லா புத்தனேரி கிராமத்தில் வைதிக குடும்பத்தில் பிறந்தவர் ப. ரா. அவர் 1930—32 போராட்டத்தை, திருநெல்வேலி ஜில்லா காங்கிரஸ் காரியதரிசியாக இருந்து பெரும் வெற்றியுடன் நடத்தி முடித்தார். பின்பு சென்னையில் நவயுகப் பிரசுராலயத்தில் தொண்டாற்றினார். 1936-41 வருஷங்கள் அரசியலில் மிக வேகமான போராட்டச் சூழ்நிலை அமைந்த காலம். பல பிரச்னைகளைத் தெளிவாக ஆராய்ந்து எழுதிய எழுத்தாளர்களின் மிகச் சிறந்த நூல்களை நவயுகப் பிரசுராலயத்தில் வெளியிட்டார் ப. ரா. பின்பு நெல்லை வந்து நவயுகப் பிரசுராலயம் அமைத்துப் புஸ்தக விற்பனையில் திறமை காட்டினார். கடைசியாகப் புத்தரைப் பற்றி எழுதிய ப.ரா. 28—10—67ல் காலமானார். தமிழகம் ஒரு நல்ல தேச ஊழியரை இழந்து நிற்கிறது.

விட்டலபுரம் வேங்கடாச்சாரி

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Kilpauk, Madras-10


Managing Editor: T. S

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

இலங்கையில் 40 சதம்
தபால் செலவு தனி

ADDISON

ENGINEERS' CUTTING TOOLS



At the Tool works of Addison & Company we have just one object—to be precise and to build tools which are highest in accuracy, in quality and in length of effective service.

● TWIST DRILLS ● MILLING CUTTERS ● REAMERS ● INVOLUTE GEAR CUTTERS ● SLITTING SAWS ● GROUND THREAD TAPS ● CARBIDE TIPPED TOOLS ● TOOL HOLDER BITS.

ESTABLISHED 1873

ADDISON & COMPANY LIMITED, MADRAS-2.

(A Member of the Gauge and Tool Makers' Association, U. K.)

Distributors: J.N. Marshall & Co., Bombay - for Maharashtra Gujarat States, Bhopal, Dewas and Indore Districts of Madhya Pradesh. William Jacks & Co., Ltd., Calcutta, Delhi & Kanpur for Eastern and Northern India. Batliboi & Co., Private Ltd., for Madras, Andhra Pradesh & Kerala. Addison & Co., Ltd., Bangalore - for Mysore State.
Overseas Distributors in U. K., U. S. A., Canada, West Germany, Sweden, Belgium, Holland, Greece, Denmark, Italy, Australia & Newzealand.